Registered as a News Paper in Sri Lanka | දිනමුරසු වාරමලර් | பக்கம் 24 ரூபா 30.00
பெப்ரவரி 14 -20, 2013

# வாரமலர் தினமுரசு





THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1001

## கூட்டமைப்பின் தென்னாபிரிக்க பயணம் தெரிந்ததும் தெரியாததும்



## மகிந்தவின் இந்திய விஜயமும் ஜெயாவின் போலி அரசியலும்!





## அமெரிக்க - இஸ்ரேல் பொறிக்குள் சிக்குமா ஈரான்?



## துர் ஆசைகள்!

இப்பூவுலகில் வாழுகின்ற மனிதர்களுக்கு மனதில் பலவித மான உணர்வுகள் உண்டு. அதில் ஆசை எனும்உணர்வானது பலவகை சார்ந்ததாக விளங்குகிறது. இந்த ஆசை எனும் உணர்வானது மிகவும் கொடியதும், அபாயகரமான செயல்களுக்கு வித்திடுவதுமாக அமைகின்றது.

மனிதனின் மதியை மயக்கி, நிலை தடுமாறச் செய்யும் ஆசைகளில் மண்ணாசை, பெண்ணாசை மற்றும் பொன்னாசை என்பனவற்றால் நாடுகள், நகரங்கள், வம்சங்கள் இல்லாது அழிந்தொழிந்ததாக வரலாறுகள் சாட்சியம் பகருகின்றன.

மண் ஆசை நிலத்திலும், பெண் ஆசை பருவ அகவையிலும்,பொன் ஆசை பொருள் பற்றியும் வருவதாகும். இப்படியான ஆசை-களை மனதில் இருந்து விடுவித்துக்கொள்வதென்பது சிரமமான செயற்பாடாக இருப்பினும், இறைவன்பால் அன்பு கொண்டு, மன-தின் எண்ணங்களையும் செயல்களையும் திருப்பும் நிலையில் இவ் ஆசைகள் மெல்லெனவாய் விலகிக்கொள்ளும் என இந்து சமய நூல்கள் கூறுகின்றன.

-அனந்த நாராயணன், கைவேலி.

ஆன்மீகம்

## அழிவுக்குரியவர்கள்

நல்லதுக்குக் காலமில்லை... என்று நம்மில் சிலர் வெளிப்படையாகவும் வேறு சிலர் முணுமுணுப்பாகவும் உரைப்பதைப் பார்த்திருக்கின்றோம். அவர்கள் இச்சமூகத்தில் நல்லவர்களாக நற்செயல்கள் புரிபவராக வாழ முற்படும்போது, பொல்லாரின் இடையூறுகள் மற்றும் நிந்தனைகளினால் மனம் வெதும்பிப் போய் விடுகிறார்கள். அவர்களுடைய பார்வையில் அக்கிரமக்காரரின் ஆதிக்கம் மேலோங்கியிருப்பது போலவும், அவர்களின் வம்சங்கள் வசதி வாய்ப்புக்களுடன் வாழ்வது போலவும், ஒரு மாயையான தோற்றத்தைக் காட்டினாலும், இவை அனைத்தும் இப்பூமியில் நிரந்தரமில்லை என்பதே நிதர்சனமாகிறது.

இதையே சங்கீதக்காரன் தாவீதுராஜாவும் "பொல்லார் புல்லைப் போன்று செழித்து வளரலாம், தீமை செய்வோர் அனைவரும் பூத்துக் குலுங்கலாம்! ஆனால், அவர்கள் என்றும் அழிவுக்கு உரியவரே. (சங்கீதம் - 92:7)" என்று எடுத்தியம்புகிறார்.

அக்கிரமத்தில் செழித்து வளரும் ஆடம்பரங்களும் சுக போகங்களும் என்றோ ஒரு நாள் ஆண்டவரின் பார்வையில் அழிவுக்குரியனவாகும் என்பது இதிலிருந்து தெரிகிறதல்லவா!

-சாமுவேல், புதுக்குடியிருப்பு.

## நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிவோம்

மனவளத்தை மறந்து மண் வளத்தை பெரிதென நினைப்போருக்கு அல்லாஹ் அல்குர்ஆனில் கூறுகின்றான்.

நாம் உங்களைப் பூமியின் அதிபதிகளாக்கி நீங்கள் எவ்வாறு செயல் புரிகின்றீர்களென்று கவனித்து வருகிறோம்.

அல்குர்ஆன் 10:14

இவ்வாறு இறைமறை கூற அகங்காரமும், ஆணவமும், கொண்டு அநியாயத்தையும், அதர்மத்தையும் கடைப்பிடித்து மறுமையை மறந்து மண்ணுலகில் வாழ்வதா? அல்லாஹ் எமக்களித்திருக்கும் அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்த வேண்டிய நாம் அவனுக்கு மாறுசெய்து சிறுமை வழி செல்வதா?

அல்லாஹ்வின் அன்புப் பெருக்கு அருள்மறையிலே எவ்வாறு பொங்கிப் புனலாகப் பொழிகிறது என்பதை இங்கு பாருங்கள்.

ஈமான் கொண்ட மக்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு அடிபணிந்து வாழ்வீர்களாயின் அவன் உங்களை மேன்மைபெறச்செய்வான்.

அல்குர் ஆன் 8:29

ஆகவே நாம் அல்குர்ஆன் மீது நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிவோம்.

எம்.சீ. கலீல். கல்முனை -05.

## கவிதைப்போட்டி இல 997



### பேருக்குப் பெற்றோர்

பாராட்டுக்குரியது

புத்தாண்டுப்
பொதியுடனே - தன்
பெற்றவளைக்
காணவந்த
பிள்ளையினைக்
கண்டன்று
அன்னையவளுக்கு
ஆனந்தச்
சிரிப்பாக்கும்!
அந்த மகனின்று
அமெரிக்க ஜனாதிபதி
பராக் ஒபாமாவாக...
ஈன்ற அவளுக்கு (ப்)
பொதுவாக்கும் (ம்)
பேரின்பச் சிரிப்பு
இதுவாக்கும்!

பாண்டியூர்
பொன்.நவநீதன்

## கவிதைப் போட்டி இல 1001



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 19.02.2013

கவிதைப் போட்டி இல. 1001 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.



### மனித நேயம்

யாக்கை பெருத்த
பெருமாட்டியவள்,
தூக்க முடியாத
சுமையை உடல்
தாக்கமின்றி நகை முகத்தோடு
எந்த நோக்கமுமின்றியுதவும்
இந்த மனித நேயனை
மறக்க எண்ணுமோ?

கிண்ணியா- முத்தாலிப்.

### சுகமான சுமை

சதந்திரமாகச்
சுமைகளைச்
சுமந்தால்
இளமையில்
மட்டுமல்ல,
முதுமையிலும்
சுமை சுகமே!

நா.ஜெயபாலன்
பிபிலை.

### சுமைகளும் சுகமாகும்

மூட்டை சுமந்தால்தான் - என்
வீட்டில் மூன்று வேளை சாப்பாடு - என்
நாட்டை விட்டு நான் வந்தேன் இங்கு
சுமைகளும் சுகமாகும்- என்
சொந்தங்களும் பசி தீரும்.

எஸ்.ராஜ்குமார்.
திருமலை.

### நிச்சயம் நீ பொதி ஆவாய்

புன்னகை பூத்து
பொதி சுமக்கும் பொதுமகனே
புத்தியிருந்தால்
போய்ச்சேர் உன் தேசம் - இல்லையேல்
நாளை நீ நிச்சயம் பொதி ஆவாய்
நீ சுமக்கும் இடம் சவூதி என்றால்.

ஆர்.காவேரி, தோப்பூர்.

### குதூகலம்

போரும்
இயற்கையும் புசித்த (பின்)
எச்சிலை சுமந்தாலும்
புன்னகையோடு புறப்படுகிறோம்...
இறைவனின் அன்பு
இன்னும் இருக்குதோ..?
எனும் குதூகலத்தில்!

ஏ.பாரிஸ்,
மிகிந்தலை.

### மலர்ச்சி

பெற்ற மகன்
வயோதிப இல்லத்தில்
தள்ளிவிட்டுப் போக
பெறாத மகனொருவன்
உணவுப் பொதியோடு
வாராவாரம் தன்னிடம்
வருவதைக் காண
இத்தாயின்
முகத்தில்தான்
எத்தனை மலர்ச்சி...

அ.சந்தயாகோ,
கண்டி.

## உங்கள் பக்கம்

### அசுத்தமாகிறது கடல் நீர்!

மிகவேகமாக முன்னேறி வருகின்ற நகரங்களில் ஒன்றாக யாழ்.நகரும் வளர்ச்சியடைந்துகொண்டு செல்கின்றது. வெளியாரின் வர்த்தக முதலீடுகள், நவீன கட்டடங்களின் வளர்ச்சி என்று இன்று இலங்கையின் முக்கிய வர்த்தக நகரங்களில் ஒன்றாக யாழ்ப்பாணமும் உருவெடுத்து வருகின்றது.

இந் நிலையில் யாழ்.நகரின் சுகாதாரத்தைப் பேணி நகர்ப் பகுதியைச் சுத்தமாக வைத்திருப்பதற்காக யாழ். மாநகரசபை தீவிர கவனம் செலுத்தி வருகின்றது என்பது மறுப்பதற்கில்லை. தினமும் காலை மாலையென சேவையில் ஈடுபடும் துப்புரவுப் பணியாளர்களினால் சேகரிக்கப்படுகின்ற குப்பைகள் யாழ். நகரின் புறப்பகுதியில் காணப்படுகின்ற கல்லுண்டாய் வெளி எனும் இடத்தில் கொட்டப்படுகின்றது.

பொருத்தமான திட்டமிடலின்றி வெறு மனே கொட்டப்படுகின்ற குப்பைகள் மாத்திரமின்றி அப்பகுதியில் கடலுடன் கலக்கவிடப்படுகின்ற மலசல கூடக் கழிவு நீர்களும் அப்பகுதியில் துர்நாற்றத்தை ஏற்படுத்தி அப்பகுதியால் செல்கின்ற பொதுமக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்துவதற்கு அப்பால் கடல் நீருடன் மலசலக்கழிவுகள் கலக்கப்படுவதனால் குறித்த பிரதேசக் கடலில் பிடிக்கப் படுகின்ற கடலுணவுகளை உண்பதற்கு மக்கள் தயங்குவதாகத் தெரிகின்றது.

எனவே, இவ்விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென உரியவர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

எஸ்.ரமணன், வட்டுக்கோட்டை.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தின்முரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலை நகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com





## வாசகர் சாலை

### முரசுக்கு முடிசூடுவோம்

1000 ஆவது முரசை ஆவலுடன் எதிர்பார்த்து நாட்களை எண்ணிக்கொண்டிருக்கின்றேன். வாரங்களோ விரைவாக விடை பெறும்.1000 ஆவது முரசு நேயர்களை நேசிக்கப் போகிறது. இதில் நேயர் ஆக்கங்கள் இடம்பெற்று முரசு வாசகர்கள் முகம் மலரப் போகிறார்கள். வாசிப்போம் வாருங்கள் முரசுக்கு முடிசூடுவோம்.

எம்.சி.கலீல், கல்முனை-05.

### தந்துவிட்டாய் 1000

தடம் பதிக்கத் தயாராகிய உனக்கு
தடங்கல் எத்தனை வந்தும்
தடை தாண்டி வந்த உனக்கு
தங்க மகுடம் சூட்டவென
தரணியில் முரசின் அபிமானிகள்
தயாராகி விட்டனர் இன்று.
தந்துவிட்டாய் ஆயிரம் முரசினை
தடம் பதித்தாய் பல ஆயிரம் மனங்களில்

அலாவுடின் A.L.A.பாபு
லவ்லேன், திருகோணமலை.

### 1000ஆவது இதழில் தடம்பதிக்க...

தினமுரசு வாரமலர் பத்திரிகை ஆயிரமாவது இதழ் 20 ஆவது ஆண்டு நிறைவுவிழா ஆன இன்று (7-02.2013) வெளியிட்டு வைப்பதை இட்டு வாழ்த்துத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

நானும் ஒரு தினமுரசு வாசகன் என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன். இவ்விதழ் மேலும்புதுப்பொலிவுடனும், புது விடயங்களையும் தாங்கி வெளிவந்து மக்கள் மனதை மென்மேலும் கவர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

க.கனகசபை, சங்கானை.

### நீ தேடலின் பொக்கிஷம்

நலம்பல பெற்று
வளங்கொண்டு
வலம் வரும்
தினமுரசே...
நயம் பல பகிர்ந்து
அகம் மகிழ - உன்
அகவையில் தடம்
பதித்து ஆல் போல்
விழுதிட்டு அகிலத்தில்
நிமிர்ந்து நீடூழி
நீ வாழியவே!
மண்ணில் நீ சூடும்
மகுடம் மாண்பினில்
உயர்ந்த கிரீடம்.
இமயம் போல நீ இலங்கி
தடைதாண்டி நடைபோடு
சமகாலங்களையும் சரிநிகர்
என எண்ணி சரித்திரம் கண்டிடு!
உன் அலைகள் ஒவ்வொன்றும்
தேடலின் தேவையாகட்டும்
விழிப்புடனும் விடாமுயற்சியுடனும்
உன்பயணம் தொடரட்டும்
ஊடகப் பணியில்
உன் வரலாறு
கடின உழைப்பால்
கால் பதிக்கட்டும்
நீ... வலம்வரும்
சிவப்புச் சூரியன்
உன் உதிப்பு
உலகமெங்கும்
பரந்து வியாபித்து
தினமுரசாக பரிணமிக்கட்டும்
வாழ்க உன் பணி
வளர்க உன் சேவை...

க.நாகேஸ்வரா,
சண்டிலிப்பாய்.

### வாழ்த்துக்கள் பலகோடி

தினமுரசு வார மலர் ஆயிரமாவது இதழ் இன்று வெளிவருவதையிட்டு என் பல கோடி வாழ்த்துக்கள். ஒன்றுமுதல் ஆயிரம் என்பது ஒரு மைல்கல் என்று கூறினால் மிகையாகாது. உன்னில் இடம் பெறும் ஒவ்வொரு விடயமுமே பல விதம்.படிப்பினையூட்டுவதாக உள்ளது. ஆயிரமாவது இதழில் வாசகர்சாலை மூலம் வாழ்த்துத் தெரிவிப்பதில் பெருமிதம் அடைகின்றேன். உன் பணி மேலும் சிறப்புறவும் புதுப்புது அம்சங்களுடன் வெளிவரவும் எனது வாழ்த்துக்கள் பல கோடி.

ஏ.சீ.ஏம். முஸாமில், கெலிஒயா.

# அபிவிருத்தியைப் போன்று அரசியல் தீர்வும் அவசியம்

## புத்திஜீவிகள் கருத்து



சுன்னாகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட உபமின் நிலையம் திறந்து வைக்கப்பட்டபோது...

யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலுக்கும் விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி ராஜபக்ஷ பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொண்டுள்ளதுடன் அங்கு மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திப் பணிகளை பார்வையிட்டதுடன் யாழ். மக்களுக்குப் பயன்படும் வகையில் பல்வேறு அபிவிருத்திச் செயற்பாடுகளையும் ஆரம்பித்து வைத்துள்ளார்.

இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணம் சென்ற ஜனாதிபதி அவர்கள் சுன்னாகம் பகுதியில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் 3325 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட உபமின் நிலையமொன்றை மக்கள் பாவனைக்காக ஆரம்பித்து வைத்ததுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஜப்பான் அரசாங்கத்தின் நிதியுதவியினால் 2875 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட நவீன வசதிகளுடன் கூடிய கட்டடத் தொகுதியையும் திறந்து வைத்திருக்கின்றார்.

அண்மையில் திருகோணமலையில் நடைபெற்ற சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இலங்கை மீது சர்வதேச நாடுகள் சில பிரயோகித்து வருகின்ற அழுத்தங்கள் தொடர்பில் கடுமையான விமர்சனங்களை முன்வைத்திருந்த ஜனாதிபதி அவர்கள் இவ்வாறான சர்வதேச அழுத்தங்களுக்கு நாட்டின் அபிவிருத்தியின் ஊடாகவும். இன நல்லிணக்க செயற்பாடுகள் மூலமும் பதிலளிக்கப்படும் என்று தெரிவித்த சில நாட்களிலேயே யாழ்ப்பாணத்தில் இவ்வாறான அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று. தமிழ் மக்களினால் எதிர்பார்க்கப்படுகின்ற கௌரவமான அரசியல் தீர்வு ஒன்றை முன்வைக்கப்படுவதற்குத் தேவையான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொண்டு இனங்களுக்கிடையே நிலவி வருகின்ற சந்தேகங்களைக் களைந்து இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் ஜனாதிபதி உறுதியுடன் செயற்பட வேண்டுமென புத்திஜீவிகள் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

### சம்பளம் வழங்காமையால் தோட்டத் தொழிலாளர்கள் பணிப் புறக்கணிப்பு

அரச பெருந்தோட்டத்துறை யாக்கத்திற்கு சொந்தமான மடுல்கல. கலாபொக்க தோட்ட தொழிலாளர்களுக்கு மாத சம்பளம் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து சுமார் 2,000 தொழிலாளர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதுடன் தோட்ட அதிகாரிகளையும் அறையில் பூட்டிவைத்தனர்.

கடந்த எட்டாம் திகதி வழங்கப்பட வேண்டிய மாத சம்பளம் இதுவரை வழங்கப்படவில்லை எனத் தெரிவித்தே இவர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட தொழிலாளர்கள் தோட்ட அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களை அலுவலக அறையில் பூட்டிவைத்தமையால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

மாத சம்பளம் குறித்த திகதியில் வழங்காமையினால் தங்களின் அன்றாட வாழ்க்கையின் கொண்டு செல்வதில் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்குவதாக தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

### கொட்டகலை மாணவர்கள் ஜனாதிபதியுடன் சந்திப்பு

கல்விப் பொதுத்தராதர உயர்தர பெறுபேறுகளின் அடிப்படையில் கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்தில் சிறந்த பெறுபேறுகளை பெற்று பல்கலைக் கழகத்திற்கான தகுதியை பெற்ற 28 மாணவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்தனர்.

இச்சந்திப்பில், அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான், கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன, நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி. ராஜதுரை, மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சர் அனுஷியா சிவராஜா, மத்திய மாகாண சபை உறுப்பினர்களான எம்.ராம்.எம்.ரமேஸ், எம். உதயகுமார். மற்றும் அதிபர், ஆசிரியர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

## பொய்யான செய்திகளை வெளியிடும் ஊடகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

*- யாழ் இராணுவத் தளபதி*



பொய்யான செய்திகளை வெளியிடும் ஊடக நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அந்த வகையில் உதயன் பத்திரிகை நிறுவனத்தின் பணிப்பாளரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய ஈ.சரவணபவனனுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கொன்றைத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

"யாழ். தினக்குரல் பத்திரிகை விநியோகஸ்தர் மீதான தாக்குதலுக்கு ஹத்துருசிங்க பொறுப்பேற்க வேண்டுமென்று நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் தெரிவித்த கருத்தொன்று உதயன் பத்திரிகையில் வெளியிடப்பட்டமை தொடர்பில், பத்திரிகையாளர் சந்திப்பின் போது கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தில் நடைபெறுகின்ற குற்றங்கள் அனைத்திற்கும் இராணுவத்தின் மீது பழி சுமத்த வேண்டாம். சட்டத்தினையும், ஒழுங்கையும், சீர்குலையாமல் பாதுகாப்பதே எனது கடமை. அவற்றினைத்தான் நான் செய்துகொண்டிருக்கின்றேன். உண்மைகளை மட்டும் பத்திரிகையில் பிரசுரியுங்கள். அவற்றினை விட்டு தவறான தகவல்களை பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டாம். சமூகத்தினை மேம்படுத்துவதற்கான செய்திகளை பிரசுரியுங்கள். என்றும் கேட்டுக் கொண்டார்.

### சட்டவிரோத இந்தியர்கள் மட்டக்களப்பில் கைது

மட்டக்களப்பு மாவட்டத்தில் சட்டவிரோதமான முறையில் தொழிலில் ஈடுபட்டு வந்ததாகக் கூறப்படும் 9 இந்தியர்கள் கடந்த ஒரு வாரத்தில் மாத்திரம் கைதுசெய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

சுற்றுலா விசாவில் இந்தியாவிலிருந்து இங்கு வந்த இவர்கள், மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் நெல் அறுவடை மற்றும் வேளாண்மை வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளையிலேயே இவர்களை கைதுசெய்ததாகவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

## பாலியல் குற்றவாளி யார்? தலையைப் பிய்க்கிறது பிரான்ஸ் பொலிஸ்




பிரான்ஸில் நடந்துள்ள தொடர்- பாலியல் குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடத்திவருகின்ற பொலிசார், ஒரே மாதிரியான இரட்டைச் சகோதரர்கள் இருவரைக் கைதுசெய்துள்ளனர். ஆனால் யார் மீது குற்றச் சாட்டைப் பதிவது என்பது தொடர்பில் பொலிசாருக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

பாலியல் குற்றத்தைப் புரிந்துள்ள சூத்திரதாரியின் டி.என்.ஏ மாதிரிப் பொருட்கள் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து பொலிசாருக்குக் கிடைத்துள்ளன. ஆனால் அந்த டி.என்.ஏ -மாதிரித் தகவல்கள் இரட்டைச் சகோதரர்கள் இருவரினது டி.என்.ஏ தகவல்களுடனும் பொருந்திப் போகின்றன. இரட்டைச் சகோதரர்கள் இருவரினதும் டி.என்.ஏ தகவல்கள் இரண்டும் மிகச் சொற்பமான அளவிலயே ஒருவருக்கொருவர் வித்தியாசப்படுகின்றன.

மிகவும் நூதனமான சோதனைமூலம் மட்டுமே இரண்டுபேரின் டி.என்.ஏ தகவல்களையும் வேறுபடுத்தி பிரித்து ஆராயமுடியும். எனவே தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கின்றனர் பிரான்ஸ் பொலிஸார்.

## மனித முகத்துடன் ஒரு நாய்



அமெரிக்கா போன்ற நாடுகளிலே நாய்களுக்கு ஏகப்பட்ட மவுசு! அங்கெல்லாம் செல்லப்பிராணியாக வளர்க்கப்படுகின்ற நாய்கள் குளியலறை தொடக்கம் படுக்கையறை வரை சுதந்திரமாக நடமாட பூரண அனுமதி உண்டு. நாய்களுடன் பொழுதை கழிப்பதற்கு அமெரிக்கர்களுக்கு அலாதிப் பிரியம்(வயது. பால் வித்தியாசம் கிடையாது.)

இந்நிலையில், அமெரிக்காவின் மிக்சிகன் மாகாணத்தில் 2 வருடங்களுக்கு முன்னர் ஒரு நாய் பிறந்தது. அந்த நாயின் முகமும் கண்களும் மனித முகத்தை ஒத்து இருப்பது எல்லோரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருந்தது. எனினும். "டோனிக்" என்ற பெயரில் வளர்ந்து தற்போது திடகாத்திரமாக இருக்கும் குறித்த நாய். மிருகநல அமைப்பு ஒன்றின் பராமரிப்பில் இருக்கின்றது.

அவ்வளவாக யாரிடமும் பழகாத இந்த டோனிக் மற்ற நாய்களை காட்டிலும் உயர்வானதாக கருதப்படுகிறது. பார்க்க சந்தோசமாய் இருந்தாலும். வீட்டில் குழந்தைகளுடன் வைத்து பராமரிக்க சிபாரிசு செய்யப்படவில்லை. முறையான பயிற்சி. அணுகுமுறைக்கு பிறகு இதை வீட்டில் வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லப்படுகிறது.

## குற்றவாளியைப் பிடித்துக் கொடுத்தது பேஸ்புக்!

facebook

குற்றவாளிகளையும், பொலிசுக்கு, 'டிமிக்கி' கொடுப்பவர்களையும் பிடிக்க, மொபைல் போன், 'பேஸ்புக்' இணையத்தளம் போன்ற தகவல் தொழில்நுட்ப அம்சங்கள் சமீப காலமாக சிறப்பாக பயன்படுகின்றன.

இந்தியாவில் மும்பை பகுதியில் அமைந்துள்ள தனியார் எலக்ட்ரோனிக் நிறுவனத்தில், விஜய் சௌத்ரி (27), என்பவர் வேலை பார்த்து வந்தார். இரண்டு மாதங்களுக்கு முன் அவரிடம், 2.20 இலட்ச ரூபாயை கொடுத்து, வங்கியில் செலுத்துமாறு, நிறுவன மேலாளர் ஒப்படைத்தார். வங்கிக்கு சென்ற சௌத்ரி, அலுவலகப் பணத்தை, வங்கியில் செலுத்தாமல், பணத்துடன் கம்பி நீட்டிவிட்டார்.

இதுதொடர்பாக, பொலிசில் புகார் கொடுக்கப்பட்டது. சௌத்ரியை பிடிக்க பொலிசார் பல முறைகளையும் பின்பற்றினர். எனினும் அவர் அந்த நடவடிக்கையிலும் சிக்கவில்லை. குறித்த நபரின் பேஸ்புக் முகவரியை அறிந்த பொலிஸார், பெண்ணின் பெயரில் அந்த முகவரியை தொடர்பு கொண்டனர். வலையில் வீழ்ந்தார் சந்தேக நபர். சாதுரியமாக பேசிய பெண்ணின் வேண்டுகோளுக்கு அமைய, தனிமையில் இனிமை காண்பதற்காக ஓடி வந்தார். மறைந்திருந்த பொலிஸார் அமுக்கிப் பிடித்து சிறையில் அடைத்துள்ளனர்.

வாரமலர்
தினமுரசு
த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3628
தொலைநகல்:- (FAX):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-thinamurasu@live.com

முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## புனர்வாழ்வு அவசியம்

ஆயிரமாவது இதழ் பார்த்து தங்களது மனப் பூரிப்புக்களையும், மகிழ்ச்சியையும், அக்கறை கலந்த விமர்சனங்களையும் எம்மோடு பகிர்ந்து கொண்ட அன்பு வாசகப் பெருமக்கள் அனைவருக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகள்.

உங்களது விமர்சனங்களையும், ஆலோசனைகளையும் தினமுரசு கவனத்தில் எடுத்திருப்பதை எதிர்வரும் காலங்களில் முரசு பறைசாற்றும்.

இந்த வாரம் சில முக்கியமான நிகழ்வுகள் நடந்தேறியுள்ளன. முதல் தடவையாக யாழ்ப்பாணத்தின் அபிவிருத்திக் குழுக் கூட்டம் ஜனாதிபதி தலைமையிலேயே யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

ஒன்பது எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து 'எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு' எனும் பெயரில் இயக்கத்தை உருவாக்கியது.

"யுத்தம் மற்றும் யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் நாடுகளினால் எதிர்நோக்கப்படும் இராஜதந்திர சவால்கள்" என்ற தலைப்பில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய இராஜபக்ஷ அண்மையில் உரையாற்றும் போது, புலிகள் இலங்கையில் அழிக்கப்பட்டிருந்தாலும் சர்வதேச ரீதியில் அவர்களின் வலையமைப்பு இன்னும் உள்ளது, என்றும் பல்வேறு வடிவங்களில் "மீண்டும் புலிகள் உருவாகும் ஆபத்து உள்ளது" என்று இலங்கை மக்களின் வயிற்றில் புளியைக் கரைத்தது.

"பிரபாகரனின் நிகழ்ச்சி நிரலையே கூட்டமைப்பினர் முன்னெடுக்கின்றனர்" என்று அரசாங்கம் தெரிவித்திருப்பது

"புலம்பெயர்ந்து வாழும் புலி ஆதரவாளர்களுடன் தமிழ் கூட்டமைப்பு இணைந்து தன்னாட்சி உரிமைக்கான வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்கவுள்ளது. அதற்கான முதற்கட்ட சந்திப்புகள் ஜேர்மனில் இடம்பெற்றுள்ளன" என்று கூட்டமைப்பு தெரிவித்தது.

இப்படி ஒற்றுமையானதும், முரண்பாடானதுமான பல நிகழ்வுகள் நடந்துள்ளன. இவை தமது அரசியல் ஸ்திரத் தன்மையையும், அதிகாரங்களையும் கவனத்தில் கொண்டு நகர்த்தப்படும் காய்கள் என்பதில் எந்தச் சந்தேகத்துக்கும் இடமில்லை. ஆனால் அதற்கான நகர்வுகளினால் நெருக்கடிகளைச் சந்திக்கப்போகின்றவர்களும், துன்பங்களைச் சந்திக்கப்போகின்றவர்களும் இலங்கையின் குடிமக்களாகவே இருக்கப் போகின்றார்கள்.

பல வருடங்களாக இலங்கையின் சிறுபான்மை இனங்களின் உரிமைகளையும், பாதுகாப்பையும் மறுதலிக்கின்ற போக்கை கொண்டிருந்த இலங்கையின் கடும்போக்கு இனவாத சக்திகளுக்கு இவ்வாறான சூழல் மேலும் வலிமை சேர்ப்பதாகவே அமையும்.

இந்தச் சூழலை மாற்றியமைக்காமல், இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தையும், ஐக்கியத்தையும் ஒருபோதும் ஏற்படுத்த முடியாது. இலங்கையின் புதிய மருத்துவமான புனர்வாழ்வு சில அதிகார மற்றும் அரசியல் நோயாளர்களுக்கும் அவசியமாக உள்ளதாகவே எண்ணத் தோன்றுகின்றது.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்*
*ஆசிரியர்*

# சரியான கொள்கையிலும் அணுகுமுறையிலுமே இனப்பிரச்சினையின் தீர்வு தங்கியுள்ளது!

**சங்கர சிவன்**

தமிழ்த் தலைவர்கள் ஒற்றுமைப்பட வேண்டும் என்ற கருத்து இன்று பல வட்டாரங்களிலிருந்து வலியுறுத்தப்படுகின்றது. தமிழ் ஊடகங்கள் இந்தக் கருத்துக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றன. பல தமிழ் அரசியல் விமர்சகர்கள் இதையே திரும்பத் திரும்பக் கூறுகின்றார்கள். அரசியல் தலைவர்கள் வெளியிடும் கருத்துக்களும் ஒற்றுமையையே முன்னிலைப் படுத்துகின்றன. தமிழ்த் தலைவர்கள் ஒற்றுமைப் பட்டால் தமிழ் மக்களின் சல பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைத்துவிடும் என்ற அடிப்படையிலேயே ஒற்றுமைக் கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது. இது வழமை போலத் தமிழ் மக்களுக்குத் 'தண்ணி காட்டும்' கருத்து.

தமிழ் அரசியல் வரலாற்றில் ஒற்றுமைக் கோரிக்கை புதிய விடயமல்ல. தமிழ் மக்கள் ஒற்றுமைப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஐம்பதுகளில் தமிழரசுக் கட்சி முன்வைத்தது. தமிழ் காங்கிரஸ் கட்சியை ஆதரிப்பதைக் கைவிட்டுத் தமிழரசுக் கட்சிக்குப் பின்னால் அனைத்துத் தமிழ் பேசும் மக்களும் அணிதிரள வேண்டும் என்பதே அந்தக் கோரிக்கை. மக்களும் அதை ஏற்றார்கள். ஒற்றுமைப்பட்டுத் தமிழரசுக் கட்சிக்கு அமோக வெற்றியை ஈட்டிக் கொடுத்தார்கள். பிரச்சினை தீரவில்லை.

மக்கள் ஒற்றுமைப்பட்டால் போதாது. தலைவர்களும் ஒற்றுமைப்பட வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியை அமைத்தார்கள். கீரியும் பாம்பும் போல இருந்த தமிழரசுக் கட்சியும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் ஒன்றுபட்டன. தடபுடலாக மகாநாடு நடத்தித் தனிநாட்டுத் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். இந்தத் தீர்மானம் தமிழ் மக்களின் அமைதியான வாழ்க்கையைக் குலைத்துப் பாரதூரமான பாதிப்புக்களைக் கொடுத்ததேயொழியப் பிரச்சினை தீரவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புலிகளின் தேவைக்காக ஆரம்பிக்கப்பட்ட போதிலும், அதிலும் ஒற்றுமையைக் காணலாம். தனித்தனியாகச் செயற்பட்ட முன்னாள் போராளிக் குழுக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து உருவாக்கியதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

> **தமிழ் மக்களின் இன்றைய அவலநிலைக்குத் தலைமையீடம் சரியான கொள்கையும் அதில் உறுதியான பிடிப்பும் இல்லாமைதான் காரணமே யொழிய ஒற்றுமையின்மை காரணமல்ல என்பதை மேலே பார்த்தோம். சரியான கொள்கையோடு சரியான அணுகுமுறையும் தேவை. நடைமுறைச் சாத்தியமானதும் முழுமையான அதிகாரப் பகிர்வை வழங்கக் கூடியதுமான கொள்கையே சரியான கொள்கை. உடனடியாக எது சாத்தியமோ அதை ஏற்றுக்கொண்டு அதிலி ருந்து சிங்கள மக்களின் ஆதரவுடன் படிப் படியாகக் கூடுதலான அதிகாரங்களைப் பெற்று முழுமையான அரசியல் தீர்வை அடைவதே சரியான அணுகுமுறை.**



புலிகளின் தோல்விக்குப் பின் கூட்டமைப்பின் ஒற்றுமை ஆட்டங்காணத் தொடங்கியது. சங்கரியும் சித்தார்த்தனும் சேர்ந்த பின்னரும் ஒற்றுமை வலுவடையவில்லை. தமிழரசுக் கட்சி ஒருபுறத்திலும் மற்றைய கட்சிகள் மறுபுறத்திலுமாக உள்வீட்டுச்சண்டை தொடர்கின்றது. கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையே இந்தக் கயிறிழுப்புக்குக் காரணம்.

ஒற்றுமை வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துவதும், கூட்டமைப்பைப் பதிவு செய்ய வேண்டுமென்ற கோரிக்கையும் மக்களைத் திசைதிருப்பும் முயற்சிகள். இனப்பிரச்சினை உட்படச் சகல பிரச்சினைகளினதும் தீர்வு தலைவர்களின் ஒற்றுமையிலும் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்வதிலுமே தங்கியிருக்கின்றது என்ற மாயையைத் தமிழ் மக்களிடம் தோற்றுவிக்கின்றார்கள். இதன்மூலம் தலைவர்கள் இயலாமை மூடி மறைக்கப்பட்டு அவர்களின் பாராளுமன்றப் பதவிகள் பாதுகாக்கப்படுகின்றன.

தமிழர் விடுதலைக் கூட்டணியும் புலிகள் காலத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் காணாத ஒற்றுமையா? இந்த ஒற்றுமை தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்கவில்லை. கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்தவுடன் இனப்பிரச்சினை தீர்ந்துவிடப் போவதில்லை. சரியான கொள்கையும் அதில் உறுதியான பிடிப்புமே இனப்பிரச்சினை உட்படத் தமிழ் மக்களின் சகல பிரச்சினைகளினதும் தீர்வுக்கு அத்தியாவசியமானது.

தமிழரசுக் கட்சியின் சமஷ்டிக் கோரிக்கையை இனப்பிரச்சினையின் தீர்வுக்குச் சரியான கொள்கை எனக் கூறலாம். ஆனால் அக்கொள்கையில் உறுதியான பிடிப்பு தமிழரசுத் தலைவர்களுக்கு இருக்கவில்லை. இனப்பிரச்சினையின் தீர்வுக்கு எந்தக் கொள்கையும் இல்லாத ஜீ.ஜீ. பொன்னம்பலத்தை வீழ்த்துவதற்கான ஆயுதமாகவே தமிழரசுக் கட்சி சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்தது.

ஆனால் அக்கோரிக்கையை ஆக்கபூர்வமான வழியில் முன்னெடுத்துச் செல்லவில்லை. சமஷ்டி பற்றி மேலோட்டமாகப் பேசினார்களே யொழிய அதுபற்றிய ஆழமான விளக்கத்தை மக்களுக்கு அளிக்கவில்லை. தமிழ்நாட்டுத் தபால் சேவை, தமிழ்நாட்டுக் காணிக் கச்சேரி போன்ற புத்திசாலித்தனமற்ற செயல்கள் மூலமும் தொடர்ச்சியான இனவாதப் பிரச்சாரத்தின் மூலமும் சிங்கள மக்கள் சமஷ்டிக் கோரிக்கையைப் பிரிவினையாகப் பார்க்கும் நிலையை உருவாக்கினார்கள். ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் செல்வாக்கை வீழ்த்தும் நோக்கம் நிறைவேறியதும் சமஷ்டிக் கோரிக்கையின் தேவை இவர்களுக்கு இல்லாது போய்விட்டது. தங்கள் பாராளுமன்றப் பதவிகளைப் பாதுகாப்பதிலேயே பிற்காலத்தில் கவனம் செலுத்தினார்கள். அதனாலேயே தமிழர் விடுதலைக் கூட்டணி அமைந்ததும் எவ்வித மனச்சஞ்சலமும் இல்லாமல் சமஷ்டிக் கோரிக்கையைக் கைவிட்டார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தனிநாட்டுக் கோரிக்கை தற்கொலைக்கு ஒப்பானது. அக்கோரிக்கை தமிழ் மக்களின் தலையில் சுமத்திய இழப்புக்களையும் அழிவுகளையும் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் புலிகளின் காலத்தில் தனிநாட்டு நிகழ்ச்சி நிரலின்கீழ் செயற்பட்ட போதிலும் இப்போது எந்தக் கொள்கையும் இல்லாமல் தடுமாறுகின்றது. சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத்தரும் எனக் கூறித் தமிழ் மக்களை ஏமாற்றுகின்றது.

தமிழ் மக்களின் இன்றைய அவலநிலைக்குத் தலைமையிடம் சரியான கொள்கையும் அதில் உறுதியான பிடிப்பும் இல்லாமைதான் காரணமே யொழிய ஒற்றுமையின்மை காரணமல்ல என்பதை மேலே பார்த்தோம். சரியான கொள்கையோடு சரியான அணுகுமுறையும் தேவை. நடைமுறைச் சாத்தியமானதும் முழுமையான அதிகாரப் பகிர்வை வழங்கக் கூடியதுமான கொள்கையே சரியான கொள்கை. உடனடியாக எது சாத்தியமோ அதை ஏற்றுக்கொண்டு அதிலிருந்து சிங்கள் மக்களின் ஆதரவுடன் படிப் படியாகக் கூடுதலான அதிகாரங்களைப்பெற்று முழுமையான அரசியல் தீர்வை அடைவதே சரியான அணுகுமுறை.

முழுமையான அரசியல் தீர்வை ஒரே தடவையில் அடைவதற்குச் சாதகமான சூழ்நிலை இன்று இலங்கையில் இல்லை. எனவேதான் இப்போது எது சாத்தியமோ அதைப் பெற்றுக் கொண்டு முழுமையான அரசியல் தீர்வை நோக்கிச் செல்லும் அணுகுமுறை தேவைப்படு கின்றது. இந்த அணுகுமுறையைத் தமிழ்த் தலைவர்கள் ஏற்பதாக இல்லை.

அவர்களின் பேச்சும் செயலும் விட்டால் குடுமி வழித்தால் மொட்டை என்ற பாணியிலேயே இருக்கின்றன. இந்த நிலைப்பாடு இனப் பிரச்சினைக்கான தீர்வைச் சாத்தியமற்றதாக்குவதோடு மக்களின் சமகாலத் துயரங்கள் முடிவின்றித் தொடர்வதற்கும் வழிவகுக்கும்.

ஒவ்வொருவரும் சித்தாந்தங்களுக்கூடாக மாத்திரம் பிரச்சினையைப் பார்க்காமல், மக்களை மையமாகக் கொண்டும் பார்க்கவேண்டும். அதிகாரப் பகிர்வுக் கோட்பாடு முழுமையாக நடைமுறைக்கு வரவேண்டும் என்பது எவ்வளவு முக்கியமானதோ அதேயளவு முக்கியத்துவம் மக்களின் சமகாலத் துயரங்களுக்குத் தீர்வு காண வேண்டும் என்பதற்கும் உண்டு. உடனடியாகச் சாத்தியமான தீர்வை ஏற்றுக்கொண்டு படிப்படியாக முழுமையான அரசியல் தீர்வை அடையும் நடைமுறையே இரண்டு நோக்கங்களையும் பூர்த்தி செய்யக் கூடியது. தமழ்மக்களின் நலனில் உண்மையான அக்கறை உள்ளவர்கள் இதை நிராகரிக்க முடியாது.

[கடந்தவாரத் தொடர்ச்சி...]

**யாரோ ட்ரக்டரில்** விறகெடுக்க வருகிறார்களாக்கும் என எண்ணிக் கொண்டிருக்கையில் கூப்பிடு தூரத்திற்கு வந்துவிட்டது.

சில தளபாடங்களை ஏற்றிக் கொண்டு புலி ஒன்று ஓட்டிக்கொண்டு வந்தது. முன்னும் பின்னுமாக தலையிலும், தோளிலுமாக ஏனைய புலிகள் மூட்டை களை சுமந்து கொண்டு வந்தன. நீண்ட தூரப்பயணமாக இருக்கவேண்டும். தூசு படிந்த தலையும், வியர்வையில் குளித்த முகமுமாக வந்த புலிகளின் முகங்கள் அவ்விடத்தில் பளீரெனப் பிரகாசமானது.

ஆமாம். அவர்கள் நடுக்காட்டில் நான்கைந்து வண்டில்களைக் கண்டு விட்டார்கள். கழுத்தொடியும் தம் சுமை களைத் தாங்கும் சுமைதாங்கிகளைக் கண்டுவிட்டன.

காக்காமார்...இறக்குங்களடா விற கெண் என உறுமின. என்ன நடக்கிறது. என்ன சொல்கிறார்கள் எனப்புரிந்து கொள்வதற்குள் மூட்டைகளை தரை யில் வைத்துவிட்டு காடுமேடெல்லாம் தேடிச்சேர்த்த ஒரு வேளை உணவாக, பிள்ளையின் சப்பாத்தாக,பென்சிலாக, கொப்பியாக மாறக்காத்திருக்கும் விறகு களை புலிகளே நாலா பக்கமும் உருவி எறிந்தன. நிலைமையைப் புரிந்து கொண்ட நபீக்கும், நண்பர்களும் தைரியத்தை கெஞ்சி வரவழைத்துக் கொண்டு, தாம் பத்திரமாக எடுத்து வந்திருந்த ரசீதை கொண்டு போய் தலைமைப் புலி போல் தோரணை காட்டிய சற்றுக்குள்ளமான புலியிடம்

'நாங்க காசி கட்டிட்டோம்' என நீட்டினர். அதனை வாங்கிப்பார்த்த அத்தலைமைப் புலி சிரித்துக் கொண்டே இரண்டாய்.. நான்காய்.. எட்டாய்.. கிழித்து சுலோமோசனில் கீழே போட்டது.

'புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம்'.

'தமிழ்பேசும் மக்களின் கௌரவமான தும், சமத்துவமானதுமான சகவாழ்வு' எல்லாம் திசைக்கொன்றாய் கிழிந்து கிடந்து புலிகள் உட்பட அனைவரை யும் பார்த்துச் சிரித்தது. ஆனால் அந்தப் பெரிய புலி ஏதொன்றும் பேசாமல் இடுப்பிலிருந்த கைத்துப்பாக்கியை உருவியது. சப்த நாடியும் அடங்க, ஸ்தம்பித்துப் போனார்கள். உருவிய துப்பாக்கியை முகத்துக்கு நேரே நீட்டி மேலும் கீழுமாக அசைத்து காட்டைவிட்டு சென்று விடுமாறு சைகை செய்தது.

மேற்கொண்டு இங்கு நிற்பது தற்கொலைக்கு ஒப்பானது என்பதைப் புரிந்து கொண்ட நபீக்கும், நண்பர் களும் வேக வேகமாக பின்நோக்கிச் சென்றனர். ஓரளவு தூரம் சென்றதும் தமது வண்டில் களுக்கு என்ன நேரப்போகிறது என்பதைப் பார்ப்பதற்காக பற்றை மறைவில் ஒழிந்திருந்து பார்த்தார்கள். அங்கே புலிகள் சந்தோசமாகச் சிரித்துப் பேசிக் கொண்டு வண்டில்களில் தம் மூட்டைகளை ஏற்றிக்கொண்டிருந்தார்கள். ஆங்காங்கே நின்ற மாடுகள்

# விறகில் பூத்த மலர்

பலாத்காரமாக இழுத்துவரப்பட்டன. அவை வர மறுத்தன. அப்போது முன்னால் ஒரு புலி இழுக்க மற்றொரு புலி விறகுக்கட்டையால் அடிக்க அனைத்தும் பூட்டப்பட்டு, புலிகள் வண்டி ஓட்டிக்கொண்டு சென்றன. கண்ணில் இருந்து மறையும் வரை பார்த்துக்கொண்டிருந்தார்கள். தூரத்தில் ஒரு கலங்கல் படமாக வண்டில்கள் மறைந்ததும் சொல்லி வைத்ததாற் போல அனைவரது கண்களிலும் கண்ணீர வரம்புடைத்து கன்ன மேட்டில் ஏறியிறங்கியது. கண்களைக் கசக்கிக் கொண்டே திக்கற்றகாட்டில் ஆண்டவனிடம் முறையிட்டுக் கொண்டு வீடு வந்து சேர்ந்தனர்.

வண்டில் வடிவில் ஜீவனோபாயம் பறிக்கப்பட்ட நிலையில் வாழ்வை ஓட்ட மிகவும் சிரமப்பட்டனர். சிறிய வயது முதல் காட்டுத்தொழிலையே செய்து வந்த நபீக்கிற்கு வேறுமார்க்கம் தெரியவில்லை. நாளுக்கு நாள் புலி களின் அட்டகாசம் தலைவிரித்தாடியது. காட்டிலும், கரையிலும் கப்பம் கலந்த காட்டாட்சி கோலோச்சியது. இந் நிலையில் மேற்கொண்டு வாழ்வை யோட்ட வேறுவழியில்லை என்ற நிர்ப்பந்த நிலைக்கு வந்த நபீக், அப்படி ஒரு முடிவை எடுக்க நேர்ந்தது.

தொழில் இல்லாமல் அரைவயிறும், கால்வயிறுமாக கழியும் நிலையை மாற்ற வேறுவழியில்லாமல் தனது நிலைப்பாட்டை மனைவியிடம் தெரிவித்தார். எதிர்பார்த்தது போலவே சுகவீனமுற்றிருந்த நிலையிலும் அத்தாய் வெகுண்டெழுந்தாள்.

எனினும் வயிற்றுக்குச் சோறிட என்ன வழியென யோசித்துக் களைத்துப் போன நபீக்கும், மனைவியும் அப்படியொரு முடிவை மனதைக்கல்லாக்கிக் கொண்டு எடுத்தனர். மட்டுமல்லாமல் அந்த முடிவை நான் என்வாயால் சொல்லமாட்டேன் என மனைவி கூறிவிட்டாள். சரி நான் பார்க்கிறேன் என நபீக் பொறுப்பெடுத்தார். எடுத்த முடிவைப்பற்றி நினைத்து நினைத்து மனதுக்குள் அழுது கொண்டார்.

இன்று எப்படியும் சொல்லிவிடுவது என்ற முடிவுடன் அதுவும் ஓரேயடியாக சொல்லாமல் கட்டம் கட்டமாக சொல்வோம் என்று முடிவெடுத்துக் கொண்டு, வசதியாக வாசலில் கிடந்த தென்னங்கட்டையில் குந்திக்கொண்டிருந்தார். அப்போது மூதூர் ஸாபி நகர், இமாம்ஸாபி வித்தியாலயத்தில் கற்கும் மகள் றிசானா, முகம் நிறைய புன்னகை யோடும், கனவுகள் சுமந்த கண் களோடும் குடிசையை விட்டு சொப்பிங் பேக் ஒன்றில் புத்தகங் களை சுமந்து கொண்டு வாசலுக்கு வர நபீக் தயாராகி

'புள்ள பள்ளிக்கிப் போறியா'

'ஓ... வாப்பா'

'பள்ளி உட்ட ஓடன... விளையாடிக்கிட்டு நிக்காம, ஓடன ஊட்ட வந்திரனும்..ம்ம்ம்..'

'ஏன் வாப்பா'

'நீனும், நானும், உம்மாவும் பின்னாரம் கிண்ணியாக்குப் போய் அங்கிருந்து கொழும்புக் போவப்போறோம்'

'என்னத்துக்கு வாப்பா'

'நீ வாவன் சொல்றன்'

'கொழும்புக்குப் போகப்போகி றேம்' என்ற சொல் தேனாய் பாய்ந் திருக்கவேண்டும் றிசானாவின் நடையில் ஒரு துள்ளல். துடிப்பு.

தலைவாரிப் பூச்சூடாத குறையாக அண்டை வீட்டுப் பிள்ளைகளோடு றிசானா சிட்டெனப் பறக்க. வெளிநாட்டு விசயமாக மற்றும் பாஸ்போட் சமாச்சாரங்கள் பற்றிப் பேசியவர் நபீக் புறப்பட்டார்.

ஒன்றுக்குப் பல தடவைகள் போய் வந்த ஹாஜிகளோ, சக்காத்தை சத்தான வகையில் பகிரும் திட்டங்களோ, தேவைக் கதிகமாக வீட்டைக்கட்டிக் கொண்டு ஹாயாக வாழும் சீமான்களோ அந்நேரம் அங்கில்லை நபீக்கைத் தடுக்க.

**(முற்றும்)**



அ.ஞா. பேரறிவாளன்
மரண தண்டனைச் சிறைவாசி
த.சி.எண். 13906
நடுவண் சிறை, வேலூர் – 2

**ராஜிவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன் எழுதிய நீண்ட விளக்க கடிதத்தை இங்கு தருகிறோம். ராஜிவ் காந்தி கொலை விவகாரத்தில் விபரங்களையும் படித்து, அது தொடர்பான பலருடன் பேசி தகவல்களைப் பெற்றவர்களின் கருத்துப்படி, இந்த பேரறி வாளன், ராஜிவ் காந்தி கொலை திட்டத்துடன் நேரில் தொடர்புடையவர் அல்ல என்பதாகவே இருக்கின்றது.**

**ராஜிவ் காந்தி கொல்லப்படப் போகிறார் என்பது நிச்சயமாக இவருக்கு முன்கூட்டியே தெரிந்திருக்கவில்லை. புலிகளின் உளவுப் பிரிவு, தமது திட்டங்களை ஊரெல்லாம் தெரியப்படுத்திவிட்டு செயல்படுத்துவதில்லை. ஆனால், விடயம் சொல்லப்படாமலேயே சிலரை பயன்படுத்திக் கொள்வதுண்டு. திட்டம் பிற்பாடு வெளியானால், நேரடித் தொடர்பு இல்லாத பலர் மாட்டிக் கொள்வதுண்டு. அப்படி சிக்கிக் கொண்ட ஒருவர்தான், இந்த பேரறிவாளன் என்பதே பலரினதும் கருத்தாக இருக்கின்றது.**

**அவரது கடிதத்தை அப்படியே தருகிறோம். படித்துப் பாருங்கள். கடிதத்தில் இவர் குறிப்பிடும் பல விடயங்கள் நடுங்க வைக்கின்றன.**

**சமீப காலங்களில், தூக்குத் தண்டனைக் கைதிகளை தூக்கில் போட்டுவிட்டு, அதன் பின்னரே விடயத்தை மக்களுக்கு அறிவிக்கும் நடைமுறை உள்ளது. அப்படியொரு நடைமுறை, இவருக்கும் ஏற்படக்கூடாது என்ற நோக்கிலேயே இந்த கடிதம் இப்போது வெளியிடப்படுகிறது.**

# மறுக்கப்பட்ட நீதி!

## உயிர்ப் பிச்சை கேட்கிறார் பேரறிவாளன்

அன்புக்குரியீர்,

வணக்கம். ராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டு தற்போது உச்ச நீதிமன்றத்தால் மரணதண்டனை உறுதி செய்யப்பட்டவர்களுள் நானும் ஒருவன். வேதனையோடும் வேண்டுதல் செய்தும் இந்த முறையீட்டு மடலை தங்களுக்கு அனுப்புகிறேன்.

எந்தவிதக் குற்றமும் செய்யாத நான் இன்று தூக்குக் கயிற்றை நோக்கி நிறுத்தப்பட்டிருக்கிறேன். இறுதியில் நீதி வெல்லும் என்ற நம்பிக்கை இருக்கிறது. என்றாலும் மனிதநேய அமைப்பினர், சட்டமறிந்த வழக்கறிஞர்கள் என்ற முறையில் உங்களோடு எனது காவல் துறை துன்பங்கள், வாக்குமூலத்தில் என் கையொப்பம் பெறப்பட்ட முறையை, எனது மனநிலையை, சிறைக் கொடுமைகளை வாழ்கின்ற தன்மையை பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

அக்கறையோடும், உள்ளன்போடும் படித்தறிந்து எனது தரப்பு நியாயத்தை உணர்வீர்கள் என்று நம்புகிறேன்.

அவ்வாறு இம்முறையீட்டின் மூலம் உங்களது மனதை நான் வென்றுவிட வேண்டும் என்றே ஆசை கொள்கிறேன். அதுவே எனது நீதிக்கான போராட்டத்தில் வெற்றியின் படிக்கல்லாக கருதுகிறேன்.

1991 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11ஆம் திகதி இரவு 10.30 மணிக்கு சென்னை, எழும்பூர், எண்.50. ஈ.வெ.கி.சம்பத் சாலை, பெரியார் திடல் என்ற முகவரியில் எனது பெற்றோர் என்னை விசாரணைக்கென சி.பி.ஐ. அதிகாரிகள், ஆய்வாளர்கள் கங்காதரன், இராமசாமி மற்றும் ஒருவரிடம் ஒப்படைத்தனர். அப்போது பெரியார் திடல் பிரமுகர்கள் பலர் இருந்தனர்.

எனது பெற்றோர் நான் சென்னை பெரியார் திடல், விடுதலை அலுவலகம் கணினிப் பிரிவில் பணியாற்றும் விவரத்தையும், அங்கு தங்கியுள்ள விவரத்தையும் கூறி அழைத்து வந்தனர்.

என்னை மல்லிகை அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றபோது, நாளை காலை, அதாவது 12-6-1991 அன்று அனுப்பி வைப்பதாக வாக்குறுதி கூறியே அழைத்துச் சென்றனர். நேரே மாடியில் உள்ள ஒரு அறைக்கு என்னை அழைத்துச் சென்றனர். அங்கு துணை தலைமை ஆய்வாளர் ராஜு, காவல்துறை கண்காணிப்பாளர்கள் தியாகராசன், சலீம் அலி மற்றும் பலர் இருந்தனர்.

என்னைப் பற்றியும் எனது கல்வி, குடும்பப் பின்னணி பற்றியும் விசாரித்தனர்.

எனது கல்வித் தகுதி மின்னணுவியல் மற்றும் தொடர்பியல் தொழிநுட்பப் பட்டயம் என்று கூறியவுடன், துணை தலைமை ஆய்வாளர் ராஜு கேட்டார். "நீ தான் வெடிகுண்டு செய்தவனா?" என்று!

நான் மிரண்டு விட்டேன்.

எனது படிப்போடு வெடிகுண்டு எந்தவகையில் தொடர்பு என்பது விளங்காமல் தவித்தேன்.

அப்போது நான் போட்டிருந்த சட்டையின் கீழ்ப்பக்கம் சிறியதுளை இருந்தது. அதைப் பார்த்தபடியே, "இந்தத் துளை ஸ்ரீபெரும்புதூர் குண்டு வெடிப்பில் ஏற்பட்டதுதானே" என்று கூறினார். நான் மறுத்தேன்.

ஏற்கனவே 10-6-1991 மற்றும் 11-6-1991இல் எமது சொந்த ஊரான சோலையார்பேட்டையில் (வேலூர் மாவட்டத்தில்) தமிழீழ விடுதலை ஆதரவாளர்கள், திராவிடர் கழகத்தவர் வீடுகளில் விசாரணை மேற்கொண்டபோது எமது இல்லத்திற்கும் சென்று விசாரித்துள்ளனர். அப்போது என்னைப் பற்றியும் கேள்வி எழுப்ப,


ஆனால் என்னை 'சரியான முறையில் கவனித்தால்' ஒப்புக்கொள்வேன் என்று கூறி இரண்டு ஆய்வாளரிடம் ஒப்படைத்தனர்.

கீழ்தளத்திற்குக் கொண்டுவரப்பட்டேன். அப்போது ஆய்வாளர்கள் சுந்தரராசன் மற்றும் இருவர் (பெயர் நினைவில்லை) எனது வெற்றுடம்பில் உள்ளங்கையினால் அடித்தனர். ஒருவர் ஷூ காலால் எனது கால் விரல்களை மிதித்தார். திடீரென ஆய்வாளர் சுந்தரராசன் தனது முழங்கால்களால் எனது விதைப்பையில் கடுமையாகத் தாக்கினார். நான் வலியால் துடித்துக் கீழே விழுந்தேன். எனக்குத் தெரியாத, சம்பந்தமில்லாத பல சம்பவங்களைக் கேட்டு துன்புறுத்தினர்.

அடுத்த நாள் காலை, மல்லிகை அலுவலத்தின் சித்ரவதைக் கூடம் என அழைக்கப்படும் மேல் மாடிக்குக் கொண்டு செல்லப்பட்டு ஆய்வாளர்கள் ரமேஷ், மாதவன், செல்லத்துரை, காவல்துறை துணை கண்காணிப்பாளர் சிவாஜி ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டேன். இவர்கள்தான் அப்போது மல்லிகையில் துன்புறுத்தலில் பெயர் பெற்றிருந்தனர். அங்கு சென்றவுடன் எனக்குக் குடிக்க நீர் மறுக்கப்பட்டது, உணவு மறுக்கப்பட்டது, சிறுநீர் கழிக்கவும் அனுமதி மறுக்கப்பட்டது.

ஆய்வாளர்கள் மாதவன், ரமேஷ் ஆகியோர் முழங்காலை மடக்கியபடி கைகளை நீட்டியவாறு நிற்கச் சொல்வர். (அதாவது இருக்கையில் அமர்வது போன்ற பாவனையில்). அவ்வாறு நின்று கொண்டே இருக்க வேண்டும். அப்போது, எனது பின்னங்கால்களில் (ஆடுதசை) கழியால் அடிப்பார்கள். ஆய்வாளர்கள் செல்லத்துரை ஒரு பிவிசி பைப்பில் சிமெண்ட் அடைத்து, அதன் மூலம் எனது கை முட்டிகளை நீட்டச் சொல்லி அடிப்பார்.


(தொடரும்...)




பா.ராகவன்

**இந்தச்** செயற்பாடுகள் ஒழுங்காக நடைபெறும் பட்சத்தில் ஒட்டுமொத்த அரேபிய சமூகமும் இஸ்லாத்தில் இணைவதுபெரிய விஷயமாக இருக்காது என்றே அவர் கருதினார். ஏனெனில், 'மனப்பூர்வமாக அன்றி, உயிருக்கு பயந்தோ, தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவோ இஸ்லாத்தை ஏற்பது இறைவனாலேயே அங்கீகரிக்கப்படாது' என்ற பொருளில்வரும் குர் ஆனின் ஒரு வசனத்தின் மீது அவருக்கு அளப்பரிய நம்பிக்கை உண்டு.

இதன் அடிப்படையில்தான், அவர்தாம் கைப்பற்றும் தேசங்களில் உள்ள பிற இனத்தவர் அனைவரிடமும் 'உங்கள் உரிமைகள் அவசியம் பாதகாக்கப்படும்' பிக்கையுடனும், யுத்ததில் பங்கு பெற்ற இஸ்லாமிய வீரர்களின் ஆக்ரோஷமான தாக்குதலுக்கு முன்னால் பைசாந்திய இராணுவத்தால் தாக்குப்பிடிக்க இயலவில்லை. பல இடங் களில் தோல்வியை ஒப்புக் கொண்டுமண்டியிட்டார்கள். வேறு பல இடங்களில் வாளுக்கு இலக்காகி அவர்களது தலைகள் மண்ணைத் தொட்டன. (யுத்தத்தில் வாகனங்களாகப் பயன்படுத்தப்பட்ட மிருகங்களின் மீது தாக்குதல் தொடுப்பதில்லை என்பதை உமர் ஒரு கொள்கையாக வைத்திருந்ததாகச் சில ஆசிரியர்கள் எழுதியிருக் கிறார்கள். ஆனால் இதற்குத் தக்க ஆதாரங்களாக மிகப் பழைய – அதாவது கி.பி ஏழாம் நூற்றாண்டுக்கு மிக நெருக்கமான – பிரதிகளிலிருந்து எதையும் பெற இயலவில்லை)



என்று முதலில் சொல்லிவிடுவது வழக்கம்.இன்னும் ஒருபடி மேலே சென்று ஒருமுறை, "இஸ்லாமிய சாம்ராஜ்ஜியத்தின் பிரதிநிதியாக ஓர் ஆளுநரை நான் உங்களுக்கு நியமிக்கிறேன். அவரது பணி உங்கள் தோலைஉரிப்பதோ, உங்கள் சொத்தை அபகரிப்பதோ அல்ல. உங்கள் மார்கத்தை நீங்கள் பின்பற்றிச் செல்வதற்கு எந்த இடையூறும் இன்றிப்பாதுகாப்பது மட்டுமே. இதிலிருந்து எந்த ஆளுநராவது தவறுகிறார் என்றால் எனக்குத் தெரியப்படுத்துங்கள். உரிய தண்டனை அவருக்கு நிச்சயம் உண்டு" என்று பேசியிருக்கிறார்.

இந்த அறிவிப்புக்குப் பிறகுதான் எகிப்தின் மீது உமர் படையெடுத்தார். எகிப்தை அப்போது ஆண்டுகொண்டிருந்தவர்கள், பைசாந்தியர்கள்.

அன்றைய திகதியில் உலகின் மிக வலுவான இராணுவம் கொண்டதேசங்களுள் ஒன்ற எகிப்து. ரோமானிய இராணுவத்துக்கு அடுத்தபடி மிகப்பெரிய இராணுவமாக அதுஇருந்தது. பேரரசின் ஆண்டுச் செலவுக் கணக்கில் மூன்றிலொரு பங்கை இராணுவத்துக்குச் செலவழித்துக் கொண்டிருந்தார்கள்.

ஆனால், புதியதொரு பேரரசை நிறுவுவது என்கிற மாபெரும் கனவுடனும் தன்னம்

சரித்திரத்தில், மிகக் கடுமையான யுத்தங்கள் என்று வர்ணிக்கப்படுவனவற்றுள் ஒன்று இது. எத்தனை தினங்கள் நடைபெற்றன என்பது பற்றிய திட்டவட்டமான புள்ளி விபரங்கள் ஏதும் கிடைக்க வில்லையாயினும், மிகுந்த போராட்டத்துக்குப் பிறகே பைசாந்தியர்கள் தோல்வியைத் தழுவியதாகத்தெரிகிறது.

எகிப்துப் பேரரசின் மீதான உமரின் இந்தத் தாக்குதலை முதலில் வைத்துத்தான், வாள் முனையில் இஸ்லாத்தைப் பரப்பத் தொடங்கினார்கள் என்று மேற்கத்திய சரித்திர ஆசிரியர்கள் ஆரம்பிக்கின்றார்கள். ஆனால் யுத்தத்தின் இறுதியில் நடைபெற்ற சம்பவத்தை ஒருகணம் சிந்திக்க இயலுமானால் இந்த வாதத்தின் அடிப்படை நொறுங்கி விடுவதைப் பார்க்கலாம்.

அன்றைய எகிப்துப் பேரரசு என்பது இன்றைய நிலப்பரப்பு அளவே உள்ளதல்ல. வடக்கே பாலத்தைத் தாண்டி எகிப்து சிரியாவுக்கு அப்பாலும் சிறிது பரவியிருந்தது. வடகிழக்கில் ஜோர்டனின் சில பகுதிகளும் அன்றைய எகிப்தின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. இன்னும் எளிமையாகப் புரிய வேண்டுமானால் இப்படிச் சொல்லலாம். ஜெருசலேத்தை மையமாக வைத்து ஒரு வட்டம் போட்டால், அந்த முழு வட்டமும் எகிப்து சாம்ராஜ்ஜியத்துக்கு உட்பட்டதாக இருந்தது. (தொடரும்...)

# மலையக சனத்தொகை வீழ்ச்சி! ஏன்?

**எனவே** இதில் திறமையாக வாதிக்கக் கூடியதாக உள்ளது. சிங்கள - பௌத்த பெரும்பான்மையினர் தங்கள் உடனடி சுற்றுப்புறங்களில் மிகவும் நன்றாகவே வாழ்கிறார்கள். நாட்டிலுள்ள ஏனைய மூவின சிறுபான்மையினரும் பெருமளவில் செய்து வருவதைப்போன்ற, 'சிறந்த கல்வி' மற்றும் தொழில் தேடி உள்ளக புலம்பெயர்வுக்கு ஆளாகவேண்டிய அழுத்தம் அவர்களுக்கு இல்லை என்பதையே.

கடந்த 30 வருடங்களில் கொழும்பில் சனத்தொகைப் பெருக்கம். முறையே சிங்களவர்கள் 34.3 விகிதமாக உயர்ந்துள்ள அதே வேளை, அதற்கு எதிராக முஸ்லிம்களின் சனத்தொகை விகிதம் அதி உயர்ந்ததாக 73.7 விகிதத்தால் உயர்ந்து உள்ளது, இலங்கைத் தமிழர்களின் சனத்தொகை அதிகரிப்பு (வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள யுத்த நெருக்கடியின் அவசியம்



காரணமாக), 35.5 விகிதத்தால் அதிகரித்து உள்ளது. மற்றும் மலையகத் தமிழர்களின் அல்லது இந்திய வம்சாவளித் தமிழர்களின் சனத்தொகை 37.7 விகிதத்தால் உயர்ந்துள்ளது. இதில் மற்றொரு விடயமாக அரசாங்கம் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு சம்பந்தமான சனத்தொகை அடிப்படையான விவாதங்களில் எவ்வாறு இலங்கைத் தமிழர்கள் ஒருகாலத்தில் யுத்த வலயமாக இருந்த இடத்தைக்காட்டிலும் அதற்கு வெளியே அதிக அளவில் வாழ்ந்து வருகிறார்கள் எனச் சுட்டிக்காட்டி வருகிறது.

முஸ்லிம்களுக்கும் மற்றும் சிங்களவர்களுக்கும் அப்பால் இலங்கைத் தமிழர்களின் சனத்தொகை, மரணங்கள், வெளிநாட்டு புலம் பெயர்தல் உட்பட்ட நிரந்தர இடப்பெயர்வுகள் காரணமாக பெரிதும் பாதிப்படைந்துள்ளது. மற்றவைகளுடன் ஒப்பிடும் போது கணிசமான அளவில் 20.3 விகிதமே அதிகரித்துள்ளது. இந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களை கணக்கெடுப்பு நடத்தியதில் கடந்த 30 வருடங்களில் 1,886,900 என்பதிலிருந்து 2,270,900 ஆகவே உயர்ந்துள்ளது. சனத்தொகை வளர்ச்சி விகிதத்தை போர் பெரிதும் பாதித்திருக்கலாம். ஆனால் உண்மையான எண்ணிக்கையை அது பெரிதும் பாதிக்கவில்லை, இலங்கை தமிழ் கலாச்சாரத்தின் கோட்டையாகத் திகழ்வதும் மற்றும் சமூகம் சார்ந்த அரசியலை இயக்குவதுமான, யாழ்ப்பாணத்தை பார்த்தால், அது தொடர்ந்தும் நாட்டில் சனத்தொகை அதிகம் செறிந்து வாழும் இடங்களில் ஒன்றாகவே இருந்து வருகிறது (1981இல் கொழும்புக்கு அடுத்து இருந்த இரண்டாம் இடத்தை அது தவற விட்டிருந்த போதும்கூட). போரினால் சீரழிந்த வடமாகாணத்தில் உள்ள ஏனைய மாவட்டங்கள், மிகவும் குறைந்த சனத்தொகை அடர்த்தியுள்ளனவற்றில் சிலவாகவே உள்ளன. இதேபோல அவை இன்னமும் பல தசாப்தங்களுக்கு அல்லது வரும் நூற்றாண்டு வரும்வரையில் இருந்துகொண்டே இருக்கும்.

இன்னமும் மலையகத் தமிழர்களைப் பொறுத்தமட்டில் அதில் ஒரு ஆழ்ந்த மர்மம் சூழ்ந்துள்ளது. ஒரு 30 வருடகாலத்தில் அவர்களது சனத்தொகைப் பெருக்கம் மிகவும் வருந்தத் தக்க அளவில் மிகவும் சிறிய அளவான 2.8 விகிதத்தாலேயே அதிகரித்துள்ளது. இந்த எண்ணிக்கையானது சகல வழிகளினாலும் போரினால் பாதிக்கப்பட்டு, குறிப்பாக சனப்பெருக்கத்துக்கு காரணமான வயதுள்ள, ஆண்களும் மற்றும் பெண்களும் மரணத்தையும் இடப்பெயர்வையும் (வெளிநாடுகளுக்கும்கூட) சந்தித்த இலங்கைத் தமிழர்களைக் காட்டிலும் 10 மடங்கு சிறியது.

இதன்படி மலையகத் தமிழர்களின் சனத்தொகை 812,700 இலிருந்து 842,300 ஆக கடந்த முப்பது வருடங்களில் உயாந்துள்ளது. உண்மையில், இந்தச் சமூகம் அநேக எண்ணிக்கையிலானவர்களை, 1964ஆம் ஆண்டு இருநாட்டு பிரதமர்களினதும் பெயர்களினால் மேற்கொள்ளப்பட்ட சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தப்படி மேற்கொள்ளப்பட்ட உத்தியோகபூர்வ குடிபெயர்வு காரணமாக இந்தியாவுக்கு அனுப்பியதன்மூலம் இழந்திருக்கிறது. இன்னும் அநேகமானவாகள் இலங்கை சுதந்திரம் அடைந்த நாற்பதுகளின் பிற்பகுதியில் உருவான சட்டத்தின் பிரகாரம் அன்று முதல் பல தசாப்தங்களாக பிரஜா உரிமையற்றவர்களாகவே இருந்து வந்தார்கள். இருந்தாலும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரின் அரசாங்கங்கள் அந்த நாதியற்றவர்களுக்கு பிரஜா உரிமைகள் வழங்கி மேலும் அனைத்தையும் உள்ளடக்கிய சமூகமாக அவர்களை உள்வாங்கும் முயற்சிகளை ஆரம்பித்து வைத்தன.

ஆனால் எழுப்பப்படும் கேள்வி என்னவென்றால், இந்தியத் தமிழர்களின் ( சனத்தொகை படிவத்தில் குறிப்பிட்டுள்ளபடி) சனத்தொகையின் எண்ணிக்கை, இன்னமும் யதார்த்த கள நிலைமையில் உள்ளதைத்தான் பிரதிபலிக்கிறதா? என்பது தான். அது அப்படியானால்? அது ஏன்? கேள்விகள் இலகுவாக இருந்தாலும் அவற்றுக்கான பதில்கள் சிக்கலானவை. இங்கு புள்ளிவிபரங்கள் இதற்கான பதிலை வழங்கக்கூடிய நிலையில் இல்லை. இங்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பு போன்றவற்றுக்காக குறிப்பிடத்தக்க அளவிலானவர்கள் குடிபெயர்ந்துதுள்ளார்கள்,அந்த எண்ணிக்கை நியாயமாகவும் மற்றும் சரியாகவும் பரிசீலிக்கப்பட வேண்டும். இங்கு குடிசன மதிப்பு புள்ளி விபரங்கள் தயாராக உள்ள விடைகளை வழங்க முடியாது, இதற்கு சமூகவியல் கற்கைகள் மட்டுமே உதவ முடியும். அவைகள் பின்பற்றப்பட வேண்டும்.

இல்லையேல் ஐம்பதுகளில் நாடற்ற நிலையிலிருந்த இந்தியத் தமிழர்கள் தற்பொழுது தங்களை இலங்கைத் தமிழர்கள், என்று பதிவு செய்திருக்க வேண்டும் என்று நம்பப்படுகிறது. ஏனென்றால் தாங்கள், தங்கள் முன்னோர்களின் தாய் நாடானதும், ஆனால் தற்போது இங்கு இருக்கும் அந்த நாளைய இளைய தலைமுறையினருக்கு இன்னமும் ஒரு அன்னிய தேசமாக உள்ள இந்தியாவுக்கு நாடு கடத்தப் படுவதைத் தவிர்ப்பதற்காகவும் அவர்கள் அவ்வாறு செய்திருக்கலாம்.

மலையகத் தமிழர்களின் அடையாளமாக பிரதானமாக, சாதி மற்றும் கல்வித் தரங்கள் என்பன இங்கு செல்வாக்கு செலுத்தி, குறிப்பாக அநேகரை தங்களை வெளிப்படுத்தவைத்து அவர்களை சமூக உணர்வுகளுடன் இணைக்கின்றன. கொழும்பு மற்றும் தமிழ் பகுதிகளில் வழக்கமாக இலங்கைத் தமிழரின் அடையாளங்களை கடன்வாங்க வைக்கின்றன. இதன்படி இது சிறிய எண்ணிக்கையாக இருந்தாலும் ஒரு சிங்க, பௌத்த அடையாளம் கூட மாறியிருப்பதற்கான சாத்தியம் உள்ளதாக நம்பப்படுகிறது. திருமணங்கள் மற்றும் குடியேற்றங்கள் கூட குறிப்பாக இறுதியில் கூறப்பட்ட விடயத்துக்கு உதவியாக அல்லது வசதியாக இருந்துள்ளது.

இருந்தாலும், அது இத்துடன் முடிந்து விடவில்லை. இந்தியத் தமிழர்களை ஆரம்பத்திலிருந்தே நாடற்றவர்கள் மற்றும் வாக்குரிமையற்றவர்கள் என்ற நிலைக்குத் தள்ள, சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்தே அரசாங்கங்கள் திட்டமிட்டு செயற்பட்டதால், சிலர் தாங்கள் பிரதானமாக வாழ்ந்த மலைப் பிரதேசமான மத்திய மாகாணத்தை விட்டு, ஒரு காலத்தில் சன அடர்த்தி குறைவாக இருந்த வட மாகாணத்தின் வன்னிப் பகுதியில் குடியேறினார்கள். தமிழர் எதிர்ப்பு கலவரங்கள், மலையகத் தமிழர்களையும் விட்டு வைக்காதபடியால், வன்னிப்பகுதியை நோக்கி இடைப்பட்ட தசாப்தங்களில் அவர்கள் பெருமளவில் குடிபெயர அதுவே முக்கிய காரணமாயிற்று.

நன்றி : இணையம்

(தொடரும்...)

# மகிந்தவின் இந்திய விஜயமும் ஜெயாவின் போலி அரசியலும்!

**அலசுவது மதியூகி**

**இலங்கையின்** தற்போதைய நிலைதொடர்பில் தமிழ் நாட்டு கட்சிகள் தெரிந்து நடக்கின்றனவா? தெரியாமல் நடக்கின்றனவா? என்பதை நீண்ட காலமாகவே புரிந்துகொள்ள முடியவில்லை.

இந்திய மத்திய அரசு இலங்கை அரசுடன் நெருக்கமான உறவை கொண்டிருக்கின்றது. இந்தியாவின் தென் மாநிலமான தமிழ் நாட்டு மக்களோ இலங்கை அரசு குறித்து ஆழமான சிந்தனை இல்லாமல் உணர்ச்சி கொந்தளிப்புக்களை கொட்டிக் கொண்டிருக்கின்றது.

தி.மு.க அல்லது அ.தி.மு.க ஆகிய கட்சிகளே மாறிமாறி ஆட்சிக்கு வருகின்றன. அந்தக் கட்சிகள் ஆளும் கட்சியாக இருக்கும்போது அறிக்கைவிடுவதையும், மத்திய அரசுக்கு கோரிக்கை விடுவதையும் இலங்கை தமிழர்களுக்கான குரலாக பதிவு செய்கின்றன.

அதே கட்சி எதிர்க்கட்சியாக இருக்கும் போது. இலங்கை தமிழர்களுக்கு தனியான ஆட்சி அதிகாரம் தீர்வாக வழங்கப்பட வேண்டும் என்றும் தாம் ஆட்சிக்கு வந்தால் அதை நிறைவேற்றுவதாகவும் கூறுவார்கள்.

இந்த இரண்டு பிரதான கட்சிகளும் இப்படியே நடந்துகொள்வது வழமை ஆகிவிட்டது. இவர்கள் தவிர வைகோபால சாமி, சீமான், வீரபாண்டியன், இராமதாஸ், திருமாவளவன், நெடுமாறன், போன்றோர் காலத்துக்குக் காலம் ஆர்ப்பாட்டம் செய்வதையும், அறிக்கைவிடுவதையும் அரங்கேற்றிக் கொண்டிருக்கின்றனர்.

இலங்கை தமிழ் மக்களுக்காக இவர்கள் செய்வதை எல்லாம் இன உணர்வின்பால் புரிந்துகொள்வதாக இந்திய மத்திய தகவல்துறை அமைச்சர் மனீஸ் திவாரி அண்மையில் தெரிவித்திருந்தார். அதே வேளையில் தமிழக மக்களின் உணர்வு வெளிப்பாட்டை மத்திய அரசு உதாசீனம் செய்யவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதிலிருந்து நம்மால் புரிந்துகொள்ள முடிந்தவற்றில் ஒன்று, தமிழக மக்களின் உணர்வுகளை இந்திய மத்திய அரசு முற்றாக நிராகரிப்பதில்லை. ஆனால் மத்திய அரசை எவ்வாறு இலங்கை தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் அணுகுவது என்பதை தமிழக மக்கள் புரிந்து கொள்ளவில்லை.

இந்தக் கட்சிகள் தமது அரசியலைத் தவிர்த்து உண்மையான அர்ப்பணிப்போடு இலங்கை தமிழர்களுக்கான அரசியல் உரிமைகளுக்காக தமது பங்களிப்பைச் செய்ய முற்படவில்லை. இந்திய மத்திய அரசுடன் உணர்ச்சிகளுக்கு அப்பால் நடைமுறை சாத்தியங்களுடனோ, நியாயத்துடனோ இக்கட்சிகள் தமது அழுத்தங்களை முன்வைக்கவில்லை.

புலிகள் போரியல்ரீதியாக தோற்கடிக்கப்பட்ட பின்னர் இலங்கை அரசியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும். இலங்கை தமிழ் மக்கள் தற்போது எதிர்கொண்டு நிற்கும் அரசியல் சவால்கள் பற்றியும் தமிழக அரசியல் கட்சிகள் சரியாக தெரிந்திருக்கவில்லை.

முன்னர் புலிகளினால் அச்சுறுத்தல் இருந்ததை காரணம் காட்டிய இவர்கள், யுத்தம் முடிவுக்கு வந்து நான்கு வருடங்களாகி விட்டுள்ளபோதும் இதுவரை கலைஞரோ, ஜெயலலிதாவோ நேரடியாக இலங்கைக்கு வரவும் இல்லை. இலங்கை தமிழ் மக்களின் வாழ்விடங்களின் நிலைமையை பார்க்கவும் இல்லை.


உண்மையிலேயே இலங்கை தமிழ் மக்கள் மீது அவர்களுக்கு அக்கறை இருந்தால், அன்பு இருந்தால், இனம் சார்ந்த உணர்வு இருந்தால் முதலமைச்சர்கள் என்றவகையில் இலங்கைக்கு வருகை தந்து நிலைமையை ஆராயவேண்டும்.

கலைஞரை இப்போது அழைப்பது பொருத்தமற்றது. வரவும்மாட்டார். அவர் இலங்கை தமிழ் மக்களுக்கு தனிநாடு கிடைக்கவேண்டும் என்பார். அந்த தனிநாடு எப்படியானது. அங்கே வாழும் மக்களின் நிலைமை என்ன என்பதை பார்க்க மாட்டார். ஆனால் உண்ணாவிரதமிருப்பார். டெசோ மாநாடு நடத்துவார். மகன் ஸ்டாலினை ஐ.நா. சபைக்கு மகஜருடன் அனுப்புவார். இந்திய மத்திய அரசுக்கு கோரிக்கை விடுப்பார். அத்தோடு கலைஞரின் இலங்கை தமிழர்கள் மீதான உணர்வுகள் சாந்தமடைந்துவிடும்.

முதலமைச்சர் ஜெயலலிதா கடந்த காலங்களில் எப்படி நடந்து கொண்டார் என்பதை ஆராய இது நேரமில்லை. இருந்தாலும் சிலவற்றை சுருக்கமாக அண்மையில் கலைஞர் வெளியிட்ட அறிக்கை கோடிட்டுக்காட்டியுள்ளது. அதாவது 2002ஆம் ஆண்டு சட்டப் பேரவையில் தீர்மானம் ஒன்றை முன்மொழிந்தார். அதில் புலிகளின் தலைவர் பிரபாகரனை இலங்கை அரசு கைதுசெய்து இந்திய அரசிடம் ஒப்படைக்கவேண்டும். இலங்கை அரசினால் அது முடியாது போனால், இந்திய மத்திய அரசு இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பி பிரபாகரனை சிறைப் பிடிப்பதற்கு முயற்சிக்க வேண்டும், பிரபாகரை இந்திய நீதிமன்றில் நிறுத்தி விசாரணை செய்து உரிய தண்டனை வழங்கவேண்டும், தடை செய்யப்பட்ட புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த எவரையும் இந்தியத் திருநாட்டிற்குள் நுழைய அனுமதிக்கக் கூடாது. இப்படியெல்லாம் புலிகளின் பயங்கரவாதத்தை எதிர்க்கும் ஒருவராக ஜெயலலிதா இருந்துள்ளார்.

ஜெயலலிதாவின் இந்த நிலைப்பாட்டை சுட்டிக்காட்டிய கலைஞர் தற்போது புலிகளை ஜெயலலிதா ஆதரிப்பதுபோல் விளக்கமளிக்க முயற்சிக்கின்றார். அப்படி என்றால் மூத்த அரசியல் தலைவரான கலைஞர் தற்போது நியாயம் கேட்டு தனித்து நிற்கும் தமிழ் மக்களையும் புலிகள் என்று நினைக்கின்றாரோ என்று சந்தேகம் எழுகின்றது. கலைஞரைப் போல் இலங்கைத் தமிழ் மக்களை ஒட்டுமொத்தமாக புலிகள் என்று இலங்கை அரசும் இந்தியா உள்ளிட்ட சர்வதேசமும் நினைத்தால் பயங்கரவாத இனமாக கருதி ஒதுக்கி வைத்துவிடும் என்ற யதார்த்தத்தை தமிழகக் கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஜெயலலிதா புலிப் பயங்கரவாதத்தை எதிர்த்தது சரியே. ஆனால் இலங்கை தமிழ் மக்களுக்கு எதையும் செய்யவில்லை. ஆட்சிக்கு வருவதற்கான தேர்தல் பிரச்சார மேடையில் தான் ஆட்சிக்கு வந்ததும் இலங்கை தமிழ் மக்களுக்கு தனிநாட்டை பெற்றுக்கொடுக்கப்போவதாக முழங்கினார். அவர் அவ்வாறு கூறியதை அப்படியே



விழுங்கிக் கொண்டு சீமான் போன்றவர்களும் ஜெயலலிதாவுக்கு வாக்கு சேகரித்துக் கொடுத்தனர்.

கலைஞர் உண்ணாவிரத நாடகமாடினார், யுத்தத்தின் இறுதித் தருணத்தில் புலிகளும், அப்பாவி தமிழ் மக்களும் அழிந்தபோது அதை கலைஞர் யுத்தத்தின் பங்காளியாக செயற்பட்ட இந்திய மத்திய அரசிடம் கூறி தடுத்திருக்கவில்லை என்றெல்லாம் உணர்ச்சி எரிமலையாக வெடித்தார்கள்.

ஜெயலலிதா வெற்றி பெற்றார். பின்னர் இலங்கை தமிழ் மக்களுக்கு தனிநாடு பெற்றுத் தருவதாக கூறிய வாக்குறுதிகளை மறந்துவிட்டார். அல்லது அது தன்னால் முடியுமான காரியமல்ல என்பதை புரிந்துகொண்டார். சட்ட சபையில் இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடையைக் கொண்டுவர வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றினார். அந்த தீர்மானத்தை இந்திய மத்திய அரசு கண்டு கொள்ளவில்லை என்று கூறினார். ஐ.நா. சபையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரவுள்ள தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டார். இந்திய மத்திய அரசு இறுதிவரை மௌனமாக இருந்துவிட்டு இலங்கை அரசுக்கு சில யதார்த்தத்தைப் புரியச் செய்வதற்காக அந்த தீர்மானத்தை ஆதரித்தபோது, தான் கோரியதாலேயே இந்தியா அமெரிக்காவின் தீர்மானத்தை ஆதரித்தது என்று உரிமை கோரமுடியாமல் விழித்து நின்றார்.

இந்திய மத்திய அரசுடன் பங்காளியாக இல்லாமல் எதிர்க்கட்சியாக இருந்து கொண்டு அப்படிச் செய்யுங்கள், இப்படிச் செய்யுங்கள் என்று ஜெயலலிதா தமிழகத்திலிருந்து கூச்சல் போடுவதால் பலன் ஏதுமில்லை. பங்காளியாக இருக்கும் கலைஞர் கூறினாலே கண்டு கொள்ளாத இந்திய மத்திய அரசு இதை எப்படி கண்டுகொள்ளும்.

இந்திய மத்திய அரசு அயல் நாட்டு உறவு, பிராந்திய பாதுகாப்பு, பொது வர்த்தகம், பொருளாதார திட்டங்கள், இந்தியாவின் ஒருமைப்பாடு, ஜனநாயக அணுகுமுறைகள் எனப் பலவற்றையும் ஆழமாக சிந்தித்தே முடிவுகளை எடுத்து வருகின்றது. அதில் இலங்கை தமிழர்களுக்கான தனியான தீர்மானங்களுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க ஒன்றுமில்லை. தனது கண்ணத்தில் அடிக்கடி அறையும் பாகிஸ்தானையும், சீனாவையுமே உணர்ச்சிகளுக்கு முன்னுரிமை கொடுக்காமல் மிகுந்த பெருமையோடு கையாளும் இந்திய மத்திய அரசு அடிக்கடி தனக்கு ஏமாற்றத்தை பரிசளிக்கும் இலங்கை அரசு தொடர்பில் சீறிப்பாய்ந்துவிடுமா? தமிழ் நாட்டு சிலுசிலுப்புக்களுக்கு எடுபட்டு இந்திய மத்திய அரசு தம்மீது சீறிப்பாய்ந்துவிடாது என்பது இலங்கை அரசுக்கும் நன்றாகத் தெரியும். இவை எல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாக கூறுவதானால் அதுதான் இராஜதந்திரம் என்கின்றனர்.

இந்த நிலையிலேயே இம்மாதம் எட்டாம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயமும் அங்கு தமிழகக் கட்சிகளால் காட்டப்பட்ட எதிர்ப்புகளும் பார்க்கப்பட வேண்டும்.

ஜனாதிபதி மகிந்த இந்தியாவின் புத்தகாயாவிலுள்ள மகாபோதி விகாரைக்கு சென்றிருந்தபோது வைகோபால சாமி ஒரு குழுவாகவும், சீமான் ஒரு குழுவாகவும் வீதியில் இறங்கி இலங்கை ஜனாதிபதிக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்கள். அவர்களின் ஆதரவாளர்களும் ஆங்காங்கே உருவ பொம்மை இலங்கை ஜனாதிபதியின் உருவப் பொம்மை எரித்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்கள். அன்றைய நாளில் கலைஞரும் தனது பங்குக்காக டெசோ மகாநாட்டுக் குழுவை கூட்டி கண்டனக் கூட்டத்தை நடத்தினார்.

அதே நாளில் ஜெயலலிதாவும் தனது அரசியலை விட்டுவிடவில்லை. ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான பதிலுரையில், இடம்பெயர்ந்து முகாம்களில் வசிக்கும் தமிழர்கள் தங்கள் சொந்த இடங்களில் மீண்டும் குடியமர்த்தப்படவேண்டும், அவர்கள் சிங்களவர்களுக்கு இணையாக அனைத்து உரிமைகளுடனும் வாழ வேண்டும், என்றும் இலங்கை அரசின் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட வேண்டும். இலங்கையில் இனப்படுகொலை நிகழ்த்தி போர்க்குற்றம் புரிந்தவர்களை போர்க் குற்றவாளிகள் என்று பிரகடனப் படுத்த ஐக்கிய நாடுகள் சபையை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் என்று கருத்துக் கூறியிருந்தார்.

ஜெயலலிதா இவ்வாறு கூறியிருந்தாலும் அவை இலங்கை தமிழ் ஊடகங்களில் முன்னுரிமைப்படுத்தப்பட்ட அளவுக்கு தமிழகத்தில் பரபரப்பை ஏற்படுத்தவில்லை. அன்று பிரபாகரனை பயங்கரவாதி என்று ஜெயலலிதா கூறியபோது, இராட்சசி என்று வர்ணித்த இதே தமிழ் ஊடகங்கள் இன்று தூக்கிவைத்து கொண்டாடுகின்றன. இதுதான் இன்றைய தமிழ்த் தேசிய கொள்கை நிலைப்பாடு.

தமிழகத்தின் உணர்வுகளையும், இலங்கை தமிழ் மக்கள் தொடர்பான தலையீட்டுத் தேவையையும் இந்திய மத்திய அரசு நிராகரிக்காவிட்டாலும், ஜெயலலிதாவின் கோரிக்கைகளை அலட்டிக்கொள்ளாது. இது ஜெலலிதாவுக்கும் தெரியும். தெரிந்தாலும் அலுக்காமல் இலங்கை தமிழர்கள் தொடர்பில் ஏதாவது ஒன்றை கூறிக் கொண்டிருப்பதுதான் இவரின் இராஜதந்திரம்.

தமிழத்தில் காட்டப்பட்ட எதிர்ப்புகள் தொடர்பில் ஜனாதிபதி மகிந்தவிடம் இந்தி ஊடகங்கள் கேட்டபோது இதுமாதிரியான எதிர்ப்புகள் பல நாடுகளில் காட்டப்படுகின்றது. அவற்றையிட்டு நான் பொருட்படுத்துவதில்லை. இவ்வாறான போராட்டங்கள் இங்கிருக்கும் ஜனநாயகத்தின் வெளிப்பாடுகள் என்று கூறியதோடு இங்கே எதிர்ப்புக் காட்டுகின்றவர்கள் இலங்கைக்கு வருகை தந்து அங்குள்ள உண்மையான நிலவரத்தை பார்க்கட்டும் என்றும் கூறியிருந்தார்.

ஜனாதிபதியின் இந்த பதிலைக் கேட்டு அவருக்கு எதிர்ப்பு தெரிவித்தவர்கள் தமக்குள் சிரித்திருப்பார்கள். தமது எதிர்ப்புகள் ஒருவித தாக்கத்தையும் ஏற்படுத்துவதாக இல்லையே என்று அவர்கள் சிந்தித்திருக்க வாய்ப்பில்லை. அதுக்காக அந்த ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படவுமில்லை.

இலங்கை ஜனாதிபதியின் அழைப்பை முன்னர் கலைஞர் தெரியாத மாதிரியே தட்டிக்கழித்து தப்பித்துக் கொண்டார். பிற தமிழக கட்சிகள் இலங்கை வரப்போவதில்லை அதற்காக வெளிநாட்டுப்பணம் அவர்களுக்கு வழங்கப் படுவதில்லை. ஆனால் தற்போது முதலமைச்சராக இருக்கும் ஜெயலலிதா நினைத்தால் இலங்கை ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று இலங்கைக்கு வருகை தரலாம்.

அவர் இலங்கை வரும்போது அவருக்கு எதிராக கடும்போக்கு சிங்கள அமைப்புக்கள் எதிர்ப்புக் காட்டத்தான் செய்யும். எது விதைக்கப்பட்டதோ அதுதானே அறுவடையும் செய்ய வேண்டியிருக்கும். ஆனாலும் முதலமைச்சருக்கான அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளும் நிச்சயம் இருக்கும். அதில் எந்த சந்தேகமும் இல்லை. அழைப்பை சவாலாக ஏற்றுக் கொண்டு ஜெயலலிதா இலங்கை வருவாரா? தனக்கு எதிர்ப்பு இருக்கும் என்று தெரிந்தே இலங்கை தமிழர்களுக்காக வருகை தந்து அடியும் வாங்கிய இந்தியாவின் பெருந்தலைவர் ராஜிவ் காந்தி அளவுக்கு துணிவு இவர்களுக்கு இருக்குமென்று எதிர்பார்க்க முடியாது.

இலங்கைக்கு வருகை தராமல் அங்கேயே இருந்துகொண்டு எத்தனை சிவ தாண்டவங்களை ஆடினாலும் அவை அனைத்தும் போலி அரசியல் நாடகங்களே அன்றி வேறொன்றுமில்லை.



**இடம்யெர்ந்து முகாம்களில் வசிக்கும் தமிழர்கள் தங்கள் சொந்த இடங்களில் மீண்டும் குடியமர்த்தப்படவேண்டும், அவர்கள் சிங்களவர்களுக்கு இணையாக அனைத்து உரிமைகளுடனும் வாழ வேண்டும், என்றும் இலங்கை அரசின் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட வேண்டும். இலங்கையில் இனப்படுகொலை நிகழ்த்தி போர்க்குற்றம் புரிந்தவர்களை போர்க்குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும்.**

# அமெரிக்க - இஸ்ரேல் பொறிக்குள் சிக்குமா ஈரான்?

**"ஆம். நாங்கள் அணுகுண்டு தயாரித்திருப்பது உண்மைதான். அமெரிக்காவால் என்ன செய்ய முடியும்?" என்று ஈரான் அதிபர் மகமூத் அகமதி நிஜாத் வெளிப்படையாக கடந்த ஆண்டு எழுப்பி இருந்த கேள்வி, உலகெங்கும் ஒரு பரபரப்பை ஏற்படுத்தியது. மூன்றாம் உலகப்போரை நோக்கி உலகம் நகர்கிறதோ என்னும் அச்சம் ஏற்பட்டது.**

தொகுப்பு: வேணுகிருஷ்ணா

**20ஆம்** நூற்றாண்டு இருபெரும் உலகப் போர்களைச் சந்தித்தோம். அடுத்த போர் வந்துவிடுமோ என்று 1950களில் உலகம் அஞ்சி நடுங்கியது. ஆனால், 20ஆம் நூற்றாண்டின் இறுதிவரையில் அப்படி ஏதும் நடந்துவிடவில்லை.

ஆனாலும், இரு வல்லரசுகளாகத் திகழ்ந்த அமெரிக்காவும், சோவியத்தும் பனிப்போர் ஒன்றை நடத்திக்கொண்டேதான் இருந்தன. சில வேளைகளில் தங்களின் வலிமையை வியட்நாம் போன்ற அயல்நாடுகளில் சோதித்துப் பார்த்துக் கொண்டன. இறுதியாக 1990ஆம் ஆண்டு அப்பனிப் போர் ஒரு வழியாக முடிவுக்கு வந்தது. சோவியத் 14 துண்டுகளாக உடைந்து சிதற, அமெரிக்காவே உலகின் ஒற்றை வல்லரசாய் முடிசூடிக்கொண்டது.

**கிழக்கில் ஒரு இராட்சதன் பதுங்கி இருக்கிறான். என்றேனும் ஒருநாள் அமெரிக்காவுக்கு எதிராய் அவன் எழுவான் என்று வரலாற்று**

இஸ்ரேலின் இரகசியப் போர்களுள்' என்னும் புத்தகம் சந்தேகத்திற்கு இடமின்றி, இஸ்ரேலின் உளவுத் துறைப் பிரிவான மொசாட் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஈரானின் உயர்மட்ட அணுசக்தி விஞ்ஞானிகளை அந்நாட்டின் அணுசக்தித் திட்டத்தை சேதப்படுத்துவதை நோக்கம் கொண்ட பரந்த செயற்பாடுகளின் ஒரு பகுதியாக படுகொலை செய்துள்ளது எனத் தெரிவிக்கிறது.

'ஆர்மகெடோனுக்கு எதிரான உளவாளிகள்' என்ற நூலை எழுதிய ஆசிரியர்கள் மொசாட்டின் குற்றத் தன்மையை அம்பலப்படுத்த முயலும் இடதுசாரிகள் அல்ல. இவர்கள் மொசாட் இஸ்ரேலுக்குச் செய்யும் பணிகளைப் பெருமைப்படுத்துகின்றனர். 2009 ஏப்ரல் மாதம் "நெத்தென்யாகு ஈரான் மீது தாக்குதல் நடத்தவேண்டும் என நான் ஆலோசனை கூறுவேன். அத்தகைய நடவடிக்கை மேற்கிற்கும் அரபு உலகிற்கும் நலன்களை அளிக்கும், ஆனால் அதை அவர்கள் ஒப்புக்கொள்ள இயலாது" என்ற தலையங்கம் கொடுத்து Haaretz இல் எழுதிய கட்டுரை ஒன்றில் ஆத்திரமூட்டப்படாத போரை இஸ்ரேல் நடத்த வேண்டும் என்பதற்கு ஆதரவு




முடிவடைந்தது. ஏனெனில் அவர் உரிய நேரத்தில் காரில் இருந்து குதித்துத் தப்ப முடிந்தது.

ஜூலை 2011ல் தெஹ்ரானில் துப்பாக்கிதாரிகள் இயற்பியல் வல்லுனர் டாக்டர் தாரியௌஷ் ரேஜாயைச் சுட்டுக் கொன்றனர்.

தன்னுடைய வீட்டில் வெப்பக்கருவி ஒன்றில் இருந்து வெளிப்பட்ட காபன் மானொ ஒக்ஸைடின் (carbon monoxide) விளைவினால் மற்றொரு விஞ்ஞானி இறந்து போனார்.

**மொசாட்டின் பிற மூலோபாயங்களுள்**

சில ஆண்டுகளாக இஸ்ரேல் அணுவாயுதம் தயாரிப்பதில் தெஹ்ரான் "ஓராண்டுதான் தள்ளி உள்ளது" என்று கூறிவந்தது. அமெரிக்காவின் "பயங்கரவாதத்தின் மீதான போர்" என்ற பாசாங்குத்தனத்திற்கு இது இயைந்தும் உள்ளது. ஏனெனில் அமெரிக்கா இதே நேரத்தில் அது அகற்ற விரும்பும் இலக்கு கொண்ட ஆட்சிகளுக்கு எதிராக நடத்தப்படும் பல பயங்கரவாத நடவடிக்கைகளை ஆதரிக்கிறது. செய்தி ஊடக விமர்சகர்கள் தெஹ்ரானுக்கு எதிரான இடையறா ஆத்திரமூட்டல்களுக்கான உண்மையான காரணத்தை விளங்கப்படுத்துவதும் இல்லை. (அதாவது மத்திய கிழக்கு மற்றும் கஸ்பியின் பகுதியில் தன் மேலாதிக்கத்தை நிலைநிறுத்த விரும்பும் அமெரிக்காவின் உறுதிப்பாடு பற்றி.)

1979ம் ஆண்டு ஷாவின் ஆட்சி வீழ்த்தப்பட்டதில் இருந்து, வாஷிங்டன், அமெரிக்க மூலோபாய நலன்களுக்கு ஈரான் கொடுக்கும் சவாலை அகற்ற உறுதிகொண்டுள்ளது. எதிர்பார்ப்புக்களுக்கு மாறாக, ஈராக் மீதான போர் இப்பிராந்தியத்தில் ஈரானின் நிலைப்பாட்டை வலுப்படுத்த உதவி விட்டது. இதுவும் நீண்டகால அமெரிக்க நண்பர்களான ஜைன் எல் அபிடைன் பென் அலி துனிசியாவிலும், எகிப்தில் ஹொஸ்னி முபாரக்கும் வீழ்த்தப்பட்ட வெகுஜன இயக்கமும் வளைகுடாப் பகுதியில் அமெரிக்க நட்பு நாடுகளின் உறுதிப்பாட்டை குலைக்கும் அச்சுறுத்தல்களைக் கொண்டுள்ளன. இது தெஹ்ரான் மீது இன்னும் பொறுப்பற்ற முறையில் தன் செயல்களை அமெரிக்கா தொடர வழிவகுக்கும்.

**மத்திய கிழக்கின் முழு வரைபடத்தையும் மறுபடி வரையும் முயற்சியில் வாஷிங்டன்**



**ஆசிரியர்கள் சீனாவைக் குறிப்பிடுவார்கள். இப்போது அந்த அரக்கன் வெளிப்பாடு தெரிகிறது. சீனாவின் பின்புலத்தில்தான், ஈரான் அதிபர் அமெரிக்காவை எதிர்க்கத் துணிந்துள்ளார் என்பது தெளிவாகிறது. அதனை அவர் மறைக்காமல் வெளிப்படுத்தியும் இருக்கிறார்.**

அண்மைக் காலமாகவே அமெரிக்கா இஸ்லாமிய நாடுகளின் மீது போர் தொடுப்பதை ஒரு வழக்கமாகக் கொண்டுள்ளது. அதிபர்களாக இருந்த இரண்டு புஷ்களும் படையெடுப்பில் பேரார்வம் காட்டினர். 1990களின் தொடக்கத்தில், ஈராக்கின் மீது அமெரிக்கா போர் தொடுத்தது. அப்போது அது முழுமை பெறாவிட்டாலும், பத்தாண்டுகளுக்குப் பிறகு அவ்வெண்ணம் நிறைவேறியது. அதுபோலவே ஆப்கானிஸ்தான் மீதும் கடும் யுத்தம் ஒன்றை அமெரிக்கா மேற்கொண்டது. லிபியாவுக்குள் அமெரிக்கத் தலையீடு, சிரியாவுக்குள் அமெரிக்க தலையீடு, அந்த வரிசையில் அடுத்து ஈரான்தான் என்னும் எண்ணம் உலக நாடுகளுக்கு இருக்கிறது.

ஈரான் அணுகுண்டு தயாரிக்கிறது. அதை நாங்கள் கண்டுபிடித்து உலகுக்கு அறிவிப்போம் என அமெரிக்கா சொல்லிக் கொண்டிருந்தது. உலகையே அதிர வைக்கும் வகையில், கடந்த ஆண்டு ஈரானின் அதிபர் அது உண்மைதான் என அறிவித்திருந்தார். அதுமட்டுமல்லாமல் ஐந்து ஐரோப்பிய நாடுகளுக்கு எரிபொருள் வழங்கவும் தடை விதித்திருந்தார்.

**"இஸ்ரேல் தாக்குதல் நடத்தினால் அதை முற்றிலுமாக அழித்து விடுவோம்" - ஈரான் ஜனாதிபதி"**

**இப்போது ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தினால் இஸ்ரேலை முற்றிலுமாக அழித்து விடுவோம் என ஈரான் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.**

ஈரான் நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடவும், ஈரான் மீது தாக்குதல் நடத்தவும் இஸ்ரேல் நினைத்துக் கொண்டுள்ளது. அப்படி தாக்குதல் நடத்தினால் ஈரானின் பதிலடி எப்படி இருக்குமோ? எதிர் விளைவு என்ன ஆகுமோ? என்ற அச்சத்திலும் இஸ்ரேல் உள்ளது.

ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்த தயாராகி வருகிறது என்று ஈரான் புரட்சி படைகளின் தளபதி அல்-ஆலம் 2012 செப்ரெம்பரிலும் நிருபர்களிடம் கூறியிருந்தார்.

**"இஸ்ரேல் போர் தாக்குதலில் ஈடுபடத் தயாராகிவருகிறது. எங்கள் மீது தாக்குதல் நடத்தினால், நாங்கள் பார்த்துக்கொண்டு சும்மாயிருக்கமாட்டோம். அமெரிக்காவுக்கு தெரிந்தோ, தெரியாமலோ இந்தத் தாக்குதல் நடைபெற்றாலும் பஹ்ரைன், கத்தார் மற்றும் ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்கத் தளங்களை நாங்கள் தகர்ப்போம்."**

**"எங்களது தாக்குதல் எந்தவகையில் இருக்கும் என்று இஸ்ரேல் கற்பனை செய்து கூட பார்க்க முடியாத அளவுக்கு கடுமையான சேதங்களை ஏற்படுத்துவோம். இவை அனைத்தும் எப்போது வேண்டுமானாலும் நடைபெறும். ஆனால் எப்போது, எங்கு என்பதைக் கூற முடியாது" என்று ஈரானில் உள்ள புரட்சிப் படையின் ஜெனரல் முகம்மது அலி ஜபாரி கடந்த ஆண்டு நிருபர்களிடம் தெரிவித்தார்.**

**மொசாட் பற்றிய புத்தகம் ஈரானிய அணுசக்தி விஞ்ஞானிகளை இஸ்ரேல் படுகொலை செய்ததை உறுதிப்படுத்துகிறது.**

'ஆர்மகெடோனுக்கு எதிரான உளவாளிகள்:

கொடுத்துள்ளது இதற்கு சான்றாகும்.

**ஈரானியப் பின்னணி கொண்ட இஸ்ரேலியர்கள்**

**பெரும்பாலான கொலைகாரர்கள் ஈரானியப் பின்னணி கொண்ட இஸ்ரேலியர்கள். ஒரு வேளை இரட்டை பிரஜாவுரிமை கொண்டவர்களாக இருக்கக் கூடும், ஈரானிய கடவுச்சீட்டையும் வைத்திருக்கலாம் என்று புத்தகம் தெரிவிக்கிறது. 1979 புரட்சிக்குப் பின் பல்லாயிரக் கணக்கான யூதர்கள் ஈரானை விட்டு நீங்கினர், இஸ்ரேலுக்குப் பலர் வந்துவிட்டனர். அவர்களில் சிலரை மொசாட் தேர்ந்தெடுத்து, பயிற்சி கொடுத்தது. அல்லது அவர்களுடைய பார்சி மொழி பேசும் குழந்தைகளுக்கு பயிற்சி கொடுத்தது. இந்த முகவர்கள் வாடிக்கையாக பல பாதைகள் மூலம் ஈரானுக்குச் செல்லுகின்றனர். இப்பாதைகள் குர்திஷ் பிராந்தியம் மற்றும் அஜெர்பைஜான் போன்ற இஸ்ரேல் நெருக்க மான உறவுகளைக் கொண்ட கஸ்பியன் பகுதியில் சில நாடுகள் ஆகியவற்றில் உள்ளன.**

விக்கிலீக்ஸ் வெளியிட்ட 2007ம் ஆண்டு அமெரிக்க வெளிவிவகாரத் துறையின் இரகசியத் தந்தித் தகவல்கள் ஈரானில் பலூச்சி, அஜேரி, குர்திஷ் சிறுபான்மையினர் போன்ற அதிருப்தியடைந்துள்ள சிறுபான்மை குழுவினருடன் மொசாட் பிணைப்புக்களை நிறுவத் திட்டமிட்டிருந்தது எனக் காட்டுகின்றன. இதைத்தவிர இஸ்லாமியக் குழுக்களும் உள்ளன. இதன் நோக்கம் ஈரா-னின் அணுசக்தித் திட்டத்தை தாமதப்படுத்துவது ஆகும்.

**கொல்லப்பட்ட ஈரானிய விஞ்ஞானிகள்**

அணுசக்தி விஞ்ஞானி பேராசிரியர் மொஸ்தபா அஹ்மதி ரோஷன் என்னும் 32 வயதுக்காரர், அவருடைய காரில் மோட்டார் சைக்கிள்காரர் ஒரு காந்தசக்திக் கருவியை பொருத்தியதை சிலர் பார்த்தபின், அக்கார்க்குண்டினால் கொல்லப்பட்டார். ரோஷன் ஒரு தெஹ்ரான் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியாராக இருந்ததுடன், நடன்ஸில் இருக்கும் யுரேனிய அடர்த்தி நிலையத்தில் ஒரு மேற்பார்வையாளராகவும் இருந்தார். அவர் கொலை செய்யப்படுவதற்கு சில நாட்கள் முன்பு சர்வதேச அணுசக்தி அமைப்பின் (IAEA) ஆய்வாளர்களை சந்தித்திருந்தார்.

ஜனவரி 2010ல் ஒரு தொலைக்கட்டுப்பாட்டில் இயங்கிய குண்டு தெஹ்ரான் பல்கலைக்கழகத்தின் அணுசக்தி விஞ்ஞானி மசௌத் அலிமொகம்மதியைக் கொன்றது.

நவம்பர் 2010 அன்று மற்றொரு கார்க்குண்டு வெடிப்பு ஷகித் பெஹெஸ்ட் பல்கலைக்கழகத்தில் அணுசக்திப் பொறியியல் பேராசிரியராக இருந்த மஜித் ஷரியாரியைக் கொன்றது.

இமான் ஹொசின் பல்கலைக்கழகத்தில் இயற்பியல் துறைத் தலைவரான பெரிடெயௌன் அப்பாசி டேவானியைக் கொல்லும் முயற்சி தோல்வியில்

> "இஸ்ரேல் போர் தாக்குதலில் ஈடுபடத் தயாராகிவருகிறது. எங்கள் மீது தாக்குதல் நடத்தினால், நாங்கள் பார்த்துக்கொண்டு சும்மா யிருக்கமாட்டோம். அமெரிக்காவுக்கு தெரிந்தோ, தெரியாமலோ இந்தத் தாக்குதல் நடைபெற்றாலும் பஹ்ரைன், கத்தார் மற்றும் ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்கத் தளங்களை நாங்கள் தகர்ப்போம்."
>
> "எங்களது தாக்குதல் எந்த வகையில் இருக்கும் என்று இஸ்ரேல் கற்பனை செய்துகூட பார்க்கமுடியாத அளவுக்கு கடுமையான சேதங்களை ஏற்படுத்துவோம். இவை அனைத்தும் எப்போது வேண்டுமானாலும் நடைபெறும்.
>
> ஆனால் எப்போது, எங்கு என்பதைக் கூற முடியாது" என்று ஈரானில் உள்ள புரட்சிப் படையின் ஜெனரல் முகம்மது அலி ஜபாரி கடந்த ஆண்டு நிருபர்களிடம் தெரிவித்தார்.

**ஈரானின் சர்வதேச பொருள் விநியோக சங்கிலியை துண்டித்தல், தவறான மூலக் கூறுப்-பொருட்களை அனுப்பிவைத்தல், நடன்ஸில் மையம் கொண்டுள்ள சீமன்ஸ் கணினி முறைச் செயற்பாட்டைத் தடைக்கு உட்படுத்தும் வகையில் Stuxnet என்னும் கணினித் தொற்றுக்கிருமியை இயக்கியது மற்றும் இரு வலைத்தள தாக்குதல்களை நடத்தியது ஆகியவை அடங்கும்.**

மெல்மானும், ராவிவும் இஸ்ரேல் இப்பிராந்தியத்தில் அணுசக்தி ஆயுதங்கள்மீது தங்கள் ஏகபோக உரிமையைக் காக்கும் உறுதியைக் கொண்டுள்ளதுதான் செப்டம்பர் 6, 2007 தாக்குதலின் பின்னணியில் இருந்தது என்பதைக் கூறுகின்றனர். இத்தாக்குதல் சிரியாவின் வடமேற்கில் அல் கிபிர் மீது நடத்தப்பட்டது. இந்த இடத்தில் வடகொரியா வடிவமைப்புச் செய்திருந்த அணு உலைக்கூடம் ஒன்று செயல்பட்டது என்று மொசாட் நம்பியது.

அந்த நிலையத்தின் நோக்கம் குண்டுகளுக்கு பிரிவடையகூடிய பொருளான புளூட்டோனியத்தைத் தயாரித்தல் என்பதாகும்.

இப்படுகொலைகள் விஞ்ஞானிகள் மற்றும் அவர்கள் குடும்பங்களை அச்சுறுத்த உதவுகின்றன. சில விஞ்ஞானிகள் திட்டத்தில் இருந்து விலகினர் என்று மொசாட் உளவுத் துறை நம்புகிறது.

**ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தக்கூடும்**

படுகொலை மற்றும் அச்சுறுத்தல் நடவடிக்கை, அமெரிக்கா, ஐரோப்பா இன்னும் பிற நாடுகள் ஈரானுக்கு எதிரான பட்டியலிட்ட பொருளாதாரத் தடைகளைச் சுமத்தியதுடன் இணைந்து நடக்கிறது. பாரசீக வளைகுடாவிற்கு வாஷிங்டன், விமானத் தளங்கள் உடைய போர்க்கப்பல்களை அனுப்பியுள்ளது.

ஆத்திரமூட்டப்படாத தாக்குதல் ஒன்றை ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மீது இஸ்ரேல் நடத்தக்கூடும் என்னும் இடையறா அச்சுறுத்தல்களும் உள்ளன. அப்படித்தான் 1981இல் ஈரான் மீதும் 2007ல் சிரியா மீதும் நடைபெற்றது.

தெஹ்ரான் சட்டவிரோதமாக அடர்த்தி நிறைந்த யுரேனியத்தை உற்பத்தி செய்வதாக வாஷிங்டனும் டெல் அவிவும் குற்றம்சாட்டுகின்றன. இந்த அடர்த்தி வெறும் மருத்துவப் பயன்பாடுகளுக்காக இல்லை எனவும், மிகவும் சிக்கல் வாய்ந்த தூய்மைப்படுத்தும் வழிவகையைக் கொண்ட அணுவாயுதங்கள் தயாரிப்பிற்கான எரிசக்திக்காகும் எனவும் எந்த விதமான சான்றுகளும் இல்லாமல் கூறுகின்றன. அதே நேரத்தில் அமெரிக்கா, இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணுவாயுதங்களைத் தயாரிப்பதற்கு ஒப்புதல் கொடுத்துள்ளது. இவை சர்வதேச ஆய்வு முறை வடிவமைப்பிற்கு முற்றிலும் புறத்தே உள்ளன.

**முற்பட்டுள்ளது. பிராந்தியம் முழுவதும் ஏற்படக்கூடிய மோதலைக் கொண்டுவர இருப்பதாக இது அச்சுறுத்துவதுடன், ரஷ்யா மற்றும் சீனா ஆகிய சக்திகளை இந்த முக்கிய மூலோபாய பூகோள அரசியல் நலன்கள் உடைய பகுதிகளில் இருந்து அகற்றவும் முற்படுகிறது.**

**ஈரானுக்கு எதிரான போரின் திட்டங்களில் அமெரிக்கத் தளமாக ஆப்கானிஸ்தான்**

2014இல் ஆப்கானிஸ்தானில் நேட்டோ நடவடிக்கைகளுக்கான காலக்கெடு முடியும் நேரம் நெருங்குகையில், ஒபாமா நிர்வாகம் அங்கு காலவரையறையற்ற வருங்காலத்திலும் தொடர்ந்த அமெரிக்க இராணுவ பிரசன்னத்திற்கு தயாராகிவருகிறது. 'நியூ யோர்க் டைம்ஸ்' தகவல்களின்படி இத்திட்டங்கள், அமெரிக்கா தலைமையிலான ஆக்கிரமிப்பின் புதிய சூறையாடல் மற்றும் நவகாலனித்துவ முறையின் தன்மையை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன.

**டைம்ஸ் கூற்றுப்படி, ஆப்கானிஸ்தானில் அமெரிக்க உயர் தளபதியாக இருக்கும் ஜெனரல் ஜோன் அலென் 2014 இன் முடிவில் 'போரில் ஈடுபடும் துருப்புக்கள்' திரும்பப் பெறப்படல் என்பதற்குப் பின் பென்டகனுக்கு மூன்று விருப்பங்களைக் கொடுத்துள்ளார். ஒன்று, அமெரிக்கத் துருப்பு அளவை 6,000இல் தக்க வைத்தல், மற்றொன்று 10,000 சிப்பாய்களை நிறுத்தி வைத்தல் மற்றும் மூன்றாவது 20,000 துருப்புக்களை அடிப்படையாகக் கொள்வல்.**

**பெயரிடப்படாத பாதுகாப்புத்துறை அதிகாரிகள் விளக்கியுள்ளபடி, இந்த மூன்று திட்டங்களுக்கும் மையமாக இருப்பது "எழுச்சியாளர்களை வேட்டையாடும் திறமையுடைய சிறப்பு நடவடிக்கை கமாண்டோக்கள்" தொடர்ந்து நிலைப்பாடு கொள்வது ஆகும். கூடுதலான அமெரிக்கப் படைகள் ஆப்கானியப் பாதுகாப்புப் படைகளுக்கு ஊக்கம் தரும் வகையில் வான் ஆதரவு, தளபாடங்கள் அளித்தல், பயிற்சி கொடுத்தல் ஆகியவற்றில் ஈடுபடும்.**

இவை அனைத்துமே "பயங்கரவாதத்தின் மீதான போர்" என்ற போலிக் காரணத்தைக் காட்டி நியாயப்படுத்தப்படுகின்றன் உண்மையில், 12 ஆண்டுகளுக்கும் மேலாக இடையறாத குருதிக்களரி நிறைந்த போரைக் கண்டுள்ள ஆப்கானிஸ்தான், இப்பிராந்தியம் முழுவதும் அமெரிக்கச் செல்வாக்கை காட்டும் செயற்பாட்டுத் தளமாக சேவைசெய்துள்ளது.

ஜனாதிபதி ஒபாமா ஏற்கனவே போரை 'ஆப்-பாக் போர்' என்று மாற்றியுள்ளார். பாகிஸ்தான் நாட்டிற்குள் ஆளில்லா விமான தாக்குதல்களை விரிவாக்கியுள்ளார்.

**ஈரானுக்கு எதிரான போரின் முன்னேற்றகரத் திட்டங்களில் ஆப்கானிஸ்தான் சந்தேகத்திற்கு இடமின்றி முக்கிய கூறு ஆகும். இதைத் தவிர, அமெரிக்கத் திட்டமிடல், சூழ்ச்சிகள் என்று மத்திய ஆசியக் குடியரசுகளில் அது நடத்துவதற்கு வசதியான முன்னிலைப் பகுதியும் ஆகும்.**

# புலிகளின் வீழ்ச்சி! இறுதி நாட்கள்...

**ரிஷி**

28



**புலிகளின்** கப்பல்களின் நடமாட்ட விடயங்களை அமெரிக்க அதிகாரிகள் ஆதாரத்துடன் இலங்கை கடற்படைக்குத் தெளிவுபடுத்தியது பற்றியும் இருதரப்பினருக்குமிடையிலான கலந்துரையாடல் பற்றியும் 999 ஆவது முரசில் பார்த்தோம்.

அமெரிக்க அதிகாரிகள் வழங்கிய வரைபடத்தில், புலிகளின் அனைத்துக் கப்பல்களும் நின்றிருந்த இடங்களின் அமைவிடம், வரைபடத்தில் தெளிவாக இருந்தன. அதாவது, இந்து சமுத்திரத்தில் ஈகுவேட்டர் கோட்டில் இருந்து எத்தனை டிகிரி கோணத்தில், எவ்வளவு கடல் மைல் தொலைவில் என்ற விபரம்.

அட்மிரல் வசந்த கரன்னகொட, "எமது கடற்படை தாக்குதல் படகுகள் இவ்வளவு தொலைவு வரை செல்லும் திறனற்றவை. புலிகளின் கப்பல்களை தாக்குவதற்கு நீங்கள் உதவி செய்ய முடியுமா? குறைந்தபட்சம், போக்குவரத்து வசதி செய்து கொடுத்தால், தாக்குதலை நாம் பார்த்துக் கொள்வோம்" என்று கேட்டுப் பார்த்தார்.

"இல்லை. அமெரிக்காவால் அதிகபட்சம் செய்யக்கூடியது இவ்வளவுதான். புலிகளின் கப்பல்கள் தரித்து நிற்கும் இடங்களை காட்டியிருக்கிறோம். அவை நகர்ந்தால், தகவல் தருவோம். இதற்குமேல், நீங்கள்தான் பார்த்துக் கொள்ள வேண்டும்" என்றார் அமெரிக்க அதிகாரி.

அமெரிக்க அதிகாரியின் பதிலால் பரபரப்படைந்தது இலங்கை கடற்படை. பல வருடங்களாக இவர்கள் ஓடிஓடி தேடி வந்த புலிகளின் கப்பல்கள் அனைத்தும், எங்கெங்கே நிற்கின்றன என்று தெரிந்து விட்டது.

ஆனால், இலங்கை கடற்படை தாக்குதல் படகுகள் அவ்வளவு தொலைவு வரை செல்லும் திறனற்றவை. இவர்களுக்கு இருந்த பெரிய சிக்கலே, கடற்படை தாக்குதல் படகுகளில் இந்தோனேசியா அருகே உள்ள கடல் பகுதிக்கு செல்லும் அளவுக்கு எரிபொருள் நிரப்ப



முடியாது. நடுக்கடலில் எரிபொருள் நிரப்பும் வசதி கிடைத்தால், தாராளமாக போகலாம்.

அப்போது இலங்கை கடற்படைக்கு தளபதியாக இருந்த அட்மிரல் வசந்த கரன்னகொட, தமது கடற்படை இஞ்சினியரிங் பிரிவுடன் ஆலோசனையில் ஈடுபட்டார். அந்த டீமில் இருந்த ஒரு இஞ்சினியர் விநோதமான ஒரு திட்டத்தை சொன்னார்.

இலங்கை கடற்படையிடம் இருந்த P520 இலக்க கப்பலை, LSV கப்பலாக பயன்படுத்தலாம் என்பதே அவர் கொடுத்த ஐடியா. உங்களுக்கு கடற்படை விவகாரங்களுடன் பரிச்சயம் இருந்தால், LSV என்றால் என்ன என்று தெரிந்திருக்கலாம். Logistics Support Vessel என்பதன் சுருக்கமே அது. நடுக்கடல் ஆபரேஷனில், மற்றைய கப்பல்களுக்கு வழங்கல்களை அல்லது சப்ளைகளை செய்யும் கப்பல்.

LSV-இல் மற்றைய சப்ளைகளுடன், எரிபொருள் தாங்கியும் இருக்கும். அதில் இருந்து மற்றைய கப்பல்களுக்கு நடுக்கடலில் வைத்து எரிபொருள் நிரப்பலாம்.

இதில் வினோதமாக என்ன இருக்கிறது? இவர் குறிப்பிட்ட P520 இலக்க கப்பல், பெரியதுதான் (1066 தொன்) ஆனால், டப்பா கப்பல்! மிகப் பழையது. கட்டப்பட்டு, 44 ஆண்டுகள் ஆன கப்பல். இலங்கையின் காலி துறைமுகத்தில் உடைப்பதற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்தக் கப்பலுக்கும் ஒரு சுவாரசியமான பின்னணி உண்டு. இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்பு பிரதமராக இருந்த காலத்தில், பிரான்ஸ் நாட்டுக்கு சென்றிருந்தார். அப்போது, பிரான்ஸில் வசித்த இலங்கையர்கள், அவருக்கு அன்பளிப்பாக கொடுத்த கப்பல் அது. கப்பல் இலங்கை வந்து சேர்ந்ததும், அதை கடற்படைக்கு கொடுத்தார்.

கப்பலின் அதிகபட்ச வேகமே, மணிக்கு 8 நாட்தான். இதனால், கடற்படை யுத்தம் எதற்கும் பயன்படுத்த முடியாது. இவ்வளவு மெதுவாக செல்லும் கப்பலை கடலில் ஓடவிட்டால்,

## திரைமறைவில் அரங்கேறிய இரகசியத் திட்டம்

விடுதலைப் புலிகள் சுலபமாக தாக்கி விடுவார்கள் என்பதால், பல ஆண்டுகளாக சும்மா நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கப்பல் அது.

கடற்படை இஞ்சினியர்கள் குழு ஒன்று அந்த கப்பலை செக் பண்ணி, கப்பல் வேகம் இல்லைதான், ஆனால், சிங்கிள் இஞ்சின் உடைய கப்பல் நடுக்கடலில் பழுதடைந்து நின்று விடாது என்றனர்.

இதையடுத்து, இலங்கை கடற்படையின் P520 இலக்க கப்பலை, LSV கப்பலாக மாற்றினார்கள். அதில் எரிபொருள் தாங்கி, தண்ணீர் தாங்கி, உணவு வைப்பதற்கு குளிர் அறை எல்லாம் பொருத்தப்பட்டன.

இலங்கையில் உள்ள கடற்படை ஷிப் யார்டிலேயே இந்த வேலைகள் நடைபெற்றன. இலங்கை முழுவதிலும் கண்களும், காதுகளும் வைத்திருந்ததாக குறிப்பிடப்பட்ட புலிகளின் உளவுப் பிரிவு இதை எப்படி மிஸ் பண்ணினார்கள் என்று அவர்களைத்தான் கேட்க வேண்டும்.

LSV கப்பலாக மாற்றப்பட்ட P520 இலக்க கப்பல் முழு சப்ளையுடன் தனியாக புறப்பட்டு சென்றது. புலிகளின் கப்பல்களை வேட்டையாட அனுப்புவது என திட்டமிடப்பட்ட கப்பல்களில் இந்த P520 இலக்க கப்பல் மட்டும்தான் பாடாவதி கப்பல் என்றில்லை. தாக்குதலுக்கு செல்லவிருந்த மற்றைய கப்பல்களும் பழையவைதான்.

ஒரு கப்பல், அமெரிக்க கடற்படையிடம் இருந்து செகென்ட் ஹாண்டாக வாங்கப்பட்டது. அது கட்டப்பட்டு, 36 ஆண்டுகள் ஆகியிருந்தன. தாக்குதலுக்கு செல்ல திட்டமிடப்பட்டிருந்த கப்பல்களில் மிகப் பெரிய கப்பல், இந்தியாவால் வழங்கப்பட்டது. அதுகூட, 19 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. அந்தக் கப்பலின் மேல் தளத்தில், உலக யுத்தத்து கால பீரங்கி ஒன்றை பொருத்திய நிலையிலேயே, இந்தியா கொடுத்திருந்தது. அந்த பீரங்கி அகற்றப்பட்டு, புதிய ஆயுதங்கள் பொருத்தப்பட்டன.

மற்றொரு கப்பல், ஆட்கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட போது, கடற்படையால் கைப்பற்றப்பட்ட கப்பல். கோர்ட் உத்தரவின் பேரில் அது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. கடற்படை, கோர்ட்டுக்கு பணம் கட்டி அந்த கப்பலை மீட்டது. அதுவும் ஒரு LSV கப்பலாக மாற்றப்பட்டது. அந்தக் கப்பலில் மருத்துவ அணி ஒன்று பயணம் செய்தது.

புலிகளின் கப்பல்களை நடுக்கடலில் தாக்கும்போது, கடற்படை வீரர்கள் காயமுற்றால், இந்த மருத்துவ டீம், முதலுதவி செய்யும். ஆனால், தாக்குதலில் கடற்படை வீரர்கள் யாராவது இறந்தால், உடலை இலங்கைக்கு கொண்டு செல்ல எந்தவொரு கப்பலிலும், ஃபிரீஸர் வசதி கிடையாது. உயிரிழந்தால், உடலை கடலில் வீசிவிட்டு வரவேண்டியதுதான்!

பிரதான தாக்குதல் கப்பலாக செயற்பட்ட கப்பலின் பெயர், சயூரா. அதன் கப்டனாக இந்த ஆபரேஷனுக்கு சென்றவர், கப்டன் பியால் சில்வா. மொத்தம் 4 தாக்குதல் கப்பல்கள் புறப்பட்டன. அவற்றின் பெயர்கள், சயூரா, சமுதுரா, ஷக்தி, சுரனிமாலா.

(தொடரும்...)

---

# புலிகளின் வதை முகாமில்

மணியம்

வதை 48



**காந்தி** என்ன விடயத்தை மனதில் வைத்துக்கொண்டு செல்விக்கும் எனக்குமிடையிலான தொடர்பு பற்றிக் கேட்கிறான் என எனக்கு விளங்கவில்லை. செல்வியும் நானும் ஒரே அரசியல் அணியைச் சேர்ந்தவர்களில்லை. ஆனால் அரசியல் ரீதியாகவும் தனிப்பட்ட முறையிலும் நேச உறவு இருந்தது. (அப்பொழுது புளொட் இயக்கத்தின் தளப் பொறுப்பாளராகவும், செல்வியின் காதலராகவும் இருந்த, தற்பொழுது பிரான்சில் வாழ்ந்து வரும் அசோக்குடனும் - யோகன் கண்ணமுத்து - கூட எனக்கு நல்ல நட்பு இருந்தது)

செல்வி புளொட் இயக்கத்தின் மகளிர் பிரிவில் தீவிரமாகவும் அர்ப்பணிப்புடனும் வேலை செய்த யாழ். பல்கலைக்கழக மாணவி. அவருடன் கலா என்றொரு இன்னொரு மாணவியும் இணைந்து வேலை செய்தார். (அவர் இப்பொழுது அவுஸ்திரேலியாவில் இருக்கிறார் என நினைக்கிறேன்) அதேபோல ஈ.பி.ஆர்.எல்.எப். மகளிர் அணியில் அஞ்சலி, அம்பிகா என்ற மாணவிகள் முக்கிய பொறுப்பில் இருந்தனர். (பின்னர் அஞ்சலியும் அம்பிகாவும் முறையே அதே இயக்கத்தில் முக்கிய பொறுப்புகளிலிருந்த ஜேம்ஸ், இளங்கோ ஆகியோரைத் திருமணம் செய்து கொண்டனர்) புலிகளின் மகளிர் அணியிலும் சில பல்கலைக்கழக மாணவிகள் இருந்தனர். இவர்கள் எல்லோருமே பல்கலைக்கழகத்துக்கு முன்னாலுள்ள எனது கடைக்கு வந்து என்னுடன் அந்நியோன்யமாக உரையாடிச் செல்வது வழமை. அதற்கு அப்பால் அவர்களுடன் எனக்குப் விசேடமான அரசியல் தொடர்புகள் எதுவும் இருக்கவில்லை.

செல்வியைப் பொறுத்தவரை, நான் அவதானித்த வரையில் தனது மக்களுக்காக உண்மையான அர்ப்பணிப்புடன் ஏதாவது செய்ய வேண்டும் என்ற நேர்மையான எண்ணத்துடன் செயல்பட்டவர். வவுனியா மாவட்டம் சேமமடு குடியேற்றக் கிராமத்தில் ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தைச் சோந்த ஒருவர் என்ற காரணத்தால், பொதுவாகக் கிராமிய மக்களிடம் காணப்படும் நேர்மையான வெளிப்படையான தன்மை செல்வியிடமும் ஒரு விசேட குணாம்சமாக இருந்திருக்கலாம் என எண்ணுகிறேன்.

ஆரம்பத்தில் தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் ஆரம்பமான போது புதிய புலிகள் என்ற இயக்கமே உருவானது. இது 1975இல் எமது தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி உருவான பின்னர் உருவான அமைப்பாகும். பிற்காலத்தில் பரம வைரிகளாக மாறிய பிரபாகரனும் உமா மகேஸ்வரனும் ஆரம்பத்தில் இந்த புதிய புலிகள் இயக்கத்திலேயே ஒன்றாகச் செயல்பட்டவர்கள். பின்னர் பிரபாகரன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும், உமா மகேஸ்வரன் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தையும் (புளொட்) உருவாக்கிக் கொண்டு கீரியும் பாம்பும் போல செயற்பட்டனர். (தமிழர்களின் மூத்த அரசியல் கட்சிகளான தமிழ் காங்கிரஸ் கட்சியும் தமிழரசுக்கட்சியும் 25 ஆண்டுகள் செயற்பட்டது போல!)

புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரை ஆரம்பத்தில் வடக்கின் கரையோர மீனவ சமூக மக்களிடமே அவர்களுக்கு ஓரளவு செல்வாக்கு இருந்தது. ஆனால் புளொட் வடக்கின் பெரும்பான்மையான வேளாள சமூகம் முதல் தாழ்த்தப்பட்ட மக்கள்வரை பரவலான செல்வாக்கு உள்ள ஒரு இயக்கமாக இருந்தது. வன்னிப் பிரதேசத்திலும் புளொட் இயக்கம் அதிய செல்வாக்குப் பெற்றிருந்தது. குறிப்பாக அங்கு சமுதாயத்தின் அடிநிலையில் வாழ்ந்து வந்த இந்திய வம்சாவழி மக்களிடமும் அது செல்வாக்குப் பெற்றிருந்தது.

அத்துடன் புளொட் வெகுஜன அமைப்புகளையும் கொண்டிருந்தது. அது பாலஸ்தீன விடுதலை இயக்கம், இலங்கை - இந்திய இடதுசாரி இயக்கங்கள் என்பனவற்றுடன் தொடர்புகளைக் கொணடிருந்ததால், ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வையும் சோசலிச அபிலாசைகளையும் கூட குறிப்பிட்டளவு கொண்டிருந்தது. இதன் காரணமாகவே நகரப் புறங்களில் இருந்த முற்போக்கு எண்ணம் கொண்டிருந்த பல புத்திஜீவிகளும், கிராமப்புறங்களிலிருந்த செல்வி போன்றவர்களும், தில்லை போன்ற வறுமையான குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் புளொட்டில் இணைந்து கொள்ளக் காரணமாயிற்று.

ஆனால் பின்னர் புளொட் இயக்கத்துக்குள் ஏற்பட்ட கருத்து மோதல்களும் பிளவுகளும், புலிகளின் திட்டமிட்ட சதி நடவடிக்கைகளும் சேர்ந்து செல்வி, தில்லை போன்ற பல நல்வர்கள் அந்த இயக்கத்தில் இருந்து ஒதுங்க வேண்டிய சூழலை உருவாக்கி விட்டது. அதன் சரி பிழைகளை இங்கு ஆராய்வது எனது இந்தத் தொடரின் நோக்கங்களுக்கு அப்பாற்பட்டது. ஆனால் செல்வி கடத்தப்பட்ட போது புளொட் இயக்கத்திலிருந்து தன்னை விலக்கி வைத்துக்கொண்ட ஒருவராக இருந்ததை நான் உறுதிபடக் கூற முடியும்.

அந்தக் காலகட்டத்தில் செல்வி, தில்லை, சிவரமணி (முன்னதாக தற்கொலை செய்து கொண்ட செல்வியின் தோழியும் சக மாணவி யும்) ஆகியோர் என்னுடன் அடிக்கடி சந்திப்பவர்களாக இருந்ததால், அவர்கள் அரசியலில் கொண்டிருந்த மனநிலையை நான் நன்கறிவேன். (இன்று செல்விக்கு அஞ்சலிக் கூட்டங்கள் நடாத்தி அரசியல் ஆதாயம் பெற முயல்பவர்களில் சிலர், செல்வியின் நிழலுடன்கூட தொடர்பில்லாதவர்கள் என்பதுடன், அவரது கொள்கைகளுடன் மருந்துக்கும் ஒட்டுறவில்லாதவர்கள் என்பதையும் நினைக்கையில், வேதனைதான் மிஞ்சுகிறது)

இப்பொழுது செல்வி பற்றி காந்தி திடீரென விசாரித்த போது, செல்வியுடனான எனது கடந்த கால நினவுகள் நெஞ்சில் நிழலாடின.

செல்வி புலிகளால் கடத்தப்பட்ட கடைசி நிமிடத் திற்கு முன்னர் அவரை இறுதி யாகச் சந்தித்த அவரது நண்பன் நான்தான் என நினைக்கிறேன். அந்தத் துன்பமான நிகழ்வு மனதில் இன்ன மும் பாரமாக அழுத்துகிறது.

இன்னொரு பல்கலைக்கழக மாணவனும் செல்வியின் நண்பர்களில் ஒருவருமான மனோகரன் உரும்பிராயிலிருந்து திரும்பும் வழியில் புலிகளால் கடத்தப்பட்ட சிறிது நேரத்தில், தில்லை யாழ்.பல்கலைக் கழகத்தின் பின்புற ஒழுங்கையில் வைத்துக் கடத்தப்பட்டார். அந்த நேரத்தில் செல்வி பல்கலைக்கழகத்தில் இருந்தார். அவர்கள் இருவரும் கடத்தப்பட்டதைக் கேள்வியுற்ற செல்வி மிகுந்த பதட்டத்துடன் இராமநாதன் வீதியில் பல்கலைக்கழக மாணவிகள் விடுதிக்கு முன்னால் இருந்த எனது கடைக்கு உடனடியாக வந்து சேர்ந்தார். அப்பொழுது அவர் மிகுந்த பதட்டத்திலிருந்தார். ஏனெனில் மனோகரனும் தில்லையும் கடத்தப்பட்டது மாத்திரமின்றி, அடுத்ததாக புலிகள் தன்னையும் கடத்துவதற்கு வரலாம் என்ற அச்சமே அதற்குக் காளரணம்.

(துன்பியல்கள் தொடரும்...)



# பாப்பா முரசு

இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

## வாரம் ஒரு திருக்குறள்




### நாடு

பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லை நாடு.

பலவகையாக மாறுபடும் கூட்டங்களும் உடனிருந்தே அழிவு செய்யும் பகையும் அரசனை வருத்துகின்ற கொலைத் தொழில் பொருந்திய குறுநில மன்னரும் இல்லாதது நாடு. குறள்:735

# என்ன செய்யும் சின்ன மைனா?




## அம்மா சொல் கேள்!

செழிப்பான ஒரு புல்வெளியில் ஆடுகள் மேய்ந்துகொண்டிருந்தன. அவற்றை மேய்த்துக் கொண்டு வந்தவன், மரத்தடியில் உட்கார்ந்து கண் மூடி, புல்லாங்குழல் வாசித்துக்கொண்டிருந்தான்.

புல்வெளியைச் சுற்றி வேலி போடப்பட்டிருந்தது. அதன் அருகே, ஓர் ஆட்டுக்குட்டி மேய்ந்து கொண்டிருந்தது. வேலிக்கு வெளிப்பக்கம் இருந்த ஓநாய் ஒன்று ஆட்டுக் குட்டியைப் பார்த்தது.

வேலிக்குள் முகத்தை நுழைத்துக்கொண்டு, ஓநாய் எதையோ பார்ப்பது போல பாசாங்கு செய்தது. அதைப் பார்த்த ஓர் ஆட்டுக்குட்டி, "உனக்கு என்னவேண்டும்?" என்று கேட்டது.

ஓநாயும் "நண்பா, நண்பா... இங்கே இளசான புல் கிடைக்குமா என்று பார்க்கிறேன்! இளம்புல் என்றால் எனக்கு ரொம்பப் பிரியம். அதைத் தின்று, ஜில்லென்று தண்ணீர் குடித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! உங்களுக்கெல்லாம் அந்த யோகம் கிடைத்திருக்கிறது! எனக்கு அது கிடைக்கவில்லை..." என்று வருத்தத்துடன் கூறியது.

"அப்படியா! நீ புல்லா சாப்பிடுவாய்? நீ மாமிசத்தைத் தான் சாப்பிடுவாய் என்று என் அம்மாவும் அப்பாவும் சொன்னார்களே?" என்று ஆச்சரியத்துடன் கேட்டது ஆட்டுக் குட்டி.

"சேச்சே...அதெலாம் சுத்தப் பொய்!" என்றது ஓநாய்.

"அப்படியென்றால் இரு. நான் வெளியே வந்து, மலையின் அந்தப் பக்கம் இளம்புல் இருக்குமிடத்தைக் காட்டுகிறேன். நாம் இரண்டு பேரும் போய், அதைச் சாப்பிட்டுவிட்டு, ஃப்ரெண்ட்ஸாக ஜாலியாகச் சுற்றலாம்!" என்று சொல்லிவிட்டு ஆட்டுக்குட்டி வேலி இடுக்கின் வழியாக நுழைந்து, ஓநாயின் பக்கம் போயிற்று.

"உடனே ஓநாய் அதன்மீது பாய்ந்து அதைக் கொன்று தின்றது.

அந்த ஆட்டுக் குட்டிக்குத் தானாகத் தெரியவில்லை. அது போகட்டும், பரவாயில்லை... அனுபவம் நிறைந்த அம்மா, அப்பா பேச்சை கேட்டிருந்தால், மதிப்பு வாய்ந்த, தன் உயிரை இழந்திருக்காது அல்லவா?

## பறவைகளை தெரிந்து கொள்வோம்



புறா மட்டுமே தண்ணீரை உறிஞ்சிக் குடிக்கும்.

வானம்பாடி பறவையால் நடக்க முடியாது.

குக்கூபரா என்ற பறவை மனிதனைப் போலவே சிரிக்கும்.



பென்குயின் பறவை இனத்தைச் சேர்ந்தது என்றாலும் அதனால் பறக்க முடியாது.

கோழியின் இமைகள் கீழிருந்து மேலே மூடும்.

நெருப்புக் கோழி குதிரையை விட வேகமாக ஓடும்.

ஒரு அன்னப் பறவைக்கு 25 ஆயிரம் சிறகுகள் உள்ளன என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.





## புதுமொழிகள்

1. எவராவது, தான், தன்னுடைய வாழ்நாளில் ஒரு பிழையும் செய்ததில்லை என்று நினைத்தால், அவர்கள் தம் வாழ்வில் புதிய முயற்சிகளை செய்து பார்த்ததில்லை என்று பொருள்! **- சார்லஸ்**
2. உனக்கு மிக நன்றாகத் தெரிந்த விடயத்தை, அதுபற்றிக் கொஞ்சமும் தெரியாதவன் சொல்லிக் கொடுப்பதைக் கேட்க நீ தயாராக இருந்தால் வாழ்வில் வெற்றி பெறுவாய்! **- செம்ஸ்ஃபோர்ட்**
3. மனிதனின் குற்றங்களில் பெரும்பாலானவை அவனது நாவிலிருந்துதான் பிறக்கின்றன! **- நபிகள் நாயகம்**
4. இவ்வுலகில் வேறு எவருடனும் நீ உன்னை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளவேண்டாம். அவ்வாறு செய்தால் நீ உன்னை அவமதித்துக் கொள்வதாகப் பொருள்! **- அன்னை தெரேசா**
5. நீ பிறரின் குணாதிசயங்களைக் கணிக்கத் துவங்கினால் அவர்பால் அன்பு செலுத்த நேரம் இருக்காது! **- ப்ளேயர்**
6. வெற்றி என்பது முதலிடத்தைப் பெறுவது என்று பொருளன்று. உன் செயல்பாடு சென்ற முறையைவிட இம்முறை சிறப்பானது என்று பொருள்! **- டால்ஸ்டாய்**
7. மின்மினிப் பூச்சி எவ்வளவு ஒளியுடன் திகழ்ந்தாலும் அது தீ ஆகாது! **- சாணக்கியர்**
8. மகிழ்ச்சி என்ற உணர்ச்சி இல்லாவிட்டால் வாழ்க்கை சுமக்க முடியாத பெரிய சுமை ஆகிவிடும்! **- பெர்னார்ட்ஷா**
9. நம்பிக்கை குறையும்போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான்! **- ஜான் மில்டன்**
10. தன்னை வெல்லக் கற்றுக் கொண்டவனிடமே நாகரிகத்தின் முதிர்ச்சி இருப்பதாகச் சொல்லலாம்! **- சுவாமி விவேகானந்தர்.**

## தெரிந்து கொள்வோம் ஒரு வரிச் செய்திகள்...

அன்னாசிப் பழத்துக்கு விதைகள் கிடையாது.

குதிரைக்கு கருப்பு நிறம் மட்டுமே தெரியும்.

யானைக்கு வெள்ளை நிறம் பிடிக்காது!

உலகிலேயே மிகவும் அபாயகரமான பிராணியாகக் கருதப்படுவது ஈ!

உலகிலேயே மிக அமைதியான நகரம் ரங்கூன்!

சுறா மீனுக்கு இரண்டு கருப்பைகள் உள்ளன.

ஆப்கானிஸ்தானில் ரயில் வசதி கிடையாது.

## நாவலர் ஆவேன்...



தூங்கி எழுந்ததும்
காலைக்கடனும்
கழித்திடுவேன்
பாலைப்போல
வெள்ளையாக
பல்லும் துலக்குவேன்

வேளைபார்த்துக்
குளியல்போட்டு
தூய்மை விளக்குவேன்!
குளியல்போட்டு
முடிந்தபின்னே
உணவும் உண்ணுவேன்

எளியஉணவை
ஏற்றவகையில்
உண்ண எண்ணுவேன்!

பள்ளிசெல்லப்
புறப்படுவேன்
வேகம் காட்டியே
புள்ளிமானும்
என்னைவெல்லப்
போடும் போட்டியே!

பள்ளிசென்று
பாடந்தன்னைப்
படித்திடு வேனே!
சொல்லித்தந்த பாடம்
மனதில்
பதிச்சிடு வேனே!

பள்ளிமுடிந்து வீடுசேர்ந்து
நூலகம் போவேன்
நல்லநூல்கள்
படித்துநானும்
நாவலர் ஆவேன்!



## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.
சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 27.02.2013

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 979**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 977**

பரிசுக்குரியவர்:
எம்.செரீனா,
கொழும்பு வீதி, ரத்மலயா.

பாராட்டுக்குரியவர்கள்

01. அ.மதுஷா, ஆவரங்கால், புத்தூர்.
02. க.டில்சான், நிவ்வெல்பிட்டிய, கெலிஓயா.
03. ம.சுலக்சனா, முருங்கன், மன்னார்.
04. உ. பானுப்பிரியா, பூவரசங்குளம், வவுனியா.
05. ரா.உஷாந்தினி, புத்தூர்.
07. மு.சந்தியா, நீர்கொழும்பு.
08. க.நிலுக்ஷன், 83,ஸ்ரேசன்றோட், கல்கிசை.

# கொள்ளை ராணி பூலான்தேவி



## திருப்பங்கள் நிறைந்த பூலானின் வாழ்க்கை வரலாறு

**எல்லோருக்கும் - அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலைகாரி என்றுதான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் - ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் புரட்டப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் புரட்டப்படுகின்றன.**

**144**

**கூட்டத்தில்** நின்றுவர்கள் தங்களை நோக்கித் துப்பாக்கிகளுடன் ஓடி வருவோரைக் கண்டதும், கலைந்து ஓடத் தொடங்கினார்கள்.

"நில்லுங்கடா டேய்" என்று குரல் கொடுத்தாள் பூலான். ஓடி வரும் போதே, பூலானின் கண்கள் கூட்டத்துக்குள் ஸ்ரீராமையும், லாலா ராமையும் தேடி அலைந்தன.

பெண் குரல் கேட்டதுமே, வருவது பூலான்தேவி என்பது கூட்டத்தினருக்குத் தெரிந்து போனது.

"ஐயோ பூலான்தேவி வந்து விட்டாள்" என்று ஆளாளுக்குக் கத்திக்கொண்டே, முன்னிலும் வேகமாக ஓடத் தொடங்கினார்கள்.

பூலானை அவர்கள் இதற்கு முன்னர் கண்டதில்லை. ஆனால் பூலான் பற்றிய உண்மையும், கற்பனையும் கலந்த கதைகள் பலவற்றை அவர்கள் அறிந்திருந்தார்கள்.

அதனால்தான் அசுரகதியில் ஓடத் தொடங்கினார்கள்.

"சுடுங்கள்... சுடுங்கள்..." என்று கத்திக் கொண்டே பூலானும் சுட, மான்சிங் உட்பட ஏனையோரும் சுடத் தொடங்க, வோட்டுக்கள் பறந்தன.

பின்தங்கி ஓடிய சிலர் முதலில் சுருண்டு விழுந்தனர். முதுகுகளில் ரவைகள் இரத்தக் கோலம் போட்டன.

கிராம நுழைவாயிலில் பூலானை எதிர்பார்த்து வலைவிரித்திருந்த குஜாலுக்கும் அவன் ஆட்களுக்கும் முதலில் ஒன்றுமே புரியவில்லை. இன்னும் ஸ்ரீராம் சகோதரர்கள் மணமகனை அழைத்துக்கொண்டு கிராமத்திற்குள் செல்லவில்லை. பூலான் குழுவினரும் உள்ளே போனதாகத் தெரியவில்லை. பின்னர் எப்படி வேட்டுச் சத்தங்கள் கேட்கின்றன? என்று யோசித்தான் குஜால்.

வேட்டுச் சத்தங்கள் கிராமத்தின் வெளியே பதுங்கி இருந்தகுஜால் கோஷ்டிக்கும் கேட்டது.

அதேநேரம் மணமகனை அழைத்துக் கொண்டு ஸ்ரீராம் சகோதரர்களும், பண்ணையார்களும் பவனியாக வந்து கொண்டிருந்தனர்.

சிதறி ஓடியவர்களில் பத்துக்கு மேற்பட்டோர் துப்பாக்கிக் குண்டுபட்டு சுருண்டு விழுந்தனர். மேலும் பலர் காயங்களுடன் இரத்தம் கொட்டக்கொட்ட ஓடிக் கொண்டிருந்தனர்.

சுருண்டு விழுந்தவர்களில் சில் பெண்களும் இருந்தனர்.

"வேண்டாம், ஆண்களை மட்டும் சுட்டுத்தள்ளுங்கள்!" என்று உரத்துக் கத்தி உத்தரவிட்டாள் பூலான்.

கிராம நுழைவாயிலில் பூலானை எதிர்பார்த்து வலைவிரித்திருந்த குஜாலுக்கும் அவன் ஆட்களுக்கும் முதலில் ஒன்றுமே புரியவில்லை.

இன்னும் ஸ்ரீராம் சகோதரர்கள் மணமகனை அழைத்துக்கொண்டு கிராமத்திற்குள் செல்லவில்லை. பூலான் குழுவினரும் உள்ளே போனதாகத் தெரியவில்லை. பின்னர் எப்படி வேட்டுச் சத்தங்கள் கேட்கின்றன? என்று யோசித்தான் குஜால்.

எதற்கும் என்ன நடக்கிறது என்று பார்த்துவிடலாம் என்று தன் ஆட்களுடன் கிராமத்திற்கள் புகுந்தான் குஜால்.

கிராமத்திற்குள் சிறிது தூரம் சென்றதும் மரண ஓலங்கள் குஜாலுக்குக் கேட்டன. பலர் அவர்கள் முன்பாக ஓடி வந்துகொண்டிருந்தனர்.

கிராமத்தையே கூண்டோடு அழிக்கத்தான் பூலான் கோஷ்டி வந்திருக்கிறது என்று நினைத்து,



கிராமத்தைவிட்டு வெளியேறும் நோக்கில் அவர்கள் ஓடிச் சென்றனர்.

குஜால் தன் ஆட்களுடன் குறுக்கே நின்று வழி மறித்தான். அவர்களையும் பூலானின் ஆட்கள் என்று நினைத்துத் திரும்பி வந்த வழியே ஓட ஆரம்பித்தனர்.

குஜால் வானத்தை நோக்கிச் சுட்டு எச்சரித்தான்.

"நில்லுங்கள், நாங்கள் உங்களைக் கொல்ல வரவில்லை" என்று குரல் கொடுத்தான்.

சிலர் நின்றனர். ஏனையோருக்கு மரணப் பயம் காரணமாக குஜால் குரல் கொடுத்தது காதுகளில் விழவே இல்லை.

நின்றவர்களைப் பிடித்து "யார் அங்கே சுட்டுக்கொண்டிருக்கிறார்கள்?" என விசாரித்தான் குஜால்.

அவர்களுக்கு நா எழ மறுத்தது. பெயரைச் சொல்லவே அச்சமாக இருந்தது.

"பூ...பூ...பூலான்தே...வி வந்து விட்டாள்.

"எத்தனைபேர் இருக்கிறார்கள்?"

மரண பயத்தில் ஓடி வந்தவன் கண்ணுக்குப் பூலானுடன் நூற்றுக்கணக்கானோர் வந்துள்ளனர் என்றுதான் நினைப்பு இருந்தது "நூறு நூற்றைம்பது பேர்" என்றான்.

குஜால் யோசித்தான். "பூலான் தேவி புத்திசாலி. பெரும் படை-யோடுதான் வந்திருக்கிறாள். இப்போது மோதுது சரியல்ல என்று நினைக்கின்றேன். நீ என்ன நினைக்கிறாய் குசுமா?"

அப்படி அவன் கேட்டதுதான் தப்பானது. பூலானைப் புத்திசாலி என்று குஜால் புகழ்ந்தது குசுமாவுக்கு அடியோடு பிடிக்கவில்லை.

"நீ வீரன் என்று நினைத்தேன். ப்பூ...இவ்வளவுதானா? இதற்கு, அந்த ஸ்ரீராம் எவ்வளவோ மேல்..." என்றாள்.

குஜாலுக்கு ரோஷம் பொத்துக்கொண்டு வந்தது. ஸ்ரீரா-முடன் தன்னை ஒப்பிடுகிறாளோ என்று அவமானமாக இருந்தது.

"பூலானின் தலை இன்று உன் காலடியில் இருக்கும். போதுமா, வாங்கடா!" என்றான். அதுதான் அவன் செய்த முட்டாள்தனம்.

முன்னால் சென்ற குஜால், சட்டென்று நின்று, கிராம ஆட்கள் இருவரை அழைத்தான்.

"அடுத்த கிராமத்திற்கு மணமகன் அழைப்புக்காக சென்றவர்களிடம் இங்கே வரவேண்டாம் என்று தகவல் கொடுத்துவிடுங்கள். விரைவாகச் செல்லுங்கள்" என்றான். அது மட்டும்தான் குஜால் செய்த ஒரே ஒரு புத்திசாலிதனமான காரியம்.

கிராம ஆட்கள் இருவர் வழிகாட்ட குஜால் தன் ஆட்களுடன் கிராமத்துக்குள் சென்றான்.

பஞ்சாயத்து நடைபெற்ற இடத்துக்கு அவர்கள் போனபோது, பஙசாயத்துத் தலைவர் இரத்த வெள்ளத்தில் சரிந்துகிடந்தார்.

ஆங்காங்கே பல உடல்கள் துப்பாக்கிக் குண்டுகளால் சல்லடையாக்கப்பட்ட நிலையில் கிடந்தன.

பூலான் ஆட்களை எங்கும் காணவில்லை.குஜாலுக்கு உள்ளூர சந்தோஷமாக இருந்தது.

குசுமாவுக்கு வீரமாகக் காட்டிக் கொண்டானே தவிர, பூலான் ஆட்களின் பலம்தங்களைவிட அதிகமாக இருப்பதை நினைத்து உள்ளூரப் பயந்துகொண்டுதான் வந்தான்.

பூலான் போய்விட்டாள் என்றதும் குசுமாவுக்கு வீரம் காட்ட நினைத்தான் குஜால்.

"அடியே... எங்கேயடி ஒழிந்து கிடக்கிறாய்? குஜால் வந்திருக்கிறேன். எங்கேயடி உன் ஆட்கள்? கூட்டிவாடி" என்று தொண்டை நரம்புகள் புடைக்க கத்தினான்.

பூலானும், அவள் ஆட்களும் கிராமத்தைவிட்டு வெளியேறிவிட்டனர் என்றஅசைக்க முடியாத நம்பிக்கையில்தான் குஜால் சவால்விட்டான்.

ஆனால் நடந்தது எதிர்பாராத காட்சி. குஜாலின் காதோரமாகக் கேட்டது வேட்டொலி.

திருப்பங்கள் தொடரும்...

---

மருத்துவம்

# ஜிம்முக்கு போவது ஆடம்பரமா?



என்ன விதத்தில் உடல் வடிவமைப்பை பெறுவது. அதிலும் குறிப்பிட்ட காலகட்டத்துக்குள் அந்த இலக்கை அடைவது என்ற ஆர்வமும் நோக்கமும் அவசியம். அதற்கு ஏற்ற வகையில் உடற்பயிற்சி கூடங்களும் பயிற்சியாளரும் உதவுவர்.

உடற்பயிற்சி செய்வோரும் அதற்கான கட்டுப்பாடுகள், குறிப்பாக உணவு விடயத்தில் மிகுந்த விழிப்புணர்வோடு இருக்கவேண்டும். முறையற்ற உணவுகாரணமாக விரும்பிய உடலமைப்பு கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம்.

இதற்கு உடற்பயிற்சி செய்வோரே பொறுப்பு. மேலும், ஸ்டீரோய்ட், மது, புகை போன்றவற்றையும் தவிர்க்கவேண்டும். ஒரு காலத்தில் ஜிம்முக்கு செல்வது ஆடம்பரமாக கருதப்பட்டது. பின்னர், தனிப்பட்டவர்களின் ஆர்வத்தையும் விருப்பத்தையும் பொறுத்து அமைந்தது. இன்றைய சூழ்நிலையில், உடல்நலம், ஆரோக்கியம் பற்றிய விழிப்புணர்வு அதிகரித்துள்ளதால் அன்றாட வாழ்வில் ஒன்றாகி விட்டது.

### பொன்னாங்கண்ணி



இக்கீரையுடன் மிளகும், உப்பும் சேர்த்து சாதத்துடன் சாப்பிட்டு வந்தால் உடல் எடை குறையும்.

துவரம் பருப்பு, நெய்யுடன் சேர்ந்து சாப்பிட்டால் உடல் எடை கூடும்.

### மாதவிடாய்ச் சிக்கல்கள் தீர...



இம்பூரல் செடியை நன்கு கழுவி கைப்பிடி அளவு எடுத்து நீர் விட்டு விழுதாக அரைத்து 10 கிராம் அளவு பாலில் தினம் இருவேளை உண்டுவரப் பெண்களில் காணும் அதிகரித்த மாதவிடாய்ப் போக்குத் தீரும். இம்பூரல் செடியை நன்கு கழுவி கைப்பிடி அளவு எடுத்து நீர் விட்டு விழுதாக அரைத்து 10 கிராம் அளவு பாலில் தினம் இருவேளை உண்டுவரப் பெண்களில் காணும் அதிகரித்த மாதவிடாய்ப் போக்குத் தீரும்.

### மூலநோய் குணமாக...



துத்தி துத்தியின் இலைகளை நெய்யில் வறுத்து உண்டு வர மூலம் குணமாகும்.

### குதிக்கால் வாதம் தீர, கட்டிகள் உடைய



எருக்கின் பழுப்பிலைகளை அனலில் வாட்டிச் சாறு பிழிந்து அதனுடன் சிறிது சுண்ணாம்பும் தேனும் கலந்து குழைத்து விடக்கடிகளின் கடிவாயில் தடவிவர ஆரம்ப நிலையிலுள்ள விடம் இறங்கும். கட்டிகளின் மீது பூசிவரக் கட்டிகள் உடையும்.

எருக்கின் பழுப்பிலையைச் சுட்ட செங்கல்லின் மீது வைத்து அதன்மீது குதிக்காலைச் சூடு பொறுக்குமளவு வைக்கக் குதிக்கால்வாதம் தீரும்.

**கீழா நெல்லிச்சாற்றைக்** கலந்து நல்லெண்ணெய் இட்டுக் காய்ச்சி தலைக்குத் தேய்த்து குளித்து வந்தால் கண் நோய்கள் விலகும்.

சொறி, சிரங்குகளுக்கு சிறந்த மருந்து.

உடலை, தோலைப் பளபள என்று மாற்றுவதில் பெரும்பங் குண்டு.

மூல நோய், மண்ணீரல் நோய்களை குணப்படுத்த ஏற்றது.

### விக்கல் நிற்பதற்கு....

ஒரு கரண்டி சீனி அப்படியே வாயில் போட்டு விழுங்குங்கள். நாக்கில் திடீரென வந்து விழும் இனிப்புச்சுவையால், வாயில் இருக்கும் நரம்பு முனைகள் தூண்டப்படுகின்றன. இதனால் விக்கல் விலகுகிறது.

### இருமல் குணமாக...

தூதுவளையின் இலைகளை எண்ணெயில் காய்ச்சி வடித்துக் கொண்டு அதில் 10 சொட்டுகள் தினம் இருவேளை குடித்து வர இருமல் குணமாகும், பசி உண்டாகும்.

### காய்ச்சல் குணமாக...



நில வேம்பின் சமூலத்தைக் குடிநீர் செய்து காலை, மாலை 30 மி.லீ வீதம் கொடுத்து வரக் காய்ச்சல் குணமாகும்.

### கூந்தல் உதிர்தலை தடுக்க...



அனைவருக்குமே வெதுவெதுப்பான தேங்காய் எண்ணெயில் தலைக்கு மசாஜ் செய்வது நன்கு தெரியும். இதனால் கூந்தலுக்கு எண்ணெய் பசை அதிகரித்து, வறட்சியால் கூந்தல் உதிர்தலை தடுக்கலாம் என்பது தெரிந்தது. ஆனால் எப்படி தேங்காய் எண்ணெய் கூந்தல் உதிர்தலைத் தடுப்பதில் சிறந்த பொருளாக உள்ளதோ, அதேப் போல் தேங்காய் பாலும் கூந்தல் உதிர்தலைத் தடுக்கும். அதற்கு தேங்காய் பாலை கூந்தலுக்கு தடவினால், கூந்தல் உதிர்தல் பிரச்சினைகளை தடுக்கலாம்.

# மரணத்தின் வாழ்வும் வாழ்வின் மரணமும்

சமீப காலங்களில் வெளிவரும் நாளிதழ்களில் குறிப்பாக தினத்தந்தி நாளிதழில் ஒரு நாளுக்கு சராசரியாக 20 படங்கள் வீதம் புத்தம் புதிய தமிழ்த் திரைப்படங்களின் விளம்பரங்கள் வெளி வந்து கொண்டிருக்கின்றன.

ஒரு திரைப்படம் எடுப்பதற்கு குறைந்தபட்சம் (புதுமுகங்களை வைத்து) 11/2கோடியிலிருந்து 2கோடி வரை ஆகிறது என்று கோடம்பாக்க வட்டாரம் சொல்கிறது. அப்படியானால் ஒரு நாளுக்கு 40 கோடி, 30 நாளுக்கு 1200 கோடி, ஒரு வருடத்திற்கு... என்னதான் நடக்கிறது கோலிவுட்டில்?

இந்த அபரிமிதமான வளர்ச்சியை சமீப காலங்களில் வளர்ந்து கொண்டிருக்கும் டிஜிட்டல் கேமரா தொழில்நுட்ப வளர்ச்சியில் இணைத்துப்பார்க்க வேண்டும். படச்சுருளில் படம் எடுப்பது குறைந்து டிஜிட்டல் முறையில் படமெடுப்பது பெரிதும் அதிகரித்துக்கொண்டிருக்கிறது.

டிஜிட்டல் கேமரா தொழில்நுட்பத்தில் 35 இலட்சத்திலிருந்து 50 இலட்சத்திற்குள் ஒரு திரைப்படத்தை எடுக்கலாம் என்ற சாத்தியக் கூறுகள் உருவாக ஆரம்பித்திருக்கின்றன. உடனே தமிழகத்தின் பட்டி தொட்டிகளிலெல்லாம் பற்றிக் கொண்டது தீ.

தமிழகம் முழுக்க ரியல் எஸ்டேட் பிஸினஸ் உச்சபட்சமாக இயங்குவதால், தங்களிடமுள்ள 6500 சதுரஅடி நிலத்தை விற்று கலைச்சேவை செய்ய கோடம்பாக்கம் வந்து சேருகிறார்கள் தயாரிப்பாளர்கள்.

இந்தத் தொழில்நுட்ப வசதியில் எடுக்கப்பட்ட மெரினா உட்பட ஒன்றிரண்டு திரைப்படங்கள் வெற்றியடைந்ததன் பின்னணியில் இந்த வரிசை மேலும் நீள்கிறது.

இப்படி மிகப் பெரும் ரிஸ்க் எடுத்து வெளியாகும் படங்களில் 99 சதவிகிதப் படங்கள் கண்சிமிட்டும் காலத்திற்குள் காணாமல் போய்விடுகின்ற துயரமும் தொடர்ந்து நடந்து கொண்டுதானிருக்கிறது. இந்தப் பெரும்பான்மையான படங்கள் தோல்வியுறும் புள்ளி எது என்று அவதானித்துப் பார்த்தால், ஒரு படைப்புக்கு அடிநாதமாக விளங்கும் கதைப்பகுதியில் கோட்டை விட்டிருப்பது புலனாகிறது.

பொதுவாகவே தமிழ்த் திரைப்படமேதைகள் ,கதைகளில் கவனம் செலுத்துவதில்லை. 'கதை லைனில்'தான் கவனம் செலுத்துகிறார்கள். காட்சியமைப்புகளிலும் பரபரப்புகளிலும்தான் கைகளை விரிப்பார்கள். "நான் கை வைத்தால் கதையில்லாத விடயம் கூட காவியமாக மாறிவிடும்' என்ற உயர்ந்த சிந்தனை கொண்டோர் இவர்கள். இந்தப் போக்கு எப்படி வளர்ந்தது என்பதை அறிய சற்றே பின்னோக்கிப் போகலாம்.

தமிழ்த் திரைப் படத்துறை மரபுவழிப்பட்ட திரைப்படங்களிலிருந்து விலகி நவீன திரைப்படங்களாக உருவெடுத்த காலகட்டத்தைச் சுருக்கமாக, ஒரு வசதி கருதி 3 பிரிவுகளாகப் பிரிக்கலாம். 1. ஸ்ரீதர் காலம். 2.பாலசந்தர் காலம் 3. மகேந்திரன், பாலுமகேந்திரா, பாரதிராஜா காலம்.

மரபான கதை சொல்லலிலிருந்து விலகி, மனித வாழ்வின் நவீன மனங்களில் உருப்பெறும் அன்பு, நேசம், பிரியம், காதல் என்கிற உணர்வுகளின் குறுக்குவெட்டுத் தோற்றத்தை அதன் மகிழ்ச்சி, துயரம், சிக்கல், சிடுக்குகளை முன்வைத்து அலாதியான பார்வையில் சொல்லியது முதல் காலகட்டம்.

இதன் தொடர்ச்சியாக, இந்தப் போக்கை, நகரம் சார்ந்த மனித வாழ்வியல் பிரக்ஞையின் தீவிரத்துடன் புதிய பார்வையில் சொல்லியது 2வது காலகட்டம்.

3ஆவது காலகட்டம் மிக முக்கியமானது. அதுவரை சொல்லி வந்த நகரக் கதையாடல்களிலிருந்து முற்றாக விலகி கிராமத்து மண்ணை அதன் ஈரமணம் மாறாமல் முன்வைத்தது. மண்ணுக்குள்ளிருந்து தோண்டியெடுத்துகொடுக்கும் சர்க்கரை வள்ளிக்கிழங்கின் அபாரமான ருசியுடன் கதையாடல்கள் திரைவெளியில் அலையடித்தன. எளிய மனிதர்களின் வாழ்வியலும், கிராமத்து மண்ணின் தொன்மங்களும், இதுவரை சொல்லப்படாத புதிய கதைவெளியில் நிகழ்த்திய அழகியலும், மசாலா படமுமல்லாத - தீவிர கலைரசனைக்கு மட்டுமே முக்கியத்துவம் தரும் தீவிர கலைப்படமுமல்லாத ஒரு மாற்றுத்திரைவெளியாக (Parallel Cinema) மலர்ந்தது.

வணிக நோக்கத்தைப் பெரிதும் வலியுறுத்தாமல், தொழில்நுட்ப சாதனங்களுக்கு முக்கியத்துவம் தராமல், எந்தவித சமரசங்களுக்கும் இடம் கொடுக்காமல், எளிய மனித வாழ்வியலை, அதன் அற்புதமான கலையாக நிகழ்த்திக் காட்டிய இக்கால கட்டம் தமிழ்த் திரைப்பட உலகின் பொற்காலம் என்று கணிக்கலாம்.

அதற்குப்பின் வந்த காலகட்டம் இந்தப் போக்கைப் பல்வேறு தளங்களுக்கு நகர்த்தியது. கலைஞர்கள், வணிக நலன்களையே பெரிதும் வலியுறுத்தினர். கதாநாயக அந்தஸ்துகளுக்கு முக்கியத்துவம் தந்தனர். கதைக்கு சற்றும் பொருத்தமில்லாத மசாலா காட்சிகள், காமெடிகள், பஞ்ச் டயலாக்குகள் போன்ற இரண்டாந்தர மூன்றாந்தர விஷயங்களில் ஈடுபாடு காட்டினர். மற்றும் சிலர், தொழில்நுட்ப விடயங்களிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தி, கலை ரசனையை, தொழில்நுட்பக் கலைரசனையாக உருவேற்றினர். ஊடகங்களும், ஊடகங்களில் வலம் வரும் திரைப்பட மதிப்புரையாளர்களும், யாரையும் பகைத்துக் கொள்ளக்கூடாது என்ற பெருந்தன்மையுடனும், ஒரு பரஸ்பர எதிர்பார்ப்பு நோக்கத்துடனும் அதை நியாயப்படுத்தினர். அதுவரை பெரிதும் போற்றப்பட்டு வந்த கலை மதிப்பீடுகள் உருக்குலைந்து சரிந்து வீழ்ந்தன (இந்தக் கலை சார்ந்த வீழ்ச்சி இலக்கிய எழுத்து உலகத்திலும், ஊடக உலகத்திலும் நடந்த நிகழ்வை விரிவாக இன்னொரு சமயத்தில் எழுதலாம்). இந்தச் சந்தடியில் 'கதை' என்னும் உயிர்ப்பு குற்றுயிரும் குலையுயிருமாகப் போயிற்று.

இந்த ரீதியில் தொடரும் தற்போதைய தலைமுறையில் புத்தம் புதிய திரைப்பட இயக்குனர்கள் அதிகளவில் தோன்றிக் கொண்டிருக்கிறார்கள். கதை பற்றிய பிரதான அம்சங்களைக் கவனத்தில் கொள்ளாதவர்கள் சுவடு தெரியாமல் மறைந்து போவதும், கதையின் அடிநாதத்தை திரைப்படக் கலையின் உயிர் மூச்சாக உருமாற்றுபவர்கள் சுவடு பதிப்பதும், நிதர்சனமான காட்சிகளாக நடந்தேறிக்கொண்டிருக்கின்றன.

ஆனால், இந்தச் சிந்தனையைத் தவறாக அர்த்தம் எடுத்துக் கொண்டவர்கள், சர்வதேசத் திரைப்படங்களின் குறுந்தட்டுகளைப் பார்வையிட்டு "கதையைப் பிடிக்கிறார்கள்". காட்சித் தொகுப்புகளை அபேஸ் செய்கிறார்கள். இவைகளில் ஒரு சில மிகப் பெரும் வெற்றியைத் தருகின்றன.

[தொடரும்...]




# காஜல் சொன்ன இரகசியம்

நடிகையாகுவதற்கு முன்பு இரண்டு பேருடன் தொடர்பில் இருந்ததாகவும் பின்பு அவர்களுக்காக அதிக நேரத்தை விணடிக்கும் விடயமாக இருப்பதால் அவர்களிடமிருந்து விலகியதாகவும் காஜல் கூறியுள்ளார்.

தமிழ், தெலுங்கில் முன்னணி நாயகியாக உள்ள காஜல் அகர்வாலின் காதல் அனுபவங்கள் குறித்து கேட்டபோது, முதல் முறையாக மனம் திறந்துள்ளார். அவர் கூறுகையில், "மும்பையில் நட்புடன் பழகுவதென்பது சாதாரண விடயம். என்னுடன் நட்பாக பழகுபவர்களை எனக்கு மிகவும் பிடிக்கும்.

அதே நேரம் என்னிடம் நிறைய உரிமை எடுத்துக் கொண்டு பழகுவது பிடிக்காது. என்னுடன் நடிக்கும் சக நாயகர்களுடன் நட்பு ரீதியிலேயே பழகுகிறேன். அவர்கள் மும்பை வந்தால் வீட்டுக்கு அழைத்து சாப்பாடு போடுவேன். அந்த எல்லையை தாண்ட மாட்டேன். ஆண் நண்பர்களால் எனக்கு நிறைய பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

அதற்காக நான் அழுதும் இருக்கிறேன். எனக்கு இரண்டு பேரிடம் தீவிரமான நெருக்கம் இருந்தது. அதில் ஒருவரிடம் நடிகையாவதற்கு முன்பே பழகினேன். இந்த தொடர்புக்காக நிறைய நேரம் ஒதுக்கவேண்டி இருந்ததனால் அதை முறித்துக்கொண்டு விலகி விட்டேன். பின்பு நடிகையான பின் மற்றொருவரின் உறவையும் துண்டித்துக் கொண்டேன்" என்றார்.




# ஒரு தாயின் சபதம்!


ராதாவின் இளைய மகளான துளசி கடல் படத்தில் நடித்து தமிழ், தெலுங்கு என இரண்டு மொழிகளிலும் ஒரே நேரத்தில் அறிமுகமானார். இந்நிலையில், தற்போது தமிழில் ஜீவாவுக்கு ஜோடியாக யான் படத்தில் நடித்து வருகிறார். இதையடுத்து தெலுங்கு படங்களில் நடிப்பதில் அதிக ஆர்வமாக இருக்கும் துளசி தற்போது தாய்குலத்துடன் ஹைதராபாத்தில் உள்ள ஒரு ஸ்டார் ஹோட்டலில் முகாமிட்டு, பிரபல சினிமா கம்பெனிகளுக்கு படையெடுத்து வருகிறார். இதற்கு காரணம் பெரும்பாலும் தமிழ், இந்தி சினிமாவை விட தெலுங்கு சினிமாதான் நடிகைகளுக்கு நல்லதொரு அங்கீகாரத்தை கொடுக்கும் என்பது மாஜி நடிகையான அம்மா ராதாவின் அனுபவமாம். ஆனால் வாய்ப்பு கேட்டு சென்ற சில கம்பெனிகளில் இன்னமும் துளசி பால்வடியும் முகமாகத்தான் இருக்கிறார். இவரை வைத்து எப்படி படம் பண்ண முடியும் என்று கேள்வி எழுப்பியுள்ளனர். இதற்கு பதிலளித்த ராதா, இன்னும் இரண்டு மாத கால அவகாசத்தில் என் மகளை சிறந்த நடிகையாக்கி காட்டுகிறேன். அதன் பின்பு அவளை அடிச்சிக்க இங்கு ஆளிருக்காது என்று கூறியுள்ளார். இதனால் துளசியின் உடல்கட்டு, முகவெட்டை வசீகரப்படுத்தும் முயற்சியில் இறங்கியிருக்கிறார் ராதா.

## பிராணிக...

பிராணிகள் பா...
நடிகை த்ரிஷா, ...
பயன்படுத்துவதற்கு...
முழுவதும் புதிய ...
முயல், எலி போன்...
வேண்டும் என்றும் ...
இது குறித்து த்ரிஷ...
அமைப்பில் இருக்...
கள் பயன்படு...
இதற்கு...
மு...



வானவராஜன் வல்லவராஜ...



# ஆதிபகவனை இழுத்து விழுத்த மாட்டாரா பரதேசி?

அமீரின் ஆதிபகவன் படத்துக்கு மத அமைப்புகள் ஏற்படுத்தும் சிக்கல்களை விட பெரிய சிக்கலாக இன்டஸ்ட்ரிக்கு உள்ளேயே ஒரு சிக்கல் இருந்தது. தமிழ் திரையுலகின் இரண்டு டாப் ஹீரோக்களை கையில் வைத்திருக்கும் சிவகுமார் குடும்பத்துக்கும் அமீருக்கும் இடையே வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத அளவில் இருந்தது உள் பகை. ஆதிபகவன் ரிலீஸ் ஆகும்போது கௌன்டர் அட்டாக் கொடுக்க திட்டமிடப்பட்டு இருந்தது. ஆதிபகவன் எப்போதோ முடிந்த பின்னரும் இன்னமும் பெட்டிக்குள் தூங்குவது இந்த கௌன்டர் அட்டாக்கில் இருந்து தப்பித்துக் கொள்வதற்குதான். ஆதிபகவன் ரிலீஸின்போது அதே தேதியில் சகோதரர்கள் இருவரில் ஒருவரின் படத்தையும் ரிலீஸ் செய்வது என்பதே ஆரம்ப பிளான்.

ஆனால், சகோதரர்களின் சமீபத்தைய படங்கள் எல்லாம் தள்ளாட்டத்தில் உள்ளன. அதுவும் சமீபத்தில் பல கோடிகளில் வியாபாரமாகி வெளியான ஒரு சகோ தரரின் படத்தை பவர் ஸ்டார் (கண்ணா லட்டு) அசால்ட்டாக முந்திச் சென்றதில், இன்ட்டஸ்ட்ரியே நமுட்டுச் சிரிப்பு சிரிக்க தொடங்கியிருக்கிறது.

இந்த நிலையில் அமீருக்கு கௌன்டர் அட்டாக் கொடுக்க நட்சத்திரக் குடும்பம் தேர்ந்தெடுத்த அஸ்திரம், பாலாவின் "பரதேசி". அந்தக் படத்தின் வெளியீட்டு உரிமையை பெரிய நோட்டு கொடுத்து வாங்கி கையில் வைத்திருக்கிறார்கள் இவர்கள்.

பாலாவின் பரதேசியும், முடிந்த ரிலீஸ"க்கு ரெடி. ஆனால், இன்னமும் தேதி அறிவித்தபாடில்லை. காரணம், ஆதி வரும்போது, பரதேசி வரவேண்டும் என்ற உள் போட்டி. பரதேசி வரும்போது, ஆதி வரக்கூடாது என்பதால், அமீர் தரப்பும் ரிலீஸ் தேதியை அறிவிக்கவில்லை. இரண்டும் பெட்டிக்குள் காத்திருக்கின்றன. இந்த நிலையில்தான், விஸ்வரூபம் பிரச்சினை விஸ்வரூபம் எடுத்தது. விஸ்வரூபம் பிரச்சினைக்காக கமல் ஆபீஸில் எதிர்பாராமல் சிவகுமாரும் அமீரும் நேருக்கு நேர் சந்தித்துவிட, இரு தரப்பும் தனிமையில் மனம் விட்டுப் பேச, அமீர் நட்சத்திர குடும்பத்துக்காக ஒரு படத்தை டைரக்ட் பண்ணி கொடுப்பதாக உறுதி மொழி கொடுத்திருக்கிறார். இதனால் இப்போது இரு தரப்பும் ரிலாக்ஸ்ட்.




# நேரம் கூடிவரும்போது தலயுடன் சேருவர் முருகதாஸ்

ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் அஜீத் இரட்டை வேடங்களில் "ரெட்டை தலை" என்ற படத்தில் நடிப்பதாக வெளிவந்த செய்தியை முருகதாஸ் மறுத்துள்ளார்.

இதுகுறித்து இயக்குனர் ஏ.ஆர். முருகதாஸ் தெரிவிக்கையில், நானும் அந்த செய்திகளை படித்தேன். சரி நல்ல விடயம் தானே என்று பதில் ஏதும் சொல்லவில்லை. ஆனால் அவை எல்லாமே யூகத்தின் அடிப்படையிலான செய்திகள் தானே தவிர உண்மையில்லை. அஜீத்துடன் ஒரு படம் பண்ண வேண்டும் என்ற ஆசை எனக்கும் உண்டு அவருக்கும் உண்டு. ஆனால் அதற்கான நேரம் இன்னும் வரவில்லை. வரும்போது சேர்ந்து பணியாற்று வோம்.

நான் இப்போது "துப்பாக்கி" இந்தி ரீமேக்கில் பிசியாக இருக்கிறேன். இப்படத்திற்கே எனக்கு ஒரு வருடம் ஆகிவிடும், பொதுவாக நான் பெரிய பட்ஜெட்டில் ஆக்ஷன் படங்கள் தான் இயக்குகிறேன் என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. அதை மாற்றும் வகையில் சிறிய பட்ஜெட்டில் புது முகங்களை வைத்து ஒரு காதல் படம் எடுக்கும் எண்ணமும் இருக்கிறது. கமல் சாரை வைத்து உலக தரத்தில் ஒரு படத்தை இயக்க வேண்டும் என்பது வாழ்நாள் கனவு என்று தெரிவித்துள்ளார்.




# ...நுக்கு ஆதரவாக த்ரிஷா

...காப்பு அமைப்புக்கு உதவியாக இருக்கும் ...சோதனைக் கூடங்களில் எலி, முயலை ...திர்ப்பு தெரிவித்துள்ளார். நாடு ...ந்து கண்டுபிடிப்புக்கான பரிசோதனைகளை ... விலங்குகளில் நடத்துவதை தடை செய்ய ...ண்டித்துள்ளார்.

... கூறுகையில், நான் பிராணிகள் பாதுகாப்பு ...றேன். பரிசோதனை கூடங்களில் பிராணி ...வதை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம். ...தடை விதிக்கப்பட வேண்டும். ஜெயிலில் ...ந்தைகளை பாலியல் பலாத்காரம் ...செய்தவர்கள் என்று அதிகப்படியாக குற்றவாளிகள் இருக்கிறார்கள்.

பரிசோதனைக் கூடங்களில் அப்பாவி விலங்குகளுக்கு பதிலாக இந்த குற்றவாளிகளை பரிசோதனைக்கு பயன்படுத்தி தண்டிக்கலாம் என்று தெரிவித்துள்ளார்.



# நடிப்பாரா சந்தானம்?

ஒரு கல் ஒரு கண்ணாடி படத்துக்கு பின்பு ராஜேஷ் இயக்கும் படம் ஆல் இன் ஆல் அழகுராஜா. இப்படத்தில் கதாநாயகனாக கார்த்தியும், நாயகியாக காஜல் அகர்வால் நடிக்கவிருக்கிறார்கள். இவர்கள் இருவரும் பிஸியாக இருப்பதால் ராஜேஷ் திரைக்கதை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். தற்போது இயக்குனர் திரைக்கதை அமைப்பை முடித்துவிட்டதால், ஆல் இன் ஆல் அழகுராஜாவின் படப்பிடிப்பு அடுத்த மாதம் குற்றாலத்திலும், இரண்டாம் கட்ட படப்பிடிப்பு மதுரையிலும் நடத்தவிருக்கிறார். மேலும் அலெக்ஸ் பாண்டியன் படத்தில் கார்த்திக்கிற்கும், சந்தானத்துக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டிருப்பதால், இதில் கார்த்தி, சந்தானம் கூட்டணி எந்த அளவுக்கு ஒர்க் அவுட் ஆகும் என்று தெரியவில்லை. சந்தானத்தின் வெற்றிகளுக்கு இயக்குனர் ராஜேஷ் தான் காரணம் என்பதால் மனஸ்தாபத்தை மறந்து விட்டு சந்தானம் நடிப்பார் என்று கூறப்படுகிறது.

# அடக்கமான நாயகன்

திரையுலகில் தான் நடித்த ஒரு படம் வெற்றிப்படமாக அமைந்துவிட்டால் அந்த நடிகரின் ஆட்டங்களை பார்க்கவே சகிக்க முடியாது. ஆனால் அடுத்தடுத்து வெற்றிப்படங்களை கொடுத்தாலும் மிக அமைதியாகவே விஜய் சேதுபதி இருப்பதாக கோடம்பாக்கத்தில் பேச்சு நிலவுகிறது.

இதிலும் ஆரம்பத்தில் 50 ஆயிரம் ரூபாய் வாங்கிக்கொண்டிருந்த நடிகர்கள் இப்போது ரூ.60 லட்சம் வரை சம்பளமாக கேட்கிறார்கள். ஆனால் விஜய் சேதுபதி தனக்கு 20 லட்சம் ரூபாயே போதும் என்கிறாராம். இவரின் இந்த போதுமென்ற மனசு தயாரிப்பாளர்களுக்கு மிகவும் பிடித்துவிட்டதாம்.

மேலும் குறும்படம் எங்காவது திரையிட்டால் அங்கு ஆஜராகிவிடுகிறாராம். ஏனெனில் பிட்சா, நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம் போன்ற படங்கள் அனைத்தும் குறும் பட இயக்குனர்களால் இயக்கப்பட்டவையே.

# திரைக்கு வருகிறார் ஜூனியர் வடிவேலு

என் ராசாவின் மனசிலே எனும் திரைப்படத்தின் மூலமாக தமிழ் திரையுலகிற்கு அறிமுகமானவர் வடிவேலு. இவர், ஆக்ஷன் படத்தின் மூலம் விரைவில் தனது மகனை அறிமுகப்படுத்த இருக்கிறார். இந்தப் படத்தை ஆதம் பாவா என்பவர் இயக்குகிறார். இதற்கான தயாரிப்பாளரும் தயாராகிவிட்டார். சமீபகாலமாக திரையுலக வாரிசுகள் நடிக்க வந்து கொண்டிருக்கிற சூழலில் வடிவேலுவும் தனது மகனை அறிமுகப்படுத்தும் புதிய படத்தின் அறிவிப்பினை விரைவில் எதிர்பார்க்கலாம்.



# கண்ணன் என் காதலன்

சமீபத்தில் கொலிவூட்டின் இளம் பின்னணி பாடகியும் ஜி.வி பிரகாஷின் தோழியுமான சைந்தவி நிகழ்த்திய வித்தியாசமான இசை நிகழ்ச்சியின் பெயர் கண்ணன் என் காதலன். கண்ணன் மேல்கொண்ட காதலை மீராவாய், ராதாவாய், யசோதையாய் அவர் உருகி பாடியிருக்கிறார்.

இறை வணக்கமாக ஸ்ரீ மன்னரயணாவில் தொடங்கி குறை ஒன்றும் இல்லை என்று முடித்தார். ஒவ்வொரு பாடலின் முன்பு அதை பற்றிய வர்ணனையை செல்வி. கிருத்திகா தூய தமிழில் வழங்கியது ரசிக மனங்களை அந்தக் கால கட்டத்திற்கே அழைத்துச் சென்று பாடலுடன் ஒன்ற வைத்தது.

பெரும்பாலான பாடல்கள் திருமதி ஆளு கர்நாடக சங்கீத அம்மையார திரையிலும் மேடைகளிலும் பாடியவை. காற்றினிலே, கிரிதர கோபாலா, நந்தபாலா, ஜகதோதாரனாவில் மெலோடியை குழைத்து கொடுத்த அவர், பக குங்குரு என்ற ஹிந்தி பாட்டிலும், மறவேனேவிலும் விறுவிறுப்பை காட்டினார்.

அவருடைய ஆசை முகத்தை கேட்டவர்க்கு கண்ணன் முகம் மறக்குமா என்ன? உடல் உருக என்று அவர் விருத்தம் பாடிய பொழுது அரங்கமே உருகியது. இவருடன் இசைத்த பக்கவாத்ய கலைஞர்களை பக்காவத்யம் என்று சொன்னால் அது மிகை ஆகாது. இரண்டு மணி நேரம் 'நுளம்புக் கடியையும் மேலே பறந்த விமானங்களின் இரைச்சலையும் மீறி ரசிகர்கள் இறுதி வரை இருந்து ரசித்தது இந்த வித்தியாசமான நிகழ்ச்சிக்கு கிடைத்த வரவேற்பு என்று நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் கூறுகிறார்கள்.

# தேன் கிண்ணம்



# படிகள்

படிகள்
49 படிகள்
செங்குத்தான படிகள்
50 ஆவது படி
அவளது வீட்டு வாசற்படி.

ஒரே முறையில்
இரண்டு மூன்று படிகளைத் தாண்டி
அவளது வாசற்படியில்
நான் கால் வைக்கும் போது
காதலோடு வாசலில் அவள்.

திரும்பும் போதோ
படிப் படியாய் நின்று
திரும்பித் திரும்பி
அவள் முகம் பார்த்து...
பிரிவதோ இதயம் சிதையும் வேதனை.

அன்றொரு நாள்
அவசரமாக அவள் படியிறங்க
கால் தடுக்க, படிகளில் தலைமோத
படிகளெங்கும் ஓடியது
அவளது பச்சை இரத்தம்.

பல்லாண்டுகளுக்குப் பின்னரும்
அதே படிகளில் நான் தனியாக
தள்ளாடித் தள்ளாடி ஏறும் போது
நெஞ்சம் நிறைய அவளது நினைவுகள்
கண்கள் நிறைய கண்ணீர்த்துளிகள்.

அ.சந்தியாகோ — கண்டி.

# ஈழத்து கவிஞர்கள்



## எல்.வஸீம் அக்ரம்

வளர்ந்து வரும் இளம் கவிஞர்
அநுராதபுரம் 'படிகள்' இருமாத
இலக்கிய இதழின் ஆசிரியர்.

**இவரது கவிதைத் தொகுதிகள்**

1. மண்ணில் துழாவும் மனது (2008)
   ஆக்கிரமிப்பின் கால் தடம் (2009).

தொகுப்பாளர் : வேலிகளைத் தாண்டும் வேர்கள் - (அநுராதபுர மாவட்ட கவிதைத் தொகுதி)

பல்கலைக்கழக மாணவராக இருந்த வேளை
பல்வேறு வெளியீடுகளின் இணை ஆசிரியர்.

**இவரது கவிதையொன்று**

### சமத்துவப் பாடல்

விஞ்ஞானம் ஏந்தித் திரிகின்ற
நவீனத்துவத்தின் உருவங்களிலிருந்து
மெய் ஞானங்கள் அற்றுக்கிடக்கும்
மனிதங்களிலிருந்து
ஒரு பீனிக்ஸ் பறவையாய்
உய்க்கெழ
இந்த மண்ணின் யுத்த வன்முறைகளின்
கறுத்த எச்சங்களும்
மனதுகளில் இறுக்கிப் பூட்டப்பட்டுள்ள
இனத்துவேசக் கோஷங்களும்
ஒரு பாறையாய் முலாமிட்டுக்கிடக்கின்றன.

சமரசத்தின் மீதான வாஞ்சை
இன்னும் எங்கோ இருக்கின்ற
ஒரு கதையாடல் பிரதிபோல்
புறநிலை வாசகனாய் நின்று கொண்டு
தவிக்கின்ற நாட்களில்
யார்தான் சமாதானத்தின்
யதார்த்தங்களை முடிசூட்டுவது?

குறைந்தபட்ச தேர்தல் வாக்குறுதியாய்
அல்லது வாக்கு மூலங்களாய்
இந்த சமத்துவப் பாடல்.

# துப்பாக்கி யாருடையது அல்லது மூவர் சுட்டனர்



- நிலாம் -

தட்டிக் கேட்டேன்
கேட்கவில்லை கொஞ்சம்
குரலுயர்த்தினேன்
வேண்டாமென்றனர்
ஆத்திரத்தோடு
"அவர்களை"
நோக்கினேன்
எச்சரித்தனர்.

சமூக அக்கறையோடு
நாலு கேள்விகள்
கேட்டேன்
நையப்புடைக்கப்பட்டேன்
வாளினாலும்
வெட்டுண்டேன்.

பங்குனி மாத நடுப்பகுதி
நடுச்சாமத்தில்
நாலைந்து பேர்
என் வீட்டினுள்
அத்துமீறினர்...

யாரென நான்
கேட்குமுன்னமே
துப்பாக்கி - என்னை
துக்கம் விசாரித்தது

ஒருவன் சுட்டான்
சாகவில்லை நான்
இரண்டாமவன் சுட்டான்
நான் செத்துக்
கொண்டிருந்தேன்
மூன்றாமவன்
சரமாரியாய் சுட்டான்
சாகும் தருவாயில்
நான் கேட்டேன்
அவர்களைப் பார்த்து
"துப்பாக்கி யாருடையது...?"
"............"

# சொற்களின் அழுகை

நீ
இன்னும்
காணவில்லை
சொற்களின் அழுகையை
சில சமயங்களில் யாருக்கும் விளங்காமல்
பிண வீட்டின் அழுகையை விஞ்சியும்
சொற்களின் அழுகை
பெரும் மலை உச்சியையும் தாண்டிப் பரவுகிறது.
அச்சுறுத்துகின்ற வீட்டில் தவித்து நின்றும்
பார்வைகள் நீண்டு விரிந்தும்
தொடுக்கின்ற தொலைவெல்லாம்
கோடைகள் சூழ்ந்திருக்கவும்
ஒவ்வொரு எண்ணத்திலும் நப்பந்தல்
இறந்திருக்கும் நிலையிலும்
சொற்களின் அழுகை மேன் மேலும் உயிர்க்கிறது.
இன்னும் இதயமற்ற குரல்கள் ஒலி எழுப்புகின்ற
பெரும் கூட்டத்தின் நடுவே
சொற்கள் வளைந்து
தன் சுவாசத்தை இழக்கின்றன.
தேடாமல் தெருவில் விடப்பட்டு அலைகின்ற
பல்லாயிரம் தாய்களையும்
முதிர்ச்சி கைவிடப்படாத கன்னிகளையுமே
சொற்கள் தன்னுள் அதிகம்
பாதுகாத்து வைத்திருக்கின்றன.

- S.சாஹிரா -

# காதல் உள்ளம்

மனதோடு நினைத்து
மறுஉலகை
மறக்க எத்தனிக்கும்
இரு இதயம்

மந்திரம் மாய சூத்திரம் இவையெல்லாம்
காதல் செய்யும் தந்திரம்

தலைமுறை காக்கும் தலைவனுக்கும்
தலைவழி வருகிறதோ வரமறுக்கிறதோ
காதல் வழி வழி மறைக்கும்.

அலைபேசியில் சில சில
குறுஞ்செய்திகள்
"LOVE ME" "LIFI ME"
என்று எழுத தெரியாத பல உள்ளம்
பதறுகிறது.

இறையில் மனமில்லை காதல் சிறையில்
தவிக்கும் இரு உள்ளங்களுக்கு
கள்ளம் கபடமற்ற இரு உள்ளம்
கண்களால் கவிபாடி
இதயத்தால் அலைமோதியது.

மும்தாஜ் - சாஜஹான்
அம்பிகாவதி - அமராவதி
என்று காதலுக்கு உதாரணம் காட்டுகின்றனர்
உண்மையான காதல் என்று
அவர்களுடைய காதல் உண்மை என்று
உதாரணம்
காட்ட மறக்கிறார்கள்

கல்லால் எறிந்த வலியை விட
காதலால் தவித்த
இரு உள்ளத்தின் வலி
எப்படித் தெரியுமா?
என்
கண்ணீரில் தான் தெரியும்
சொல்ல முடியவில்லை.

- நிசாட் நின்பாத் -



# எழுந்திடுவீர் எம்பண்பியல் காத்திடவே

வீடுடைத்து உட் சென்று பலதிருட்டு
வீதியிலோ பெண்களிடம் நகை பறிப்பு
'வான்' நெரிசலில் தந்திரமாய் பணப்பறிப்பு
வயோதிபரைக் கொலை செய்து சொத்தெடுப்பு
ஏனைய்யா இந்நிலை எம்மவர்க்கு
எழுந்திடுவீர் எம் பண்பியல் காத்திடவே.

வீதியிலோ இளைஞர் குழாம் வண்டியுடன்
காதினிலோ ஓர் கடுக்கன் மறுகாதில் "செல்போன்"
வீணிலே வஞ்சிகளுடன் வீண் வம்பு பேசி
வெட்டுக்குத்து, வீடெரிப்பு, வீண்வாதம் ஏனைய்யா?
எழுந்திடுவீர் எம் பண்பியல் காத்திடவே...

சிறு செல்லாம் ஷெல் போனைக் கையிலேந்தி
சீர் கெட்டுப் போவதும் எதனாலே...
சிந்தையில் செயல்களில் தூய்மை கெட்டு
சீரான ஆன்மீகக் கல்வி சிதைந்ததே வந்தவினை
சீர் பெற்றுச் சிறுசுகள் செகத்தில் வாழ
எழுந்திடுவீரர் எம் பணிபியல் காத்திடவே.

ஏழைகளாய் இருந்தாலும் உழைத்திங்கே
எழில்வாழ்வு பெற்றிட எம் மண் உண்டு
ஏராளம் பணியிங்கே தாராளமாயிருக்க
ஏதிலியாய் ஊரெல்லாம் சுற்றிவந்து
'எயிட்ஸ்' நோய்க்காளாகி மடியுமுன்
எழுந்திடுவீர் எம் பண்பியல் காத்திடவே.

வெ.கோகுலன்
கோப்பாய்.

கலாபூஷணம்
கே.எஸ்.ஆனந்தன்.

அத்தியாயம் 13

25

# சிங்கை மைந்தன்

# அமரசிம்மன்



பெருமைமிக்க ஓர் நாட்டின் இளவரசியைத் கைத்தவம் பற்றக்கிடைத்த பேற்றை எண்ணி மகிழ்ந்தான். தனக்கு இப்படிப்பட்டஒரு நிலையை உருவாக்கிய குணவீரர் மீது மேலும் மரியாதையும், நன்றியுணர்வும் ஏற்பட்டது.

அவனுடைய சிந்தனையைக் கலைப்பதற்கு என்று வந்தவளாக மதுரவல்லி அவன் முன்தோன்றினாள்.

"சிந்தனை பலமாயிருக்கிறதே" என்று கேட்டு அவன் கரங்களைப் பற்றினாள்.

"தேவி! தங்கள் நாடும் தங்களைப் போன்று அழகுள்ள வளமுள்ள நாடாக விளங்குகின்றது. நந்தவனங்களும். வணிகத்தவர்களும் மனதை கொள்ளையாடி விட்டன" என்றான்.

"சேர நாட்டில் பிறந்த பெண்கள் மட்டுமல்ல, ஆண்களும் அழகானவர்களே. இந்த நாட்டில் பிறந்ததற்காக பெருமைப்படுகின்றோம்" என்றாள்.

"உண்மைதான் தேவி. தங்களைத் துணைவியாய் அடைந்தது நான் செய்த பாக்கியம்"

"நான் மட்டும் என்னவாம்? தங்களைப் போன்றே ஓர் மாவீரனை மணாளனாக அமைந்தது நான் செய்த பாக்கியமல்லவா?" என்று அவனை அழைத்துக் கொண்டு மணிமண்டபத்துக்குள் சென்றாள்.

அங்கே குணவீரர் சேர மன்னருடன் உரையாடிக் கொண்டிருந்தார். அவர்களைப் பார்த்ததும் புன்முறுவலுடன் வரவேற்றனர். இருவர் பாதங்களிலும் வீழ்ந்து "எங்களை ஆசீர்வதியுங்கள்"என்றனர்.

"நல்லது. நலமுடன் வாழ்க. எங்கள் ஆசீர்வாதம் என்றைக்கும் உண்டு" என்று இருவரும் கூறினர்.

"அமரா நான் நாளைய தினம் புறப்படுகின்றேன். பௌர்ணமியைக் கழித்து நீங்கள் வரலாம். அதுவரை நாட்டு நிலைமைகளைப் பற்றி நீ சிந்திக்காது உனது துணைவியுடன் மகிழ்ச்சியாயிருக்கணும்" என்று சிரித்துக்கொண்டே கூறினார். சேர மன்னரும் சிரித்தார். வெட்கத்தினால் இருவரும் தலையைக் குனிந்து புன்முறுவல் பூத்தனர்.

இன்பமும், துன்பமும், இரவும், பகலும் போல மாறி மாறி வந்துகொண்டேயிருக்கும் போலும். முடிசார்ந்த மன்னரும் ஒரு நாள் பிடி சாம்பராவார் என்ற இயற்கை நியதிக்கேற்ப குணவீரரும் இயற்கையுடன் கலந்துவிட்டார். ஒரே இரத்த உறவுடனிருந்த கனகசூரியனை விட அவரது மரணம் இயற்கையானதாயினும் அதனால் பெரிதும் பாதிப்படைந்து துயருற்றவன் அமரசிம்மனே. அவன் மனைவியான சேர இளவரசி மதுரவல்லியும், மன்னன் கனகசூரிய சிங்கையாரியனும் அவனைத் தேற்றி ஆறுதல் கூறி அரவணைத்த போதும்குணவீரரை அவனால் மறந்து ஒதுக்க முடியவில்லை. அவருடைய மரணத்தவறுவாயில் குணவீரர் "கனகசூரியன் அவசரக்காரன், நீயும் அவசரக்காரன் பெரிய உடையாரின் ஆலோசனையுடன் தான் எதுவும் செய்ய வேண்டும்" என்று கூறி இருவர் கரங்கள்ளயும் இணைத்து பெரிய உடையார் கையில் ஒப்படைத்துவிட்டே விழிகளை மூடினார். அந்த நிகழ்வு அவன் மனக் கோட்டையில் பிரதிஸ்டை செய்யப்பட்டுவிட்டது.

அவர் மீது உள்ள பக்தியால் அவர் உருவத்தினை ஓவியமாகத் தீட்டிசேரநாட்டிலிருந்து கொண்டு வந்த யானைத் தந்தங்களின் நடுவே வைத்துத் தினமும் காலையில் அவரை வணங்கிவிட்டே செல்வான். அவனுடைய செயற்பாடுகள் மற்றவர்களை விட வேறுபாடானவையாகவே பெரும்பாலும் விளங்கின. ஒரு நாள் மதுரவல்லி அவன் மகிழ்ச்சியோடு இருக்கும் வேளையில் கேட்டாள்.

"தங்களிடம் நான் ஒரு கேள்வி கேட்பேன். நீங்கள் கோபிக்காமல் பதில் சொல்வீர்களா?"

"கோபம் வரக்கூடிய கேள்வியே கேட்கப் போகிறாய் என்பதுதானே இதன் பொருள்" என்றான்.

"அப்படியில்லை தங்களுக்குப் பிடித்தமான ஒன்று பற்றி கேட்க விரும்புகின்றேன். அந்த விடயம் உங்களுக்குப் பிடிக்காவிட்டால்..."

"தேவி! எந்த ஒரு விடயத்திலும் நான் உன்னுடன் கோபிக்க மாட்டேன். நீயோ சகலகலா வல்லி. அப்படி இருக்கும் போது தவறான எதையும் கூற மாட்டாய் என நம்புகிறேன். தவிர காலம் சென்ற மன்னர் குணவீரர் எனக்குத் தேடித்தந்த செல்வம் நீ.

நீ தவறு செய்ய மாட்டாய். கால நேரம் தவறி ஏதும் நீ அப்படி நடந்துகொண்டாலும் அவரை நினைத்து அதனைப் பெரிதாக எடுத்துக்கொள்ள மாட்டேன். தயங்காதே நீ கேட்க வேண்டியதைக் கேள்" என்றான்.

"காலையில் எழுந்து கடவுளை வணங்க வேண்டும் என்றுதான் நான் படித்திருக்கின்றேன்"

"ஆமாம் அதுதான் முறையும்"

"தாங்கள் மன்னரின் ஓவியத்தை வணங்குகின்றீர்கள். அதுபற்றி ...?" என்று அவன் மார்பில் முகம் புதைத்தாள்.

அவள் தலையை வருடி, பின் முதுகை வருடிக்கொண்டு தன் மார்பில் புதைந்திருந்த அவள் வதனத்தை மறுகரத்தால் நிமிர்த்தினான். மருண்ட விழிகளோடு அவனை நோக்கினாள் மதுரவல்லி.

"தேவி! மன்னனும் கடவுளும் ஒன்று என்பது என்னைப் பொறுத்தவரையில் ஓர் முடிவு. காலையில் எழும்போதே இறைவனைப் பிரார்த்தித்தே எழுந்திருப்பேன்.பெண்ணுக்கு கணவனே கண்கண்ட தெய்வம் என்பார்கள். அது போல இறைவனுக்கு அடுத்து மன்னனே எனக்கு வாழ்வளித்த தெய்வம். புரிகிறதா?" என்றான்.

"வாள் வீச்சில் தான் என்னுடையவர் வீரர் என்றிருந்தேன். வாய் வீச்சிலும் வல்லவர்தான்" என்று அவனைத் தழுவிக் கொண்டாள்.

[தொடரும்...]

3 ஆவது ஆண்டில்...

தினமுரசு நாளிதழ்

தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு

இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்

ரூ.10/= மட்டுமே

- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - 'பரமர் சங்கமம்", "மெய்தான் பாருங்கோ" "பதிவிறக்கப்பெட்டகம்"

A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் - விடைகளுடன் தினமும்

சனி, ஞாயிற்றுக்கிழமைகள் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான அலகு ரீதியான குறிப்புகள், மாதிரி வினாக்களும் விடைகளும் வெளியாகின்றன!

# உங்கள் பிள்ளை பருவமடைந்து விட்டதா?



பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப் படுகின்றன.

## லேடிஸ் ஸ்பெஷல்

பெண்களின் வாழ்க்கையில் மாதவிடாய் என்பது முக்கியமான ஓர் இடத்தினை வகிக்கின்றது. அதிலும் இளம் பெண்கள் மாதவிடாய் குறித்து முழுமையான அறிவை பெற்றிருப்பதுடன், அது தொடர்பாக விழிப்புணர்வுடன் இருப்பதுவும் அவசியம்.

பொதுவாக பெண் பிள்ளைகளைப் பொறுத்தவரைக்கும் அவர்கள் 9 - 16 வயதிற்குள் கட்டாயம் தனது முதலாவது மாதவிடாயை வெளிப்படுத்த வேண்டும். அதாவது பூப்படைய வேண்டும். ஒரு பெண் பிள்ளை 16 வயதாகியும் பூப்படையவில்லை என்றால் பெற்றோர்கள் அது தொடர்பில் கட்டாயம் வைத்தியரை நாடுவதே சிறந்தது.

பெண் பிள்ளைகளின் உடலில் சாதரணமாக 9 வயதிற்கு மேல் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட ஆரம்பிக்கும். உதாரணமாக அவர்களது உடலின் சில பகுதிகளில் முடி வளர ஆரம்பிக்கும். முகங்களில் பருக்கள் ஏற்படும். அத்துடன் மார்பகங்களும் விருத்தியடையத் தொடங்கும். இதுவே அப்பிள்ளை பருவமடைவதற்கான சில அறிகுறிகளாகும்.

மேலும் மார்பக விருத்தியானது கட்டாயம் 14 வயதிற்குள் ஏற்பட வேண்டும். அத்துடன் அந்த வயது எல்லைக்குள்ளேயே பூப்படைவதும் சிறந்தது. இல்லையேல் குறைந்தது 14 வயதிற்குள் மார்பகங்கள் விருத்தியடைந்து ஆக கூடியது 16 வயதிற்குள் கட்டாயம் பூப்படைந்துவிட வேண்டும்.



இவ்வாறு 14 வயதிற்குள் மார்பகங்கள் விருத்தியும் ஏற்படாமல் இருந்து 16 வயதாகியும் பூப்படையாமல் இருப்பார்களேயானால் உடனடியாக வைத்தியரை நாடுவதே மிகவும் சிறந்தது. இல்லாவிட்டால் அது உங்கள் பெண் பிள்ளைகளை உடல் ரீதியில் மாத்திரமன்றி உளவியல் ரீதியாகவும் பெரும் பாதிப்புக்குள்ளாக்கி விடும்.

இதனை ஏன் நாம் வலியுறுத்துகிறோம் என்றால் இன்று பெரும்பாலான குடும்பங்களில் கணவனும் மனைவியும் வேலைக்கு செல்கின்றனர். இதனால் பிள்ளைகளுடன் மனம் விட்டு பேசுவதற்கு கூட நேரம் இல்லாமல் போய்விடுகின்றது. பிள்ளைகளுக்கு தேவை ஏற்பட்டால் தம்மிடம் கேட்பார்கள் தானே என விட்டு விடுகின்றனர்.

ஆனால் எல்லோரும் அவ்வாறு இருப்பது இல்லை. சில பெண் பிள்ளைகள் அவர்களது உடலில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து உங்களுடன் வெளிப்படுத்துவதற்கு கூட தயங்கலாம். அதனை நீங்கள் எளிதாக அறிந்துகொள்ள வேண்டுமாயின் அவர்களோடு நட்புறவுடன் பழக வேண்டும். அப்போது தான் அவர்கள் எவ்வித தயக்கமும் இன்றி உங்களுடன் எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்வார்கள். இதன் மூலம் உங்களால் அவர்களின் தேவைகளையும் அவர்களுக்குள் நிகழும் மாற்றங்களையும் தெளிவாக அறிந்துகொள்ள முடியும்.

எனவே பெண் பிள்ளைகளின் உடல் வளர்ச்சி தொடர்பாகவும் அவர்களில் நாளாந்தம் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பாகவும் பெற்றோர் மிகவும் விழிப்புணர்வுடன் இருப்பது அவசியமான ஒன்றாகும். அப்போது தான் குறித்த வயது எல்லைக்குள் அவர்களால் தனது முதலாவது மாதவிடாயை வெளிப்படுத்த முடியுமா என்பதையும் நீங்கள் அறிந்துகொள்ள முடியும்.

# கர்ப்பிணிகளுக்கு ஏற்ற மசாஜ்

கர்ப்பிணிகளுக்கான பிரத்யேக மசாஜ் செய்கிற பாதுகாப்பான, நம்பகமான இடங்களில், ஒரு சில மசாஜ்களை மட்டும் செய்து கொள்ளலாம். அதாவது அப்படிச் செய்யப்படுகிற மசாஜ், மிகமிக மென்மையானதாக, விரல்களை மட்டுமே வைத்து, அழுத்தம் தராமல் செய்வதாக இருக்க வேண்டும். தலைக்கான ம சாஜ், கை கால்களுக்கான மசாஜ், முதுக்கான மசாஜ் போன்றவை மட்டுமே இந்நாளில் செய்து கொள்ளக்கூடியவை.

கை, கால்களை முறுக்கி, வயிற்றையோ, கழுத்தையோ, உடம்பின் பிற பாகங்களையோ அழுத்தி எந்த மசாஜூம் செய்யக்கூடாது. கர்ப்பிணிகளுக்குத் தவிர்க்க முடியாத ஒரு விடயம், வயிற்றுப்பகுதியில் உண்டாகிற தழும்புகளும் கோடுகளும். கர்ப்பத்தின் போது விரிந்து கொடுக்கிற தசையானது, மறுபடி பழைய நிலைக்குத் திரும்பும் போது, கோடுகள் உண்டாகும்.

நிறைய தண்ணீர் குடிப்பது, பழங்கள் சாப்பிடுவது மூலமாக இதன் தீவிரத்தை ஓரளவு தடுக்கலாம். தினசரி தூங்கச் செல்வதற்கு முன்பு, கோகோ பட்டர் கிரீம் அல்லது வைட்டமின் ஈ மற்றும் ஏ கலந்த கிரீம் கொண்டு வயிற்றுப் பகுதியை மிக மென்மையாக நீவி விடலாம்.

# மரணத்தில் முடிந்தது பிரமாண்ட ஆசை!



ஜேர்மனியைச் சேர்ந்த ஆபாசப் பட நடிகை ஒருவர் ஆறாவது முறை யாக மார்பகப் பெருக்க ஆபரேஷன் செய்யப் போய் தற்போது உயிரை விட்டுள்ளார். இதையடுத்து அவருக்கு மயக்க மருந்து கொடுத்த டாக்டரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

உயிரிழந்த பெண்ணின் பெயர் கரோலின் வொஸ்னிட்ஸா. இவருக்கு 23 வயதாகிறது. இவர் ஆபாசப் பட நடிகை ஆவார். ஏகப்பட்ட நீலப் படங்களில் நடித்துள்ளார். இவருக்கு ஏற்கனவே மார்பு பெரிதுதான். இருந்தாலும் மேலும் பெரிதாக்குவதற்காக அவ்வப்போது மார்பகப் பெருக்க ஆபரேஷன் செய்து வந்தார். மொத்தம் 5 முறை இப்படிச் செய்து பிரமாண்டமானதாக தனது மார்புகளைப் பெருக்கியுள்ளார். இந்த நிலையில் 6ஆவது முறையாக மார்பில் கை வைக்கப் போய் மாரடைப்பு ஏற்பட்டு பரிதாபமாக உயிரிழந்தார்.

இதையடுத்து அவருக்கு ஆபரேஷனின்போது மயக்க மருந்து கொடுத்த டாக்டரைக் கைது செய்துள்ளனர். இதுதொடர்பாக நீதிமன்றில் வழக்கும் தொடரப்பட்டுள்ளது.

# பீட்ரூட் அல்வா



தேவையான பொருட்கள்

- துருவிய பீட்ரூட் – 2 கப்,
- பால் – அரை கப்,
- சர்க்கரை – 2 கப்,
- கோவா – அரை கப்,
- நெய் – 2 மேசைக்கரண்டி,
- ஏலக்காய் தூள் – 1 தேக்கரண்டி
- வறுத்த முந்திரி,
- பாதாம் – சிறிது.

செய்முறை

பீட்ரூட்டை அரை கப் பால் விட்டு, வேக வைக்கவும். பிறகு அத்துடன் சர்க்கரை, கோவா சேர்த்துக் கிளறவும். கலவை சுருண்டு வரும் போது, இறக்கி, நெய் விட்டு, ஏலக்காய் தூள், முந்திரி, பாதாம் தூவி அலங்கரிக்கவும்.

# அழகு சாதனங்களும் காலாவதியாகும்

**காலாவதி** திகதி என்பது மருந்துகளுக்கும், உணவுகளுக்கும் மட்டுமில்லை. அழகு சாதனங்களுக்கும் அது அவசியம்.

"தினசரி நீங்க உபயோகிக்கிற கிரீம், பவுடர், ஐ ஷேடோ, மஸ்காரா, லிப்ஸ்டிக் என்ற அழகு சாதனங்களுக்கும் ஆயுள் காலம் இருக்கு. குறிப்பிட்ட காலத்தைத் தாண்டி, அதை உபயோகித்து, உங்கள் சரும அழகையும் ஆரோக்கியத்தையும் நீங்களே கெடுத்துக் கொள்ளாதீர்கள். என்று எச்சாரிக்கின்றனர் சரும மருத்துவ நிபுணர்கள்.

"எந்த அழகு சாதனம் வாங்கினாலும், முதல்ல நீங்க பார்க்க வேண்டியது, அதோட காலாவதி திகதி. நாள்பட்ட அழகு சாதனங்களை உபயோகிக்கிறதால், அலர்ஜி வரலாம். தோலில் சிவந்த தடிப்புகள் வரலாம். பரு, கரும்புள்ளி, வெள்ளைப்புள்ளிகள் போன்றவை வரலாம். ஒரு கட்டத்தில் தோலின் இயல்பான நிறமே மாறிப் போகலாம்.

அதிலும் சென்சிட்டிவ் சருமம் உள்ளவர்களுக்கு இந்த பாதிப்புகள் ரொம்பத் தீவிரமா இருக்கும்" என்கிறார் டாக்டர் தலத். காலாவதியாகிப் போன எந்தெந்த அழகு சாதனங்கள் எந்த மாதிரி யான பாதிப்புகளைத் தரும் என்றும்



விளக்குகிறார். "காலாவதியான கிரீமும் காம்பேக்ட் பவுடரும் பெரிய பெரிய பருக்களையும் கட்டிகளையும் ஏற்படுத்தும். பழைய லிப்ஸ்டிக், உதடுகளை வீங்கச் செய்யும். அரிப்பை உண்டாக்கும். மஸ்காரா கண்களில் பாதிப்பை உண்டாக்கி, கண் இமை முடிகளை உதிரச் செய்யும். அதே ஐ ஷேடோவா இருந்தால், 'ரெட் ஐ' என்று ஒரு பிரச்சினையை உண்டு பண்ணும்.

காலாவதியான ஐ ஷேடோ, மஸ்காரா போன்றவற்றில் பக்றீரியா தொற்றும். கண்களைச் சுற்றி உபயோகிக்கிற பொருள்கள் என்பதால, கருவிழியைக் கூட அது பாதிக்கலாம். சில வகை அழகு சாதனங்கள் ஆர்சனிக், லெட், ஸிங்க் ஒட்சைட் கலந்திருக்கலாம். அப்படிப்பட்ட பொருள்களை காலாவதியான பிறகும் உபயோகிக்கிறதால், இள வயதிலேயே சுருக்கங்கள், கோடுகள் வரவும் வாய்ப்புகள் அதிகம்..."

# பரிசு 1000/- ரூபா. வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

**பரிசுப் போட்டி இல :-355**

**கேள்வி : தமிழக மாணவிகள் கண்டுபிடித்துள்ள பாதுகாப்புக் கருவி?**

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:-27.02.2013**

விடையைப் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 355
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 353 இற்கான விடை :- வாழைப்பழம், பேரீச்சம்பழம், சுவகாட்டோ

பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி :- த.ரதி, கைதடி மத்தி, கைதடி.

355

பெயர் : ..............................

முகவரி : ..............................

..............................

தே.அ. அட்டை இல : ..............................

விடை : ..............................

..............................

கையொப்பம் : ..............................

# தமிழக மாணவிகளின் பாதுகாப்புக் கருவி

டில்லியில் கல்லூரி மாணவி ஓடும் பஸ்சில் பலாத்காரம் செய்யப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து பெண்களின் பாதுகாப்பிற்காக தமிழகத்தைச் சேர்ந்த இரு மாணவிகள் புதிய கருவியைக் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தக் கருவிக்கு "லேடீஸ் சேப்டி ஷாக்கர்" எனப் பெயரிட்டுள்ளனர். 60 கிராம் எடையுள்ள இக்கருவியை பெண்கள் தலையில் கிளிப் போல் மாட்டிக் கொள்ளலாம்.

அதைவிட, குடை, கீ செயின், செல்போன் பவுச் ஆகியவற்றிலும் பொருத்திக் கொள்ளலாம். இந்தக் கருவியில் 3 பற்றரிகள் உள்ளன. இதனை ஒருமுறை சார்ஜ் செய்தால் நீண்ட நாட்களுக்கு தாக்குப்பிடிக்கும்.

இந்தக் கருவியில் 2 பட்டன்கள் உள்ளன. முதல் பட்டனை அழுத்தினால் அபாய ஒலி எழுப்பும். இந்த ஒலி சுமார் 20 மீற்றர் தூரம் கேட்கும். கருவியை எதிரியின் உடலில் படும்படி வைத்து 2ஆவது பட்டனை அழுத்தினால், அவர் மீது 1,700 வோல்ட் மின்சாரம் தாக்கிவிடும். இதனால் எதிரி நிலைகுலைந்துவிடுவான். ஆனால், அவனது உயிருக்கு எந்த ஆபத்து ஏற்படாது. இக்கருவியை வெயிலில் ரீசார்ஜ் செய்யும் வசதியும் உண்டு.

# கூட்டமைப்பின் தென்னாபிரிக்க பயணம்

## தெரிந்ததும் தெரியாததும்

கூட்டமைப் பின் செயற்பாடுகள் பெரும் பாலும் மூடிய அறை விடயங்களாகவே இருக்கின்றன. ஆகக் குறைந்தது, கூட்டமைப்பில் உள்ளவர்களுக்கே பெரும் பாலான விடயங்கள் பகிரப்படுவதில்லை. தமிழ் மக்களின் உரிமை சார் அரசியலை கையாளும் தலைமைக்கு இது ஏற்புடைய ஒன்றல்ல. இந்த பின்புலத்தில் நோக்கினால் தென்னாபிரிக்க விடயமும், கூட்டமைப்பால் நன்கு திட்டமிடப்பட்டு முன்னெடுக்கப்பட்ட ஒன்றல்ல என்பது வெள்ளிடைமலை. இவ்வாறு கூட்டமைப்பால் திட்டமிடப்படாது முன்னெடுப் படும் சர்வதேச அணு குமுறைகள், மற்றவர் களால் முன்வைக்கப்படும் வேலைத்திட்டங் களை அமுல்படுத்தும் ஒரு நிலையையே தோற்றுவிக்கும். இங்கு கூட்டமைப்பு ஒரு மக்கள் தலைமை என்பதற்கு மாறாக சர்வ தேச நிறுவனங்களுக்கான ஒரு தரகு அமைப் பாகவே தொழிற்பட நேரிடும். கூட்டமைப்பின் சமீபகால அணுகுமுறைகளை அவதானிக் கும்போது இவ்விடயமே துருத்திக் கொண்டு தெரிகிறது.

**வெளித்தோற்றத்தில்** பார்த்தால், தமிழ் அரசியல் தலைவர்கள் மிகவும் சுறுசுறுப்பாக இருப்பது போன்று தெரிகிறது. அமெரிக்க தூதுக்குழுவினரை சந்தித்திருந்த, கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத் தலைவர் இரா.சம்பந்தன் அவசரமாக தென்னாபிரிக்காவிற்கு விஜயம் செய்திருக்கின்றார்.

இதற்கிடையில், கூட்டமைப்பின் பிறிதொரு குழுவினர் ஜேர்மனிக்கு சென்றிருந்தனர். ஜேர்மன் செல்வதற்கு முன்னர், கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளில் ஒன்றான ஈ.பி.ஆர்.எல்எப் அமைப்பின் செயலாளர் நாயகம் சுரேஸ் பிரேமச்சந்திரன் காட்டமான அறிக்கையொன்றையும் வெளியிட்டிருந்தார். தற்போதைய அரசாங்கத்தை நம்பி இனி பேச்சுவார்த்தைக்குச் செல்லப் போவதில்லை என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இலங்கை வந்திருந்த அமெரிக்கக் குழுவினர், இம்மாதம் 25 தொடக்கம் மார்ச் 22 வரை இடம்பெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் அரசாங்கத்திற்கு எதிராக பிறிதொரு பிரேரணையை கொண்டுவரவுள்ளதாக தெரிவித்திருக்கின்ற பின்னணியிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இவ்வாறு அடுத்தடுத்து பயணங்களை மேற்கொண்டுள்ளது. இதனைத் தொடர்ந்து கூட்டமைப்பினர் அமெரிக்காவிற்கும் செல்லக்கூடும். இவ்வாறு அடுத்தடுத்து, இடம்பெற்றுவரும் நிகழ்வுகளை தொகுத்துப் புரிந்துகொள்ளுவோர் மத்தியில் ஏதோ பெரிதாக இடம்பெறப்போவதான எண்ணப்பாடும் ஏற்படக்கூடும். சிலருக்கோ திகில் படமொன்றை பார்ப்பது போன்ற அனுபவத்தையும் கொடுக்கக் கூடும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தென்னாபிரிக்க விஜயத்தின் நோக்கம் என்னவாக இருக்கக்கூடும்? இது பற்றி ஏசியன்ரிபியூன் (Asiantribune.com) இணையத்தள ஆசிரியர் ஏ.ரி.ராஜசிங்கத்திற்கு வழங்கிய தொலைபேசி நேர்காணலில், கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார் – தென்னாபிரிக்க அரசாங்கத்தின் அழைப்பின் பேரிலேயே நாங்கள் செல்கின்றோம், அவர்கள் முரண்பாட்டுத் தீர்வு மற்றும் மீளிணக்கம் தொடர்பான தங்களது அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளவுள்ளனர் (South Africa has told that they are prepared to share with us their experience in conflict resolution and reconciliation) என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

ஏற்கனவே தென்னாபிரிக்க அழைப்பின் பேரில் அரசாங்கப் பிரதிநிதிகள் குழுவொன்று அங்கு சென்று திரும்பியிருக்கின்ற சூழலிலேயே தாங்கள் அழைக்கப்பட்டிருப்பதாகவும் சம்பந்தன் மேற்படி உரையாடலில் குறிப்பிட்டிருக்கின்றார். எனவே சம்பந்தனின் மேற்படி கூற்றிலிருந்து ஒரு விடயம் வெள்ளிடைமலை – அதாவது மேற்படி தென்னாபிரிக்க தலையீடு அரசாங்கத்தின் விருப்பத்தின் பேரிலேயே இடம்பெறுகிறது. அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான அரச குழுவொன்று ஏற்கனவே அங்கு சென்று திரும்பியிருக்கிறது.

இது தொடர்பில் முன்னர் கருத்துத் தெரிவித்திருந்த, கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் ஆலோசகநிலைத் தலைவராகவும் கருதப்படுகின்ற எம்.ஏ.சுமந்திரன், தென்னாபிரிக்க அனுபவங்களிலிருந்து தாம் கற்றுக் கொள்ளவுள்ளதாக குறிப்பிட்டிருந்ததும் இந்த இடத்தில் நினைவுகொள்ளத்தக்கது. இங்கு ஒரு கேள்வி எழுகிறது – தென்னாபிரிக்க அனுபவங்களில் களிலிருந்து தமிழர்கள் எதைக் கற்றுக் கொள்ள முடியும்? இலங்கையின் இனமுரண்பாட்டு அனுபவங்களுக்கும், தென்னாபிரிக்க அனுபவங்களுக்கும் இடையில் அடிப்படையான வேறுபாடுண்டு.

இலங்கையின் பிரச்சினை, நாட்டின் சிறுபான்மை தேசிய இனமான தமிழர்கள், நாட்டின் பெரும்பான்மை தேசிய இனமான சிங்களவர்களிடமிருந்து உரிமைகளை கோருகின்றனர். தங்களது தனித்துவத்தை பேணிக்கொண்டு வாழும் வகையிலான அதிகாரப் பகிர்வை கோருகின்றனர். ஆனால் தென்னாபிரிக்க அனுபவம் இதற்கு முற்றிலும் மாறான ஒன்று. தலைகீழான ஒன்று எனலாம். தென்னாபிரிக்காவின் பெரும்பான்மையினராகிய கறுப்பின மக்கள் சிறுபான்மையினராகிய வெள்ளையின மக்களிடமிருந்து உரிமையை கோரினர். இறுதியில் அவர்கள் வெற்றியும் பெற்றனர்.

இந்த காலகட்டத்திலேயே பிரச்சினைகளை தீர்க்கும்முகமாக தென்னாபிரிக்காவில் உண்மைக்கும் மீளிணக்கத்திற்குமான ஆணைக்குழுவொன்று (Truth and Reconciliation Commission - TRC) ஸ்தாபிக்கப்பட்டது. 1960ஆம் ஆண்டிலிருந்து 1994ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் வெள்ளையின சிறுபான்மை ஆட்சியில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களை பரிசீலித்த இவ் ஆணைக்குழு, தனது அறிக்கையை ஐந்து பாகங்களாக வெளியிட்டிருந்தது. இவ்வாறு முற்றிலும் மாறுபட்டதொரு பின்புலத்தில், கையாளப்பட்ட இணக்கப்பாட்டு பொறிமுறை ஒன்றிலிருந்தே தற்போது கூட்டமைப்பினர் கற்றுக்கொள்ள முற்பட்டிருக்கின்றனர் அல்லது கற்றுக் கொள்ளவுள்ளதாக மக்களுக்குச் சொல்லுகின்றனர்.

இதனை பிறிதொரு வகையிலும் பார்க்க முடியுமென்னும் அபிப்பிராயங்களும் உண்டு. தென்னாபிரிக்கா சமீபகாலமாக இலங்கையில் காட்டிவரும் வர்த்தக ஈடுபாடுகளின் விளைவாகவே இலங்கை அரசியல் மீதும் ஈடுபாடு காட்டியிருக்கலாமென சில அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர். இத்தகைய கருத்துக்களை இலகுவில் புறம் தள்ளி விடவும் முடியாது. யுத்தம் நிறைவுபெற்றிருந்த சூழலில், தென்னாபிரிக்காவின் முன்னணி சுற்றுலா நிறுவனமான சன் உல்லாச விடுதி குழுமம் (Hotels group Sun International Ltd) சுமார் 800 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான முதலீட்டு நடவடிக்கை ஒன்றிற்கு இணங்கியிருந்தது. கொழும்பிற்கு 15 கிலோமீற்றர் தொலைவிலுள்ள கந்தானையில் 200 ஹெக்டெயர் நிலப்பரப்பில் உல்லாச விடுதி நகரமொன்றை ஸ்தாபிக்கும் முயற்சியில் மேற்படி சன் குழுமம் ஈடுபட்டுள்ளது.

இதுதவிர, தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸின் உயர் வர்த்தகக் குழுவினர் (African National Congress-Progressive Business Forum) செப்டம்பர் 2012இல் இலங்கை வந்திருந்தனர். தென்னாபிரிக்க பிரதி பொருளாதார அமைச்சர் பேராசிரியர் கெலிங்வே மிகைசி (Prof. Hlengiwe Mkhize) தலைமையில் இக்குழுவினர் வருகை தந்திருந்தனர். மேற்படி வர்த்தக சம்மேளனம் (African National Congress-Progressive Business Forum) சுமார் 6000 வர்த்தக நிறுவனங்களை உறுப்பினராகக் கொண்டிருக்கிறது. எனவே இவ்வாறு தென்னாபிரிக்கா இலங்கையின் முதலீட்டு நடவடிக்கைகளில் ஈடுபாடு காட்டிவருகின்ற ஒரு பின்புலத்தில் தான், இலங்கை அரசியல் முரண்பாட்டின் மீதும் தனது அவதானத்தை செலுத்தியிருக்கிறது. தென்னாபிரிக்காவிற்கும் தமிழர் அரசியலுக்குமான தொடர்பு எத்தகையது என்பது பற்றியும் இந்த இடத்தில் சிறிது குறித்துக் கொள்வது நல்லது.

தென்னாபிரிக்காவை இலங்கை இன முரண்பாட்டுத் தீர்வில் ஈடுபடுத்த வேண்டுமென்னும் கருத்து தென்னாபிரிக்க அரசியல் உயர்மட்டங்களில் உள்ள ஒரு சிலருக்கு இருந்திருக்கிறது. இதில் காலம்சென்ற தென்னாபிரிக்க அமைச்சர் (Minister of Public Service and Administration) றோய் படையாச்சி (Roy Padayachie) முக்கியமானவர். விடுதலைப் புலிகளுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்த இவர், புலிகளின் தமிழீழ கோட்பாட்டை பகிரங்கமாக ஆதரித்தவர். விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமான இறுதி யுத்தத்தின்போது, விடுதலைப்புலிகளின் தலைமையை காப்பாற்ற முடியாமல் போய் விட்டது குறித்து தனிப்பட்டரீதியில் இவர் குற்றவுணர்வுக்கு ஆட்பட்டிருந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு அறிக்கை வெளியானதைத் தொடர்ந்து, படையாச்சி புலம்பெயர் நாடுகளில் வட்டுக்கோட்டை தீர்மானத்தைப் போன்ற ஒன்றை முன்னெடுப்பதற்கான திட்டத்தை முன்மொழிந்திருக்கிறார். இதனை புலம்பெயர் சமூகம், இலங்கை தமிழர் மற்றும் சர்வதேச சமூகம் என மூன்று கட்டங்களாக முன்னெடுப்பதற்கான ஆலோசனையையும் இவர் முன்வைத்திருக்கிறார். தமிழ் புலம்பெயர் தரப்பினர் மத்தியில் குறிப்பாக உலக தமிழ் பேரவையில் (GTF) அதிக செல்வாக்கைக் கொண்டிருந்த படையாச்சி 2012இல் காலமடைந்தார். இவரது மறைவை நினைவு கூர்ந்து உலகத் தமிழர் பேரவை அவரது இறுதி நிகழ்வில் பங்குகொண்டு இரங்கல் உரையொன்றையும் நிகழ்த்தியிருந்தது. உலகத் தமிழர் பேரவை சார்பில் அதன் பேச்சாளர் சுரேன் சுரேந்தின் உரையாற்றியிருந்தார். அங்கு உரையாற்றிய சுரேந்திரன், படையாச்சி விடுதலைக்கான பிரச்சாரத்தை ஒன்றுபட்டு முன்னெடுப்பதில் ஒரு உந்துசக்தியாக (catalytic role) இருந்ததாக குறிப்பிட்டிருந்தார். கிடைக்கும் தகவல்களின்படி, தற்போது இடம்பெறும் தென்னாபிரிக்க தலையீட்டின் பின்னணியில் சுரேன் சுரேந்திரனும் முக்கிய பங்குவகிக்கின்றார். ஆபிரிக்க நாடுகளுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருக்கும் சுரேன், தென்னாபிரிக்க அரசியல் உயர் மட்டத்தினருடன் நெருங்கிய தொடர்புகளை பேணிவருபவர்.

அன்று படையாச்சியால் முன்னெடுக்கப்பட்ட தென்னாபிரிக்க ஈடுபாடே, இன்று பிறிதொரு கட்டத்திற்குச் சென்றிருக்கிறது. ஆனால் பலமானதொரு அரசாங்கத்தை எதிர்நோக்க வேண்டிய பொறுப்பிலிருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இவற்றை எவ்வாறு கையாளப் போகிறது? அதற்காக கூட்டமைப்பிடம் இருக்கும் வேலைத்திட்டம் என்ன? இப்படியான கேள்விகளுக்கு பதிலிறுப்பதை எப்போதுமே புத்திசாதுரியமாக தவிர்த்துக் கொள்ளும் கூட்டமைப்பின் தலைவர்கள், நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்வதையே தங்களது பிரதான அரசியல் வேலைத்திட்டமாக காண்பித்து வருகின்றனர். கூட்டமைப்பின் மேற்படி தென்னாபிரிக்க விஜயத்தின் பின்னணியில் சில சர்வதேச நிறுவனங்களும் தொடர்புபட்டிருக்கின்றன. குறிப்பாக ஜேர்மனியை தளமாகக் கொண்டிருக்கும் பேர்கொவ் நிதியம் (Berghof foundation, Sri Lanka Working Group), கொழும்பிலிருந்து இயங்கும் வெரிட் ஆய்வுக் குழு (Verite Research) போன்ற அமைப்புக்களும் கூட்டமைப்பின் சமீபகால அணுகுமுறைகளின் பின்னண்ியில் இயங்குகின்றன. தென்னாபிரிக்காவிற்கு செல்வதற்கு முன்னர், கூட்டமைப்பின் ஒரு குழுவினர் ஜேர்மனிக்கு சென்றிருந்தது. மேற்படி பேர் கொவ் நிதியத்தின் அழைப்பின் பேரிலாகும்.



இவ்வமைப்பு சில வருடங்களுக்கு முன்னரும் ஒஸ்ரியாவில் கூட்டமைப்பின் தலைவர்கள், இலங்கையில் தமிழர் அரசியல் தொடர்பில் செயற்பட்டுவரும் சில சிவில் சமூக நபர்கள், மற்றும் புலம்பெயர் அரசியல் செயற்பாட்டாளர்கள் ஆகியோரை உள்ளடக்கிய கலந்துரையாடலொன்றை நடத்தியிருந்தது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களின் அரசியல் தலைமையாக வெளித்தெரிந்ததன் பின்னர், இவ்வாறான அமைப்புக்களின் தலையீடுகளும் அதிகரித்திருக்கின்றன. கூட்டமைப்பு ஒரு ஜனநாயக அரசியல் தலைமை என்னும் வகையில், பல்வேறு தரப்பினருடன் உரையாடுவதும் அவர்களது கருத்துக்களை செவிமடுப்பதும் தவறான ஒரு விடயமல்ல. ஆனால் கூட்டமைப்பின் செயற்பாடுகள் பெரும்பாலும் மூடிய அறை விடயங்களாகவே இருக்கின்றன.

ஆகக் குறைந்தது, கூட்டமைப்பில் உள்ளவர்களுக்கே பெரும்பாலான விடயங்கள் பகிரப்படுவதில்லை. தமிழ் மக்களின் உரிமை சார் அரசியலை கையாளும் தலைமைக்கு இது ஏற்புடைய ஒன்றல்ல. இந்த பின்புலத்தில் நோக்கினால் தென்னாபிரிக்க விடயமும், கூட்டமைப்பால் நன்கு திட்டமிடப்பட்டு முன்னெடுக்கப்பட்ட ஒன்றல்ல என்பது வெள்ளிடைமலை. இவ்வாறு கூட்டமைப்பால் திட்டமிடப்படாது முன்னெடுப்படும் சர்வதேச அணுகுமுறைகள், மற்றவர்களால் முன்வைக்கப்படும் வேலைத்திட்டங்களை அமுல்படுத்தும் ஒரு நிலையையே தோற்றுவிக்கும். இங்கு கூட்டமைப்பு ஒரு மக்கள் தலைமை என்பதற்கு மாறாக சர்வதேச நிறுவனங்களுக்கான ஒரு தரகு அமைப்பாகவே தொழிற்பட நேரிடும். கூட்டமைப்பின் சமீபகால அணுகுமுறைகளை அவதானிக்கும்போது இவ்விடயமே துருத்திக் கொண்டு தெரிகிறது.

நன்றி: மறுஆய்வு



# நிறையவே பேசுவோம்

**இ**ந்தியாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மகளிர் உலகக் கிண்ண ஒரு நாள் போட்டிகளில் இலங்கை மகளிர் அணியின் எழுச்சி எல்லோரையும் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது. அதுவும் மிகப் பலமான அணியென்று கருதப்படும் இந்திய அணியை

படுமோசமாக 138 ஓட்டங்களால் வென்றபோது யாரிந்த ரஸாங்கிகா, ஸஸ்ரீ கலா, கௌசல்யா என்று வரிசையாகத் தேடத் தொடங்கிவிட்டார்கள். இதற்குக் காரணம் இன்னொன்றும் உண்டு. அதாவது தற்போதைய சாம்பியன்களாகிய இங்கிலாந்து அணியையும் தோற்கடித்து சாதனை படைத்திருக்கிறார்கள். இந்தவகையில் அடுத்தகட்டமான சுப்பர் சிக்ஸ் ஆட்டங்களில் இலங்கை மகளிர் அணி ஆடிக்கொண்டிருக்கிறது. இங்கு எழும் புதிய கேள்வி முன் எப்படி அங்கீகரித்தீர்கள் என்பதுதான். ஆண்கள் கிரிக்கெட்டுக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் மகளிருக்குக் கொடுக்கப் பட்டதா என்பதும் ஒரு கேள்வி. இல்லை என்று கூறும் ஒரு ஆய்வாளர் மகளிர் எப்படி ஓரங்கட்டப்படுகிறார்கள் என்பதை ஆதாரபூர்வமாக எடுத்துக்காட்டியுள்ளார்.

அதாவது விளையாட்டுக் கொடுப்பனவுகளில் மிகப்பெரிய ஏற்றத்தாழ்வு இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறார். ஒருநாள் போட்டியொன்றில் விளையாடும் ஆடவர் பெறும் உதியம் (440,000/=) நான்கு இலட்சத்து நாற்பதாயிரம் ரூபாய். ஆனால்



ஒரு கிரிக்கெட் வீராங்கனை பெறுவது வெறும் ( 12500/--) பன்னிராயிரத்து ஐநூறு மட்டும்தான். இதேவேளை டெஸ்ட் போட்டிக்கு ஆடவர் பெறும் தொகை 5000 அமெரிக்க டொலர்.

இருபதுக்கு இருபது போட்டிகளுக்கு 2750 அமெரிக்க டொலர் (மூன்று இலட்சம் ரூபாய்) அதிர்ச்சிகரமாக மகளிர் பெறும் ஊதியம் 50 அமெரிக்க டொலர். (6250) மட்டுமே. மேலும் முன்னணி ஆண்கள் கிரிக்கெட் வீரர்களின் ஒப்பந்தப் பணத்தொகை ரூபா ஒரு கோடியைத் தாண்டுகிறது. ஆனால் முன்னணி மகளிர் கிரிக்கெட் வீராங்கனைகளின் மாதாந்த ஊதியம் ரூபா ஐம்பதாயிரத்துக்கு மேல் இல்லை.

இந்தத் தரவுகளை அறிந்தபோது மிக மிக அதிர்ச்சியாக இருந்தது. மகளிர், ஆடவர் கிரிக்கெட் பொறுத்த பிரபல்ய மட்டத்தில் பாரிய இடைவெளி இருப்பது உண்மைதான் என்றாலும், அந்த இடைவெளி ஊதியத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.








# சொல்வது சத்தியம்

**இலங்கை** மகளிர் அணி இந்தியாவையும், இங்கிலாந்தையும் கவிழ்த்த பின், இந்த அணி பற்றி முன்னாள் கிரிக்கெட் அணித்தலைவர் அர்ஜுன ரணதுங்க பேசுகிறார்.

"ஆடவர் அணியின் பல வீரர்கள் பணத்துக்காகத் தம் ஆத்மாவை விற்றுக்கொண்டிருக்கும் இவ்வேளையில் எமது மகளிர் எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் தன் கடினஉழைப்பை மட்டும் கொடுத்து எமது நாட்டுக்குப் பெருமை தேடித் தந்திருக்கிறார்கள்.

"மகளிர் அணியின் மூத்த வீரர்களின் அர்ப்பணிப்பையும், அவதானத்தையும் பார்த்து ஆடவர் அணியின் சிரேஷ்ட வீரர்கள் நிறையக் கற்றுக்கொள்ள வேண்டும்.

"முன்னைய காலங்களைவிட இம்முறை வீராங்கனைகளின் உடற்தகுதி நிலை (Fitness Level) மிகவும் உன்னதமாக அமைந்துள்ளது. வெற்றிகளுக்கான காரணங்களில் இதுவும் முதன்மையானது"

"அணித் தலைவி ஸஸிகலா சிறிவர்தனவின் அணி வழி நடத்தல்கள் மிக அற்புதமாக இருந்தது. இந்த வெற்றிகள் எதிர்கால மகளிர் கிரிக்கெட்டில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும். மேலும் மகளிர் கிரிக்கெட் அணியினருக்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்று போராடிய கய் டீ அல்விஸ் போன்ற கிரிக்கெட் வீரர்களை இப்போது நன்றியுடன் நினைக்க வேண்டும். முன்பு தங்கள் உடைகளின் பாணியைப் பிரதிபலிக்கும் உடைகள் மகளிர் கிரிக்கெட் அணியினர் உபயோகிக்கக் கூடாது என்று. எதிர்ப்புக் காட்டிய ஆடவர் அணியினர்தான் இப்போது மகளிர் அணியைப் புகழ்ந்து தள்ளுகிறார்கள்.

இது மிகவும் கேலிக்குரியதாக உள்ளது. இவர்கள் மகளிர் அணி வீராங்கனைகளுக்கு ஒரு சோடிக் கையுறையைக் கூட வாங்கிக் கொடுத்திருப்பார்களா என்பதுதான் சந்தேகம்" என்று தெரிவித்துள்ளார்.

# வரிசையாக வரும் புகழ்

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் விக்கெட் காப்பாளர் கண்ணில் காயப்பட்டு கிரிக்கெட் ஆட்டங்களில் இருந்து விலகிக் கொண்டாலும் அந்த இடத்தைதத் தற்காலிகமாக ஈடுசெய்தவர் ஏ.பி.டீ.வில்லியர்ஸ். ஆனால் இடைநடுவில் விக்கெட் காப்பாளர் பதவியை ஏற்றுக்கொண்டாலும் அவரே நிரந்தர விக்கெட்காப்பாளராக இருக்கும் நிலையைத் தன் திறமையால் உருவாக்கியுள்ளார் என்பதே இப்போதைய செய்தி. பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் 211 ரண்களால் மகத்தான வெற்றி கண்ட தென்னாபிரிக்க அணியின் செயற்பாட்டில் இவரின் பங்கு மிகப்பெரியது. அதுவே சாதனையொன்றையும் ஏற்படுத்தியுள்ளது. டெஸ்ட் வரலாற்றில் ஒரு ஆட்டத்தில் சதம் அடித்தது மட்டுமன்றி, விக்கெட் காப்பாளராக பத்து அவுட்களுக்குக் காரணமானவர் என்ற வகையில் இது ஒரு சாதனையாகும்.

மொத்தம் இவர் பதினொரு ஆட்டமிழப்புக்குக் காரணமாக அமைந்து இங்கிலாந்தின் ஜக்ரஸ்லின் எண்ணிக்கையைச் சமன்செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இப்போதும் தான் மார்க் பவுச்சரிடம் ஆலோசனைகள் பெற்றுக்கொள்வதாகவும், முன்பைவிட இப்பொழுது நிறையவே கற்றுக்கொண்டு உள்ளதாகவும், இன்னும் நிறையக் கற்றுக்கொள்ளவேண்டியுள்ளதாகவும் மிக அடக்கத்துடன் கூறுகிறார். இந்த அதிரடித் துடுப்பாட்ட வீரரும், அட்டகாசமான விக்கெட் காப்பு சாதனையாளருமான ஏபிடி வில்லியர்ஸ்.




# எல்லாம் மக்கே



அலன் போர்டர் விருதை நான்காவது முறையாகத் தட்டிச்சென்றுள்ளார். அவுஸ்திரேலிய அணித்தவைர் மைக்கல் கிளார்க். ஆனால் அன்றைய தினமே முரண் அலையாக டெஸ்ட் தரவரிசையில் முதல் நிலையில் இருந்த இவர் தென்னாபிரிக்க வீரர் ஹாஸிம் அம்லாவால் இரண்டாம் இடத்துக்குப் பின்தள்ளப்பட்டுவிட்டார்.

இதேவேளையில் டெஸ்ட், மற்றும் ஒரு நாள் போட்டிகளில் தரவரிசை ஒன்றைக் கொண்டவராக அம்லா இருக்கின்றார். 2007ஆம் ஆண்டில் இத்தகைய நிலையை முன்னாள் அவுஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கி பொன்டிங் பெற்றதன் பின் இப்போது அம்லா பெற்றுள்ளார். இது பற்றிப் பேசும் அம்லா மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. உண்மையில் என்னால் ஆச்சரியப்படத்தான் முடிகிறது. மேலும் தரவரிசைகள் சடுதியாக மாற்றம் அடையும் என்பதையும் நான் அறிவேன் என்கிறார். அதோடு வீரியம்நிறைந்த தென்னாபிரிக்க அணியில் அங்கத்துவம் பெறும்போது இத்தகைய நிலை ஒன்றும் ஆச்சியம் இல்லை என்றும் கூறுகிறார்.

தென்னாபிரிக்கா டெஸ்ட் தரவரிசையில் "முதல்நிலையில் இருப்பதில் ஆச்சரியம் இல்லை என்பதை ரசிகர்கள் நன்கு அறிவார்கள். ஏனெனில் டெஸ்ட் துடுப்பாட்டத் தரவரிசையில் அம்லாவைத் தவிர முதல் பத்துப் பேருக்குள் ஏ.பி.டி வில்லியர்சும், ஜக்கலிசும் இடம் பிடிக்கிறார்கள். இதேவேளை டேல் ஸ்ரெயினரைத் தொடர்ந்து முதல்பத்து இடத்துக்குள் வேர்னன் பிலெண்டரும், மோர்னேமோக்கலும் இடம்பிடிக்கிறார்கள்.




யாழ். அஸீமின்

# "மண்ணில் வேரோடிய மனசோடு"

## கவிதைகள் அடங்கிய நூல் விமர்சனம்

யாழ். அஸீமின் " மண்ணில் வேரோடிய மனசோடு" என்னும் கவிதை நூல் 'தினமுரசு'இதழுக்கு மதிப்புரை எழுதுவதற்கு என்னிடம் கையளிக் கப்பட்டபோது என்னுடைய பார்வை பற்றிய எதனையும் புரிந்துகொள்ளாமல் ஒப்படைக்கப்பட்டதாகவே பட்டது.

ஏனெனில் எனக்கு எதனையும் பூசி மெழுகிச் சொல்லத் தெரியாது. தோன்றுவதை அப்படியே போட்டுடைச்சுப் போடுவேன். அதனால் என்னுடன் கொண்ட சக வாசகத்தையே துண்டித் துக்கொண்டவர்கள் அதிகம்.

சரியான, நேர்மையான பார்வையை இன்னமும் ஜீரணித்துக் கொள்ள இயலாத படைப்பாளிகளையே இலக்கியக் களத்தில் பார்க்கவும் காணவும் நேர்கிறது.

இந்நிலையில் 'மண்ணில் வேரோடிய மனசோடு' என்னும் யாழ். அஸீமின் கவிதை நூலைப் பார்த்தபோது அழகிய முறையில் உயர்ரக அச்சுத்தாளில் மிகவும் நேர்த்தியாக உருவாக்கம் பெற்றிருப்பது முதற்கண்பட்டது.

கவிதை என்னும் போது தமிழில் மரபுக் கவிதை ஒன்றையே என்னால் அங்கீகரிக்க இயலுமாகும். புதுக்கவிதை, வசன கவிதை என்பதெல்லாம் அவசர அவசரமாக வைக்கப்பட்ட பெயராகவே நினைக்கின்றேன்.

இந்தப் புதுக்கவிதை என்பது எழுதப் படத் தொடங்கி 75 ஆண்டுகளை நெருங்குவதாக அறியமுடிகிறது. மகாகவி பாரதியாரும் வசன கவிதைகள் எழுதியுள்ளார்.

கு.பா.ரா, புதுமைப்பித்தன், சி.சு.செல்லப்பா வானம் பாடிக் குழுவினரென்பது புதுக்கவிதைகளை எழுதிப்பரப்பிய தமிழகக் கவிஞர்கள் கூட அதற்குச் சரியான தமிழ்ப் பதமொன்றை இன்னமும் அறிமுகப்படுத்தாமல் இருந்து வருவது விசனமளிக்கத்தக்கது.

யாழ்.அஸீமும் 'மண்ணில் வேரோடிய மனசோடு' தொகுதியைப் புதுக்கவிதை களிலேயே படைத்துள்ளார். கலைவாதி கலீல் நூலுக்கு எழுதிய முன்னுரையில் 'கவிஞர்களாகச் சில பிறக்கிறார்கள்.சிலர் உருவாகிறார்கள். ஆனால் எல்லோருமே கவித்த எழுதி விடுகிறார்கள். வேடிக்கை தான்" என்கிறார்.

மரபு சாரமால் எழுது வதை இந்த மாதிரி குறிப்பிட்டுள்ளார். மரபு சாராமல் எழுதக்கூடாதுதென்று யார் வலியுறுத்து வார்கள்? படைப்பாளி அந்த உருவத்தில் படைப்பைக் கொண்டுவந்தாலும் அதனைப் பற்றிய நல்லது கெட்டது பற்றியே மதிப்புரை கோரப்படுகிறது.

என்றாலும் படைப்பிலக்கியத்தின் கூறு தெட்டத் தெளிவாக வரையறுக்கப் படவேண்டிய தேவை காலத்தின் கட்டாயமாக வலியுறுத்தப்படவேண்டும். எல்லாவற்றையும் கவிதை என்னும் நோக்கில் பார்ப்பதெப்படி?

எல்லாமாக 23 தலைப்புகளில் 125 பக்கங்களில் நூலில் அடங்கிய படைப்புக்கள் எழுதப்பட்டுள்ளன. வசதி கருதி இப்பொழுது புழக்கத்தில் இருக்கும் நாமாகரணத்தையே உபயோகிப்போம்.

இந்தப் புதுக்கவிதைகளைப் பற்றி இந்தியப் பேராசிரியர் அ.மார்க்ஸ், கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன் ஆகியோரும் அணிந்துரை, மதிப்புரை ஆகியன எழுதியுள்ளனர்.

'கண்மணியாம் நபிகள் மக்காவின் மண் துறந்து மதீனத்து நகரதன்னில் வாழ்ந்த வரலாறு' அவர்களது இன்றைய துயரத்தில் துணை நிற்பதயும் யாழ். அஸீமின் கவிதைகள் உணர்த்துகின்றன. இவ்விதம் அ.மார்க்ஸ் சுட்டுவதுபோல் தொகுதியில் அடங்கி யுள்ள கவிதைகள் அனைத்தும் பேசு பொருளாக வடபுல முஸ்லிம்கள் துரத்தப் பட்ட சங்கதிகளே தூக்கலாகக் காணப் படுகின்றது.

'இக் கவிதைத் தொகுப்பில் கவிஞர் யாழ். அஸீம் அவர்களுக்கு வார்த்தைகள் வசமாகி யுள்ளன. தற்போது பரவலாக எழுதப் படுவது போல் புரியா மொழியில் கவிதை கள் புனையாமல் பாமரரும் புரிந்து கொள்ளுமாறு எளிய நடையில் சொல்லாட்சி செய்துள்ளார்' என்று கவிஞர் ஜின்னாஹ் குறிப்பிடுவது போன்றே கவிதை கள் அனைத்தும் சகலராலும் வாசித்துப் புரிந்துகொள்ளும்படி எழுதப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

நூலில் பெயராக அமைந்துள்ள மண்ணில் வேரோடிய மனசோடு" (பக்:41) எப்போதும்இனிக்கிறது.' (பக்:89) ஆகிய இரண்டு கவிதைகளும் தொகுதி யில் அடங்கியுள்ள 23 கவிதைகளிலும் பேசப்படாத சங்கதிகளைப் பேசி ஆனந்தக் கூத்தாடுவதை அவதானிக்கலாம்.

**மாவடி வீதி விட்டு**
**மாங்காய்க்குக் கல்லெறிந்து**
**தெருவோடு தொங்கும்**
**தென்னை இளநீர் குடித்து**
**தெறிப்புகள் தொடங்கிடுமே!**

'மண்ணில் வேரோடிய மனசோடு'(பக்கம்:45,46)

**கட்டிச் சம்பலுடன்**
**கந்தசாமி கடலைவடை**
**இடியப்பம் சொதியுடனே**
**இதமானஉழுந்துவடை**
**எண்ணெய் முறுவலும்தான்,**
**இப்போதும் இனிக்கிறது!**

இப்போதும் இனிக்கிறது( பக்:90) ஆகிய அந்த இரண்டுகவிதைகளும் கவிஞர் யாழ்.அஸீம் இளமைக் காலங்களில் வடபுலத்தில் தமிழ் மாணவ நண்பர்களுடன் சுற்றித் திரிகையில் அனுபவித்தனவகைளை எண்ணி ஆனந்திக்கிறார்.

எனினும் தொகுதியில் அடங்கியுள்ள தொண்ணூறு வீதமான கவிதைகளில் வடபுலத்தில் இருந்த தொண்ணூறாம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30 ஆம்திகதி முஸ்லிம்கள் துடைத்தெறியப்பட்ட காரணிகள் மாறாத வடுவாக தேறிக் காண்பபடுகிறது.

**ஈழல் போராட்டமிங்கு**
**முறை கேடாய்**
**ஈன்றெடுத்த**
**வடபுலத்து அகதியெனும்**
**புதியதொரு சமுதாயம் - நாம்**
**விடியலுக்காய ஏங்குகிறோம்!**

'இது கவிதையல்ல...'(பக்:10)

**பிறந்த மண்ணில்**
**வாழ்வதே பெருமை**
**அதுவே நமது உரிமை**
**பிறந்த மண்ணை நினைக்கையில்**
**மனம் சிட்டக்குருவியாய்**
**பறக்கிறது!** 'தாய் மண்ணின் காலடிக்கு...' (பக்:29)

**இப்போதும் கூட**
**இதயத்தால் கேட்கிறோம்**
**உங்கள் உரமான**
**நெஞ்சத் தரையில்**
**கோழைப் பயிர்கள் எப்படி**
**முளைத்தன?** 'இது கவிதையல்ல...' (பக்:13)

இவ்விதமாகக் குமுறுகின்ற கவிஞனின் உள்ளத்தில் எங்கேனும் தரக்குறைவான பார்வையில் வசைபாடும் பாங்கினைக் காணமுடியவில்லை.

**போராட்டப் பாதையிலே**
**மாறாட்டம் தோன்றியநாள்!**

'தாய் மண்ணின் காலடிக்கு..."(பக்:23)

**அக்டோபர் முப்பது**
**தொண்ணூறாம்**
**ஆண்டுதனில்**
**மண்ணிழந்த வாழ்வுதனை**
**நாம் தொடங்க**
**தொண்ணூற்று ஐந்திலே**
**எம்மோடு நீர் இணைந்தீர்!**

'கூறு நண்பனே கூறு..! (பக்:38)

**பொல்லாத மூத்தவனும்**
**உனை அடித்தவேளைதனில்**
**தோள் கொடுத்த தம்பியெனை**
**ஏன் அடிக்க நீ துணிந்தாய்?'**

தொண்ணூறில் வைத்தாய் தீ!" (பக்:78)

இவ்விதமாய் அந்தத் துரோகம் இழைத்த சங்கதியை சீரான முறையில் அனுகும் கவிஞரின் மனிதநேயப் பண்பு மேற்கண்ட கவிதைகளில் மிளிர்வதைக் காணலாம்.

**மானிடம் தூங்கிவிட்ட - எம்**
**மாண்புமிகு பூமியிலே - அது**
**மீண்டும் விழித்திட**
**உழைப்போம் வா!** 'கூறு நண்பனேகூறு' (பக்:39) என்றுபகைமை பாராட்டில்அழைப்பு விடுக்கும் கவிஞர்

**தூசுகளாகப் பறந்த நாம்**
**பாறைகளாய் மீண்டும்**
**வருவோம்!** 'இது கவிதையல்ல.." (பக்:19) என நம்பிக்கை கொள்வதுடன் நின்று விடவில்லை.

**உயிரிலும் மேலான- எம்**
**இறையில்லங்களில்**
**மீண்டும் முழங்கவேண்டும்**
**அல்லாஹு அக்பர் ...**

'கனவுகள்உன் கையில் (பக்:54) என்றும் ஆதங்கப்பட்டது இன்று நிதர்சனமாகியுள்ளதைக் கவிஞரும், அவர்சார் மக்களும் காது குளிரக் கேட்டு மகிழ்ந்துகொண்டுள்ளனரல்லவா?

**மானிட நேயம் கொண்டு**
**மாந்தர்தம் அவலம் நீக்கும்**
**மகத்தான சேவைக்கு**
**மதச்சாயம் பூசாதீர்**
**இனச்சாயம் பூசாதீர்!**

'ஊனமாகிப்போன உரிமைக்குரல்கள்! (பக்:101) என்று வேண்டுகோள் விடுத்துள்ள யாழ் .அஸீமின் 'மண்ணில் வேரோடியமனசோடு' புதுக் கவிதைத்தொகுதியின் இறுதியில் சேர்க்கப்பட்ட மூன்று கவிதைகளும் இஸ்ரவேல் பயங்கரவாதம் பற்றியும் பேசியுள்ளன.

**பயங்கர வாதத்துக்கு**
**இலக்கணம் வகுத்தோர்**
**இஸ்ரேலியக் கொலைவெறிக்கு**
**என்ன பெயர் வைத்தனரோ?**

'மனிதம் கருகும் பயங்கரவாதம்! (பக்:113)

மேற்படி கவிதைத் தொகுதியில் அடங்கியுள்ள கவிதைகளில் அநேக மானவை மிகவும் நீண்டவையாகக் காணப்படுகின்றன. கவிதை பலநூறு சொற் களில் சொல்லும் செய்தியை இரத்தினச் சுருக்கமாக எடுத்துரைக்கவேண்டும்.

**நாங்கள் சேற்றில்**
**கால் வைத்தாலே**
**நீங்கள் சோற்றில்**
**கை வைப்பீர்கள்!**

எத்தனை அழகாக இந்தப் புதுக் கவிதை அமைந்துள்ளது. இதில் கூட எதுகை, படிமமாக அமைந்ததால் அது கவிதையாகவும் அமைந்ததைக் கவனிக்கலாம்.

யாழ்.அஸீம் கவிஞர்மட்டுமன்றி சிறுகதையாளரும் கூட! அவரது கவிதைகள் மேலும் செழுமை அடைய உழைக்க வேண்டும்.

**தேவிபரமலிங்கம்.**

---

முரசு

# குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும்
வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே
ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும்,
பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 508

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | |
| 7 | | 9 | | 11 | 12 |
| 13 | 14 | 15 | | 17 | 18 |
| 19 | 20 | | 22 | | 24 |
| | 26 | | 28 | | |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **20.02.2013** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 508
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 505- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ஆ | 2 யி | 3 ர | 4 ம் | | 6 அ |
| 7 ர | | | 10 த | 11 மி | 12 ரு |
| 13 த | 14 பா | 15 ம | 16 க | | 18 ச் |
| 19 ம் | 20 த | | | 23 மௌ | 24 சு |
| | 26 ப | 27 க் | 28 தி | | 30 ண |
| 31 க | 32 டி | | 34 வா | 35 ண | 36 ன் |

**இடமிருந்து வலம்**

01. கலங்கரை விளக்கம் போன்றது. இது. இதன் தனித்தவத்தில் யாரும்குறுக்கிடக் கூடாது.
11. கலியாணப் பாட்டு.
13. "கொக்கென்று நினைத்தீரோ முனிவரே" என்று கேட்டவர்.
17. பெலன் அல்லது செருக்கு. (திரும்பியுள்ளது)
19. வெண்கல வேலை. (திரும்பியுள்ளது)
31. சிறந்த பாடகியை இப்படி அழைப்பர்.

**மேலிருந்து கீழ்**

01. பிரமன்.
03. குயவன் சக்கரம்.
05. கைகொடுத்துத் தாங்குதல்.
12. ஒரு நாடு.
14. சௌக்கியமானவன்.
22. இது முனிவர்களின் தவத்தையும் கெடுக்கக் கூடாது.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.506 இற்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

**எஸ்.சந்தியா, ஹெக்கிராவ.**

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. அ.அட்சஜா, தெங்னங்கும்பற, கண்டி.
02. வ.குபோரன், திருநெல்வேலி,யாழ்ப்பாணம்
03. எம்.முகேஸ், தோனிக்கல், வவுனியா.
04. ஏ.அர்ச்சுதன், உப்புக்குளம், மன்னார்.
05. எம்.வைஸ்ணவி, றெட்பானா, விஸ்வமடு.
06. இ.கஜாளினி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
07. எம். வித்தியா, மாலுசந்தி,பருத்தித்துறை.
08. கு.நரேன், சாவகச்சேரி.
09. எம்.எவ்.மஷாகிர், புத்தளம்.
10. ம.அரவிந்தன், கொழும்பு -06.

17



# வலிகளின் சன்மானம்

**இராமசாமி ரமேஷ், அளம்பில்**

**ஆம்! வலிகளையும், சுமைகளையும் தோல்விகளையும், அவமானங்களையும் சுமந்து - கடந்து வெற்றிக்காகப் போராடும் எழுத்தாளன் ஒருவனின் எழுத்துலகப் பயணம் இங்கே தொடர்கிறது.**

**'காதலில்** காத்திருப்பது சுகம்தான் என்பார்கள். ஆனால் அந்த காத்திருப்பின் ஒவ்வொரு நொடிகளிலும் உள்ளத்தினுள் தோன்றும் அவஸ்தையை அனுபவித்தவர்களுக்குத்தான் சுகமா? வலியாவென்று புரியும். எத்தனை யுகங்கள் காத்திருந்தாலும், யாருக்காக



காத்திருக்கிறோமோ அவர் அல்லது அவள் நமக்குத்தானென்றால் நிச்சயமாக காத்திருக்க லாம்! நிலாவின் காதலில் அப்படியில்லையே..!! தன்னையும்தன் காதலையும் உதறிவிட்டவனுக் காய் எதற்காக நான் இனியும் வேதனை சுமக்கவேண்டுமென்று எண்ணச் சுவடுகள் அவளின் உள்ளுணர்வுக்குள் பதியத் தொடங்க, படிப்படியாக மனசு மாற்றம் பெற ஆரம்பித்தது.

" அடுத்தவர்கள் போல... காதலித்தது போல நடித்து நட்சத்திரனிடம் காசு பணம் கறக்கவா செய்தேன்? என் சுய இலாம் கருதியா அவனுக்காகவே இத்தனை போராட்டம் என் பெற்றோரிடம் நடத்தினேன்? உண்மையான அன்பைத் தானே அவன்மீது வைத்திருந்தேன். ஏன் என் அன்பு அவனுக்கு புரியவில்லை..?" எண்ணக்கோடுகள் படர்ந்து போகையில் யாரோ தலையில் சம்மட்டியால் ஓங்கி அடிப்பதான உணர்வு.

" காதல்இப்படித்தான்!! ஒருஉயிரை வாழவும் வைக்கும் , சாகவும் வைக்கும்!" இந்த வரிசைக்குள் என் காதலும் வந்து விட்டதே! ஆற்றாமை நிலாவுக்குள் ஆத்திரத்தையும் கிளம்பியது. என் நிலைமையை எடுத்துச் சொல்லக்கூட நட்சத்திரன் வராமல் போய் விட்டானே! காதலாலும் கவிதைகளாலும் என்னை கரம் பற்றியவன், இன்று இரும்பில் செய்த இதயம் கொண்டவன் போலல்லவா இருக்கிறான்? இவ்வளவு காலமும் உண்மை யாக நேசித்த என்னை, நிர்க்கதியாக்கிய வனுக்கு நான்நல்ல பாடம் படிப்பிக்கணம்.. செய்கிறேன் வேலை.." தன் நாட்குறிப்பை எடுத்தவள், விழிகளில் சிதறிய நீர்த்துளிகளை விலக்கியபடி ஜனவரி –12 இன் கீழ் எழுதினாள். "இத்தனை நாட்களும் பொய்க்கோலம் போட்டு என் காதலை சிதைத்தவன் என் இதயத்தி லிருந்து இன்றோடு அழிக்கப்படுகிறன்...!"

நாட்குறிப்பின் பக்கங்கள் நிறைவு பெறும்வரைஎழுதினாள். தனக்குநேர்ந்த கதியை தன்பார்வையில் பட்டதைக் குறித்தே அவளால் எழுத முடிந்தது. பாவம் நட்சத்திரன்!!! அவன் காதலை நேசித்த நிலாவால், அவனது நிலையையும் நிர்ப்பந்தங்களையும் நினைத்துக் கூட பார்க்க முடியாமல் போய்விட்டது.

இலக்கியத்தையே நேசிக்கும் அவனால் ஒரு இதயத்தை நேசிக்க முடியாமல் போய்விடுமா? இவள் புரிந்துகொண்டது இவ்வளவுதான்?? அவனது கையறு நிலை, இனி ஒருபோதும் நிலாவுக்குப் புரிய வாய்ப்பில்லை. நட்சத்திரனின் மீதிருந்தகோபத்தில், தன் தாயிடம் "எனக்கு சம்மதம் அம்மா.." பச்சைக்கொடி காட்டினாள். தேவகி எண்ணியிருந்த திருகோணமலை அண்ணரின்மகன் யாரையோ காதலிப்பதாக தகவல் கசிய, "பேசாமல் ரகுவுக்கே கட்டி வைச்சிடுவம்" என்பதாய் அவள் முடிவிலும் மாற்றம் வந்துவிட்டது. நாம் நேசிப்பவர்களை விட நம்மை நேசிப்பவர்களை நேசிக்கும் போதுதான் நிலையான உண்மை அன்பு புரியும் என்பார்கள். நிலாவுக்குஅதுவே தாரக மந்திரமாகிப்போனது. "இனி வாழ்க்கையில.... நட்சத்திரனை ஒருபோதும் சந்திக்கக் கூடாது! அவன் ஞாபகம் இனி வரவேகூடாது.." தீர்மானங்கள் பலவற்றை தனக்குள் தீட்டிக் கொண்டாள். காதலிப்பதை விட காதலிக்கப்படவேண்டும்! ரகு இதுவரைக்கும் எப்படியோ இருந்திருக்கட்டும். நான் கலியாணம் செய்தபிறகு,அவரை திருத்திக் காட்டுறன்.

தன் எதிர்பார்ப்பு சிதைந்து விட்டவேகத்தில், சாதாரண மனுஷி யாகி நட்சத்திரனை பழிவாங்கத் துடிக்கும் அளவுக்கு இவள், அவன் மீது வெறுப்புக்களை உமிழ்ந்தாள். இருஇதயங்களுக்குள்ளும் ஒருமித்த உணர்வுகள் குடிகொள்ளும்போது தான் அங்கு அன்பு மலரும். இவள் விடயத்தில் நிலைமை தலைகீழ் தான்! தன்பிரச்சினைக்கு மட்டம் முடிவு கட்ட எத்தனித்தவள், இந்த முடிவால் நட்சத்திரன் எதிர்கொள்ளப் பொகும் இடர்களைகொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவில்லை.

(வலிகள் தொடரும்...)

# உறுதி

**எம்.ஐ.எம்.அஷ்ரப்
489, ஆஸ்பத்திரி வீதி,
சாய்ந்தமருது -07**

**இங்க** வா புள்ள விசாலாட்சி உன் மாமன் ஆறுமுகன் இந்தப் பக்கம் வந்தவனா? என்றுவெளியே நின்றவாறு சப்தமிட்டார் முருகானந்தம். அதுகேட்டு உள்ளேயிருந்து வெளியே ஒடி வந்தாள்விசாலாட்சி. அப்பா கையில் இரண்டுபெரிய சூரை மீன்களை வைத்துக்கொண்டு வாயில்சுருட்டையும் பற்றவைத்தவாறு நின்றுகொண்டிருந்தார்.

வழமையாக அவர் கடலுக்குப் போய் வருபோது பெரிய மீனைப் பார்த்து இப்படிக் கொண்டுவருவது வழக்கம். அவர் கடலுக்குப் போய்விட்டு வந்தால் உடனே வீட்டுக்குள் நுழையமாட்டார். வெளியே கிணற்றடிக்குப்போய் குளித்துவிட்டுத்தான் வீட்டுக்குள்ளே காலெடுத்து வைப்பார் இது அம்மா உயிருடன் இருக்கும் போதிலிருந்து அவர் கடைப்பிடித்து வந்த ஒழுங்குமுறை.

வெளியே வந்த விசாலாட்சி, என்னப்பா புதுக்கதை கதைக்கிறீங்கள். மாமா ஆறுமுகன் இங்கு ஏன் வரப்போகிறார்.இத்தனை வருடத்திற்குப் பிறகு... என்றாள்.

நான் கேட்கிறதுக்கு மாத்திரம் பதில் சொல்லு. ஆறுமுகன் வந்தவனா இல்லையா?

இல்லையப்பா அவர் இங்கு வரவில்லை. நானும் இப்பத்தான் மகனை 'நேசரி' யிலிருந்து கூட்டிக்கொண்டு வந்தனான் என்று அவள் கூறியபோது,

ப்பூம்., ப்பூம் என்று சத்தமிட்டுக் கொண்டு சிறிய புத்தம்புது பைசிக்கிள் ஒன்றைச் செலுத்தியவாறு வீட்டுக்குள்ளேயிருந்து கிரண் வெளியே வந்து நின்றான்.

விசாலாட்சி மகனை ஆச்சரியத்தோடு பார்க்க, டேய் கரன் ஏதடா உனக்கு இந்த பைசிக்கில் என்று அதட்டினார் முருகானந்தம்.

புள்ள விசாலாட்சி, நீ உன் மகனக் கூட்டிக் கொண்டு வரப் போனப்புறம் உன் மாமன் ஆறு முகன் இங்கு வந்திருந்தான். அவன்தான் தன்பேரனுக்கு என்று இதைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டுப் போனான். உன்னையும் மிகவும் விசாரித்துவிட்டுச் சென்றான். என் பிரார்த்தனை வீண்போகவில்லை மகளே, என்று நாத்தழுதழுக்க முக மலர்ச்சியோடு உள்ளேயிருந்து வந்த செல்லம்மா பொக்கை வாயைத் திறந்து கூறினாள்.

மாமி, உங்க மகனைக் கண்ட சந்தோசம் உங்களுக்கு இருக்கலாம். ஆனா அவங்க செஞ்சது எல்லாத்தையும் மறந்துடாதையுங்கோ அவன இந்த வளவுக்குள்வர நான் ஒருபோதும் அனுமதிக்கமாட்டான் என்று முருகானந்தம் கூறியதும்.

இடையே குறுக்கிட்டவிசாலாட்சி, அப்பா...! பாட்டி...! இங்க என்ன நடக்கது. ஆறுமுகன் மாமா இங்கு ஏன் வந்தார். இத்தனை காலமா தனக்கு ஒருபேரன் இருக்கிறான் என்ற நினைவு கூட இல்லாமல் இருந்தவர், திடீரென பாசம் பொத்துக்கொண்டு இங்கு வரக் காரணம் என்ன? மகனுக்கு இல்லாத அக்கறை இன்று அப்பனுக்கு வந்திருக்கிறது. அவர்கள் யாரும் இங்கு வர நானும் ஒருபோதும் அனுமதிக்க மாட்டன் என்று பொரிந்து தள்ளினாள் விசாலாட்சி.

பிள்ள, உனக்கு ஒன்றும் தெரியாது. நான் சொல்வதைக் கேட்டால் சந்தோசப்படுவாய். என்றுபாட்டி செல்லம்மா சொன்னதும்.

அவங்கட விசயத்தில் சந்தோசப்படுவதற்கு இன்னும் என்ன இருக்கிறது. வயசு போன காலத்தில எல்லாத்தையும் மறந்துட்டீங்களா? புது மனைவி மூலமாக மகனுக்கு இத்தனை காலமாக பிள்ளைஇல்லை என்பதால் இன்று இந்தப் பிள்ளை மீது அவர்களுக்கு பாசம் வந்திருக்கிறது என்று பாட்டிமீது பாய்ந்தாள் விசாலாட்சி.

மாமி நீங்க உள்ளே போங்க உங்களுக்குத் தெரிந்த விடயம் எனக்கும் தெரியும். நான் விசாலாட்சிக்கிட்ட எல்லாவற்றையும் சொல்லிக் கொள்கிறேன் என்று பாட்டியை உள்ளே அனுப்பினார் முருகானந்தம்.

இன்டைக்கி நான் கடற்கரைக்குப் போகைக்க ஆறுமுகன் வந்தான். என்னைக் கண்டதும் ஒதுங்கிப் போகிறவன். இன்று நேருக்கு நேர்வந்து நின்று கதைத்தான். அப்படி வந்து கதைக்கிறவன புடிச்சுத் தள்ளிவிட்டுப் போக முடியுமா, என்று நானும் சும்மா பேசாமல் இருந்துவிட்டேன் அவன் போகைக்க சொன்ன விடயம் தான் இன்னும் என்னால் ஜீரணித் துக்கொள்ள முடியவில்லை.

அப்படி என்னப்பா சொன்னார்?

ரமேஸ் கூட்டிக்கொண்டு போன பெண் இந்த மூன்று வருடங்களும் அவனோடு வாழ்ந்து விட்டு இப்போது பிரிந்து போய்விட்டாளாம்.

வள் எவனுடன் இருந்தாலென்ன. பிரிஞ்சு போனா லென்ன இதை யெல்லாம் அவர் உங்களுக்கிட்ட வந்துசொல்லி விட்டப் போக வேண்டிய அவசியமென்ன.



அவன் சும்மா வரல்ல விசாலாட்சி. எங்களது விருப்பத்தையும் அறிந்துகொண்டு போகத்தான் வந்திருக்கிறான். ஏனென்றால் ஆறுமுகன் என்னிடம் இப்படித்தான் சொன்னான் என்றவர் தொடர்ந்தார்.

ரமேஸ விட்டுட்டு அவள் ராஜி போனாப் போகட்டும். நான்இப்ப ஒருயோசனை வைத்திருக் கிறன். இந்த சந்தர்ப்பத்த பயன்படுத்தி ரமேஸ இங்கேயே வைத்திருக்கவேண்டும். அத்தோடு நீங்க மாத்திரம் ஓமென்று சொல்லுங்க மச்சான் என் மருமகள் விசாலாட்சியோடு அவனை மீண்டும் நான் சேர்த்து வைக்கிறேன் என்றான். எனக்கு வந்தது பொல்லாத கோபம்.

நீ இப்ப கதைக்க வந்ததோடு விட்டிட்டன், இந்த வார்த்தையை இதற்குமேல் இன்னொரு தரம் சொல்லாத. என்று நான் அவனிடம் கூறினேன். அதற்கு அவன் சொன்னான்.

உங்களுக்கு அவன்மீது நிறையக் கோபமிருக்கு என்று எனக்குத் தெரியும். ரமேஸ் இந்த மூன்று வருடங்களும் நிம்மதியாக வாழ்ந்தான் என்று நினைக்கிறீங்களா மச்சான். அவன் ஒருவேகத்தில அப்படி செய்யக்கூடாத பிழையொன்றைச் செய்திட்டான். அதற்காக இன்று அவன் வருந்துகிறான். ஆனால் அவன் விசாலாட்சியையும், கரனையும் நினைத்து அழாத நாள் இல்லை. இதனால்தான் அவனுக்கு ராஜிக்குமிடையே பிரச்சினை வந்திருக்கிறது இப்ப எப்படி துரும்பாய் இளைத்திருக்கிறான அவன், என்றார்.

மகனுக்காக அப்பா பரிந்துரைக்க வந்திருக் கிறார். இப்போது இருந்தவள் போய்விட்டாள். மகனுக்கு ஒரு பெண் தேவை. அதற்காக அப்பன் நாடகமாடுகிறார். இது புரியவில்லையா அப்பா உங்களுக்கு. அதிருக்கட்டும் ஏன் அவர் இத்தனை காலமும் இங்கு வராதிருந்தார் என்று கேட்டீங்களா.

அதையும் அவன் சொன்னான், ரமேஸ் விசாலாட்சியைப் பிரிந்துசென்றது எனக்கு மிகுந்த மனவேதனையாக இருந்தது. அதன் காரணமாகத்தான் இத்தனை காலமும் உங்களைச் சந்திக்கமுடியாமல் கூனிக் குறுகிநின்றன். இப்ப நல்லஒரு சந்தர்ப்பம் வந்த பிற்பாடுதான் உங்க விட்டுக்குச் சென்று விட்டு வருகின்றேன் என்றான்.

ஆறுமுகன் இந்த விடயத்தைத்தான் பாட்டிக்கிட்டயும் வந்து சொல்லிப் போட்டுப் போயிருப்பான். அதுதான் பாட்டியும் சந்தோசத்தில் மிதக்கிறா, என்றார் முருகானந்தம். அத்தோடு மேலும் சொன்னார் உன்ர மனநிலை எப்படியோ தெரியாது விசாலாட்சிகு எனக்கெண்டா அவன் கதைத்தது கொஞ்சம் கூடப் பிடிக்கல்ல. இத்தனை காலமும் செய்யாத முயற்சிய அவள்ராஜி இவனை விட்டுப்போனப்புறம் செய்ய முன்வந்திருக்கிறான். அது வரைக்கும் நாங்களும் அவன்ட மகனுக்காக காத்திருக்கவேண்டுமாக்கும்.

அப்பா, உங்கட முடிவு என்னவோ. அது தான் என்ட முடிவும். அவரில அன்றைக்கு ஏற்பட்ட வெறுப்பு இன்னும் என்னில் அப்படியே இருக்கின்றது இந்த விடயத்தில் என்னிடம் சிறு சபலம் கூடக் கிடையாது.

இந்தநேரத்தில் உள்ளேயிருந்து செல்லம்மா பாட்டியின் குரல் கேட்கின்றது. என்ன இருந்தாலும் நீ அவனுடன் வாழ்ந்தவள். அவன் உனக்கு முறை மச்சான் கூட, ஏதோ கிறுக்குத்தனத்தால அப்படிச் செஞ்சிட்டான். அதனால என்னென் வெல்லாமோ நடந்த போச்சு. அதைவிடு அதற்காக அவன் உன்னையும் உன் மகனையும் நினைச்சு மிகவும் வேதனைப் படுவதா ஆறுமுகன் வந்து சொல்லிவிட்டுப் போனான்.. இனி நீதான் உன்ட வாழ்க்கையை காப்பாத்திக்க வேண்டும். இப்ப வந்திருக்கிறது அதற்கான நல்லதொரு சந்தர்ப்பம்.

பாட்டி.. யாருக்காகவும் நான் அலையவில்லை. இப்ப இருக்கிற மனைவியை அவர் எப்போதாவது விட்டுட்டு வருவார் அப்போது சேர்த்துக்கொள்ளலாம் என்று நான் ஒருபோதும் நினைத்ததுமில்லை. என்ட வாழ்க்கையைக் காப்பாத்திக்கொள்ள என்னால் முடியும். அதற்காக நீங்க கவலைப்பட வேண்டாம். என்ட வாழ்க்கையை காப்பாத்திக் கொள்ள என்னால் முடியும். அதற்காக நீங்க கவலைப்பட வேண்டாம். உங்கட மகளின் சாவுக்கே காரணமானவன் அவன். நீங்க அதையெல்லாம் மறந்து விட்டீங்க. என்னால் மறக்க முடியாது. இப்போது அவனுக்கு வக்காலத்து வேறு. இதைப்பற்றி இனிமேல் கதையாதையுங்கோ என்றாள் கண்டிப்பாக.

.......................

இந்தப் பாட்டியின் மக்கள் தான் விசாலாட்சியின் தாயாரும், ஆறுமுகனும். ஆறுமுகனின் மகன் ரமேஸ் மாமியின் மகள் விசாலாட்சியை மிகவும் விரும்பியதன் காரணமாக வீட்டாரின் சம்சதத் துடன் அவர்கள் திருமணம் நடந்தேறியது. அவர்கள் வாழ்க்கை மிகவும் சந்தோசமாகக் கழிந்தது. இதன் விளைவாக கரன் என்ற குழந்தையும் கிடைத்தான் இந்தநேரத்தில்தான் உழைப்புக்காக வெளிநாடு சென்றான் ரமேஸ்.

இருவருடங்கள் கழித்து அவன் இந்த நாட்டுக்கு மீண்டும் திரும்பி வந்தபோது ராஜி என்ற ஒரு பெண் பிள்ளையையும் அழைத்துக்கொண்டு வந்தான். அவர்களுக்குள் அங்கிருந்த உறவு இங்கு நாட்டுக்க வந்ததும் கூடப் பிரிக்க முடியாமல் போனது. ரமேஸின் இந்த செயலைப் பார்த்து விசாலாட்சியின் குடும்பமென்ன. ஊரே அதிர்ந்துபோனது. நாட்டுக்க வந்தால் வெவ்வேறாகப் பிரிந்து செல்வதென்ற தீர்மானத்தோடுதான் இங்கே வந்தார்கள். ஆனால் இங்கு வந்தும் அந்த உறவு ஒட்டிக்கொண்டது.

.......................

விசாலாட்சி... விசாலாட்சி...

யாரு .. கோகிலம் மாமியா, உள்ள வாங்க மாமி.

எங்க அப்பா, பாட்டி ஒருத்தரும் வீட்டில இல்லையா?

அப்பா கடலுக்குப் போனவர் இன்னும் வந்து சேரல்ல. பாட்டிகரு இப்ப புதுசா மகன்ட உறவு கிடைச்சிருக்கு அங்கதான் போயிருப்பா என்று நினைக்கிறன்.

எல்லாம் கேள்விப்பட்டன். நல்ல விசயம் தானே போன உசிரு திரும்பி வந்தமாதிரி. இதில உனக்கும் சந்தோசம்-என்றுசொல்லு. இனியென்ன நீங்களெல்லாரும் இருக்கிற சந்தோத்தில பங்கெடுத்துக்கொள்ள உங்கம்மா கமலத்திற்குத்தான் குடுத்து வைக்கல்ல என்றதும்,

ஆத்திரமுற்ற விசாலாட்சி, கோகிலம் மாமி... நீங்க எதற்காக இங்கு வந்தீங்க, சும்மா இருந்து போட்டுப் போறண்டா இருங்க. இந்தத்தேவையற்ற கதைகளைக் கதைக்க வேண்டுமானால் எழுந்து போயிடுங்க. வேறு எங்கேயாது போய்க் கதையுங்க என்றாள்.

இந்தமாதிரி அவள் கதைப்பாள் என்பதை எதிர்பார்த்திராத கோகிலம் வெலவெலத்துப் போனாள். என்னடி புள்ள இப்படிக் கதைக்கிறாய் என்றாள்

பின்ன என்ன மாமி, ஆம்புளயெண்டா அவர் விரும்புமட்டும் கட்டின மனைவியோட இருப்பாரு. அவர் வேண்டிய நேரம் தன்மனைவி பிள்ளைகளை யெல்லாம் அப்படியே விட்டுப் போட்டு வேண்டிய வெண்ணைக் கூட்டிக் கொண்டுபோய் வருடக் கணக்காக வாழ்க்கை நடத்துவாரு, அதில பிரச்சினை வந்திட்டா அதை விட்டுப்போட்டு வந்து பழைய மனைவியோட சேர்ந்துக்குவாரு அவவிட்டா இந்தப் பெண்ணுக்கு வேறு கதியில்ல என்று வந்தவர வரவேற்று வச்சிருக்க வேண்டும் இதைத்தானே செல்லவாறீங்க.

என்று விசாலாட்சி சீறிப்பாய கோகிலம் ஒன்றும் பேசாமல் எழுந்து சென்றுவிட்டாள்.



# துன்பமும் தோற்கும்



ஆர்த்தது முரசம்.
அழைத்தது யுத்தம்!

சுந்தரன் நகைத்தான். போருடை தரித்தான்
பத்தரை மாற்று பசும்பொன் மேனியாள்
சுந்தரன் புறப்படக் குங்குமம் இட்டாள்.

தொட்டிலில் பிள்ளை தூக்கத்திலிருந்தது.
தூக்கியொரு முத்தம் கன்னத்திலிட்டான்.

கட்டிலில் மனைவி. தொட்டிலில் பிள்ளை.
காரிருள் சூழ்ந்தால் களிப்புக்கா பஞ்சம்.
வாழலாம் ஆயிரம் வழிதான் உண்டு - ஆயினும்
மாளலாம் என்னும் வழியினில்
புறப்பட்டான்.

தேன் இதழ் பெண்ணாள் தேம்பவேயில்லை.
பொன்மகள் முகத்தில் சோகமுமில்லை.
காரிகை நெஞ்சில் கலக்கமுமில்லை.

பூமுகம் முழுவதும் புன்னகை மின்னல்.
"இந்தப் புன்னகை ஒன்று போதும்
எந்தப் பகையையும் வென்று வரலாம்.
பூமுகம் மலரப் புறப்படும் புன்னகை
செருமுகம்மீது சுழன்றாட வைக்கும்!
சென்று வருகிறேன் - தேவி
உனக்கென்ன கொண்டுவரவேண்டும்?"
"வென்றது நாடு - வீழ்ந்தது பகை
என்ற வெற்றிச் செய்தி!"
தேவி சொல்ல சுந்தரன் மகிழ்ந்தான்.

கட்டித்தழுவிக் கொண்டான்.
கட்டி முத்தம் பெற்றும் கொண்டான்.
"வாழவைக்கும் அமுதம் தந்தாய் - வீரம்
இனிக் கொப்பளிக்கும் கொந்தளிக்கும்!"

சென்றுவிட்டான் சுந்தரன் - பகை
வென்று வருவானோ?
படுகளத்தில் விதையாகிவிடுவானோ?
யார் கண்டார். யார்தான் கண்டார்.
செருக்களம் என்பது சூதாட்ட அரங்கம்.

தொட்டுத் தொட்டு தழுவிய கைகள்
பட்டுப் பட்டு சிவந்த மேனி
கொட்டிக் கொட்டித் தந்தது இன்பம்
தொட்டிலில் கிடக்குது நினைவுச் சின்னம்!
நினைத்துப் பார்த்தால் மஞ்சத்தில் முட்கள்
புரண்டு படுத்தால் உடலெங்கும் வலித்தது.

"கலங்காதே மனமே! கலங்காதே மனமே!
கடமையைத்தானே முடிக்கச் சென்றார்.
பெருமையைத்தானே சூடிச் சென்றார்.
கலங்காதே மனமே! கலங்காதே மனமே!"

"மேனியில் ஆடிய மன்மத வண்டு
பூவினில் தேனை அள்ளிய தேனி
நாவினில் உன்பெயர் இனிக்கும் என்று
பாவினைப் பாடிய கள்ளப் புலவன் - இந்த
இரவினில் எந்தக் களத்தினில் ஆடி
குருதி சிந்திக் குன்றென வீழ்ந்தானோ?"
மனம் ஒரு குரங்கு தாவத்தான் செய்தது.
கணம் ஒரு நினைவில் தாவி விழுந்தது.

வெந்ததைத் தின்று வாயில் வந்ததைப் பேசி
மந்தையாய் இருந்து வாழ்வது பெரிதா?
வெஞ்சமர் களத்தில் வீரம் விதைத்து
எந்தையர் நாட்டை காப்பது பெரிதா?
சிந்தையில் உறுதி இரும்பென எழுந்தது.

மறுநாள் செய்தி வந்தது இடியாய்!
"களத்தில் உன்னவர் காவியமானார்
கடைசி வார்த்தையாய் - தேவியென்று
உன் பெயர் சொன்னார்!"

தொட்டிலில் குழந்தை வீறிட்டு அழுதது.
தூக்கிக் கொஞ்ச இனி அவர் வருவாரோ?
தாக்கிய பகை இரையாக்கிவிட்டதே?

"எங்கே அவர் உடல்?"
"களத்து மேட்டில்!"
"செல்லலாம் - என்னை
அழைத்துச் செல்க!"

"வேண்டாம் பெண்ணே! அங்கே
வேதனை அதிகம்!"
"வெற்றி யாருக்கு?"
"வீரமரபில் வந்தவர் நமக்கே
வெற்றித் தேவதை திலகமிட்டாள்!"
"எதிரிகள் எங்கே? அந்த
எத்தர்கள் எங்கே?"
"தெரியாது பெண்ணே! தோற்றனர்
தெரியும்! தோற்றோடியது
தெரியாது! அத்தனை வேகம்
அவர்கள் புறமுதுகுப் புயல்கள்!"

விளைந்தது வீரம் - வெற்றி
விதைத்தனர் நம்மவர்
பிறகென்ன வேதனை! களத்தில்
பிறந்திருப்பது சாதனை!
புறப்படு வீரனே! என்னவர்
பொன் முகம் கண்டிட வேண்டும்!"

தொட்டிலில் கிடந்த குழந்தையை
தூக்கித் தோளினில் சூடினாள்.
செய்தி சொல்ல வந்த வீரன்
முதலில் வியந்தான். பின் மகிழ்ந்தான்!

வீரப் பெண்டிர் பிறப்பது பெருமை
வீட்டுக்குள் பெண்ணை பூட்டி வைத்து
சிட்டுக் குருவியாய் நினைப்பது மடமை!

நாட்டின் கண்களாய் பெண்களும்
எழுகின்ற காலம் இனி மலரும்!
வீரனின் நெஞ்சில் பெருமிதம் வழிந்தது.

களத்தினில் கிடந்தவன் மார்பினில்
காயம் கண்டவள் கலங்கிடவில்லை!
இதழ்களால் காயத்தில் முத்திரை
பதித்தாள்!
நெற்றியில் முத்தம் நிறைவாயிட்டாள்!

"உன் பெயர் சொல்ல
இதோ உன் மகன்!
நாளை மீண்டும் பகை சூழ்ந்திடில்
நம் மகன் களத்தில் இருப்பான்- உன்வாள்
அவன் கரத்தில் இருக்கும்!"

மாண்டவன் வாளை
கரத்தினில் ஏந்தி - பொன்மகள்
இல்லம் திரும்பிச் சென்றாள்.

"இத்தனை சோகம் - அடியே
எப்படித் தாங்கினாய்?"
பிறிதொரு நாளில்
தோழி கேட்டாள்.

"இன்று பார் தோழி - என் மகன்
படைத்தளபதி - துன்ப
வெள்ளத்தில் துவண்டு போயிருந்தால்
துன்பம் சிரித்திருக்கும்.
நாங்கள் விழுந்திருப்போம்!"

தேவி சொன்னதும் - தோழியின்
மனதில் திருக்குறள்
ஒன்று எழுந்து நின்றது.

**"அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கட் படும்"**

துன்பம் தொடர்ந்து தாக்கினாலும்
துவளாமல் எதிர்த்து நிற்பவர் முன்
துன்பமும் துன்பப்படும்.

*குறள்: 625 - அதிகாரம்: 63*

## சிந்தியா பதில்

**சிந்தியா! ஜனாதிபதியின் யாழ். விஜயம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

*ஆர்.நிர்மலன், நல்லூர்.*

யுத்தத்திற்குப் பின் , வட மாகாணம் குறிப்பாக யாழ். மாவட்டம் பல்வேறு வகையில் அபிவிருத்தி அடைந்து வருகின்றதையும் அதில் ஜனாதிபதியின் தனிப்பட்ட கவனம் இருப்பதையும் காட்டுகின்றது.

**சிந்தியா! ஊடகங்களுக்கு எதிராக நடத்தப்படும் தாக்குதல்களுக்கு பொறுப்பு யார்?**

*எம்.சரவணன், ஓர்சுவேலி.*

பாதுகாப்பு விடயத்தில் விட்டுக்கொடுப்புக்கு இடமில்லை என்று கூறுகின்றார்கள். பாதுகாப்பு என்று கூறுகின்றபோது அது நாட்டின் பாதுகாப்பு மட்டுமல்ல, நாட்டு மக்களின் பாதுகாப்பும் உள்ளடங்கும்.

**சிந்தியா! யாழில் இராணுவ மயமாக்கல் தொடர்வதாக செய்திகள் வெளியாகிய வண்ணம் உள்ளதே...?**

*தா.திருக்குமரன், மன்னார்.*

யாழ்ப்பாணத்து ஊடகங்களின் செய்திகளைச் சொல்கிறீர்களா? அல்லது அநாமதேய இணையத்தளங்களின் செய்திகளைக் குறிப்பிடுகிறீர்களா? ஏனென்றால் யுத்தத்திற்குப் பின்னர் தற்போதைய யாழ்ப்பாண சூழலானது நிறையவே மாற்றமடைந்துள்ளது.

எல்லையில் இருந்தவர்களை கடலுக்குள் இழுத்தவர்கள் அதைத் தந்திரோபாயம் என்றபோது ஏற்றுக்கொண்டார்களே. அந்த நிலைமை இப்போது இல்லை.

**சிந்தியா! பெப்ரவரி 14 நிச்சயம் காதலர் தினம் அவசியம்தானா?**

*ப.ஆரபி, நுவரெலியா.*

நீங்கள் கேட்பதைப் பார்த்தால் காதல் என்ற ஒன்று அவசியம்தானா என்று கேட்பீர்கள் போல் தெரிகிறது. உங்களுக்கு காதல் மேல் ஏன் ஒரு மோதல்.

எது எதுக்கெல்லாமே தினங்கள் கொண்டாடுகிறார்கள் காதலர் தினமும் இருந்துவிட்டுப் போகட்டுமே.

காதலர் தினத்தை பொது விடுமுறை நாளாக பிரகடனம் செய்யவேண்டும் என்று காதலர்கள் போர்க்கொடி தூக்காதவரை அது ஒரு அழகான நாளாக அனுஷ்டிக்கப்படலாம்.

**சிந்தியா! பெண்கள் மீதான வன்புணர்வுக்கு ஆடைதான் முக்கிய காரணமென நினைக்கிறீர்கள்..?**

*ப.ஆரபி, நுவரெலியா.*

அதுவும் ஒரு காரணம் என்று ஆய்வுகள் கூறுகின்றன. அதேபோல் அவ்வாறான சம்பவங்களுக்கு பெண்களும் சிலவேளைகளில் காரணமாக இருக்கின்றார்கள் என்றும் கூறப்படுகின்றது. இப்படிப் பெண்கள் மீதான வன்முறைகளுக்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன.

**சிந்தியா! அமெரிக்கா எல்லா நாடுகளின் பிரச்சினைகளுக்கும் மூக்கை நுழைப்பது ஏன்?**

*ம.ரொஜிஸ்ரன், புத்தளம்.*

உலக நாடுகளில் அமெரிக்கா தலைமைப் பொறுப்பைத் தானே ஏற்றுக் கொண்டுள்ளது.

உலக பொலிஸ்கார நாடாக அமெரிக்காவை வர்ணிப்பது நீங்கள் அறிந்திருப்பீர்கள். அமெரிக்கா பூமியில் மட்டுமல்லாமல் அண்டவெளியிலும் தங்கள் சக்தியைக் காட்டியிருக்கும் நாடாகும்.

அமெரிக்காவின் வல்லரசுக் குணங்கள் மூக்கை நுழைப்பதுபோல் இருந்தாலும் தவிர்க்க முடியாதது.


*மகளிர் கிரிக்கெட் அணித் தலைவி ஸஸிகலா ஸ்ரீவர்த்தனவின் நிச்சயதார்த்த நிகழ்வில் முன்னாள் அணித் தலைவர் அர்ஜுன ரணதுங்க.*

**சிந்தியா! கிரிக்கெட்டில் பெண்கள் அணியிடம் ஆண்கள் அணியினர் நிறையக் கற்றுக் கொள்ள வேண்டுமென்ற முன்னாள் கிரிக்கெட் அணித்தலைவர் அர்ச்சுண ரணதுங்க கருத்து பற்றி..?**

*எம்.ஆர்த்தி, திருகோணமலை.*

எவற்றை என்று அவர் தெளிவாக்கக் கூறியிருந்தால், அவரின் அவதானிப்புக்கள் எத்தகையது என்பதை தெளிவாகப் புரிந்துகொண்டிருக்கலாம். பொதுவாக ஒருவரிடத்தில் இருந்து இன்னொருவர் கற்றுக் கொள்வதில் தவறில்லை.

எது எப்படி இருந்தாலும் பெண்கள் அணியினரின் சர்வதேசத்தரமான கிரிக்கெட் ஆட்டங்களைப் பார்த்து பெருமைப்படலாம்.

எதிர்காலத்தில் பெண்கள் சர்வதேச தரத்திலான விளையாட்டுக்களில் மேலும் மேலும் சிறக்க நமது வாழ்த்துக்கள்.


ஸ்ரீ ராமஜெயம்



**நிரூபித்துக் கொண்டிருக்கும் மலையாள மாந்திரீகம்**



சித்தக் கோளாறு, தோல் வியாதி, ரோக பயம், ஸ்திரி சாபம், செய்வினை தோஷங்கள், திருமணத்தடை, மாங்கல்ய தோஷம் உடையவர்கள், புத்திரதோஷம் உடையவர்கள், வீண் நஷ்டம் - கஷ்டம் வாழ்வா சாவா என்று சிந்திப்பவர்களுக்கு நஞ்சருந்தாமல் பிரச்சினைதீர, முறிந்த காதல் ஒன்றுசேர, கணவன் - மனைவி பிணக்குத் தீர, காதல் கைகூட, சர்வ கஷ்ட நஷ்ட துன்பங்களை விலக்கி சுகமாக வாழ, ஓடிப்போனவர்கள் தேடிவர, பெற்றோர் விருப்பம் இல்லாத திருமணம் விரும்பி நடக்க, நெஞ்சுவலி, நெஞ்சு எரிவு, மார்புவலி, உடல் பீடை நீக்கி ஐஸ்வரியம் கிட்ட, திருமணத்தடை தரித்திரியம், கல்வி சித்தம் கிடைக்க, காதலர்கள் நினைத்ததை சாதிக்க, ராகு திசை, ராகு புத்தி, கேது திசை கேது புத்தியால் ஏற்படும் சகல தோஷங்களை நீக்கி சர்பாதி தோஷம், பூர்வ ஜென்ம சாபங்களை நீக்கி, தூர்சொப்பணம், செய்வினை தோஷம் நீக்கி, குலதெய்வ அருள்கிட்ட, மேலதிகாரிகளின் தொல்லை நீங்க, வெளிநாட்டு பிரயாணத் தடை நீங்க, ஆண் - பெண் உடலுறவு வீரிய குறைவுகள் தீர, சனிபுத்தி சனித்திசை தோஷம் நீங்க, ஆயுள் ஆரோக்கியம் பெற்று தனவஸ்து கிட்ட இவைகளில் இருந்து சித்தி கிட்ட, என்னைச் சந்திக்கலாம். வெளிநாட்டவருக்கு 24 மணித்தியால சேவையுண்டு.

அருள்ஞான சித்தர், துர்க்கைதாசன், தேசபந்து, பேராசிரியர், கலாநிதி, திரு.P.K.சாமி (J.D.G.A.N) J.P ஐயா SRI DURGADEVI MANTHIRIKA UTCHADA PEEDAM. No.23, MAYFILD ROAD, KOTAHENA, COLOMBO -13.
நுவரெலியா கிளை :- No.33, daily Fair Complex. 052 - 2222508
தொலைபேசிலக்கங்கள்:-011-2470615,011-2342463,011-2342464
FAX :- 011 - 2344831 E-MAIL:- drpksamy@sltnet.lk

# கைவிரித்தது சுவிட்சலாந்து!

# தப்பித்துக் கொண்டார்

## பாகிஸ்தான் ஜனாதிபதி



"பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி மீதான ஊழல் வழக்கை விசாரிக்க இயலாது என்று சுவிட்சர் லாந்து அதிகாரிகள் கடிதம் அனுப்பி உள்ளனர் என்று பாகிஸ்தான் அரசு அறிவித்துள்ளது.

பாகிஸ்தான் ஆளும் கட்சி தலைவரும், நாட்டின் ஜனாதிபதியுமான ஆசிப் அலி சர்தாரி, கோடிக்கணக்கான பணத்தை சுவிஸ் வங்கிகளில் பதுக்கி உள்ளார் என்று குற்றம் சாட்டப் பட்டுள்ளது. இந்த வழக்கை விசாரிக்க சுவிஸ் அதிகாரிகளுக்கு கடிதம் எழுதும்படி பாகிஸ்தான் அரசுக்கு சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டது.

நீதிமன்றம் உத்தரவிட்ட பின்னரும் அப்போது இருந்த பிரதமர் யூசுப் ரசா கிலானி எதுவித நடவடிக்கையும் எடுக்காததால், நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் பிரதமர் யூசுப் ரசா கிலானி பதவி இழந்தார். அதன்பிறகு ராஜா பர்வேஸ் அஷ்ரப் பிரதமராக பதவியேற்றார்.

புதிய பிரதமர் வேறு வழியில்லாமல், சுவிஸ் அதிகாரிகளுக்கு கடந்த நவம்பர் மாதம் கடிதம் அனுப்பினார். அதற்குத்தான் இப்போது சுவிஸ் அதிகாரிகள் பதில் அனுப்பி உள்ளனர்.

# ஈரானில் கைதான உளவாளி விடுவிப்பு!

ஈரானில் உளவு பார்த்த குற்றச்சாட்டுக்காக கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவர், விடுவிக்கப்பட்டுள்ளார். ஈரானில் மிக அபூர்வமாக நடைபெறும் சம்பவம் இது. பொதுவாகவே ஈரானுக்குள் உளவாளி என்ற சந்தேகத்தில் கைது செய்யப்படுபவர்கள், குற்றமற்றவர்கள் என விடுவிக்கப்படுவதில்லை.

தற்போது விடுவிக்கப்பட்டுள்ள 26 வயதான மாடெஜ் வலூச், சொலவாக்கியா நாட்டவர். அமெரிக்க உளவுத்துறை சி.ஐ.ஏ.வின் உளவாளி என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவர் விடுவிக்கப்பட்டதன் பின்னணியில் சொலவாக்கியா அரசு உள்ளது. அந்த நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் மிரோஸ்லவ் லஜ்கக், மிக கடுமையான, மற்றும் குழப்பமான பேரம் பேசலின் பின்னர் இவர் விடுவிக்கப்பட்டார் என்று மட்டும் அறிவித்துள்ளார். என்ன பேரம் என்பதை வெளிப்படையாக அறிவிக்கவில்லை.

# ராஜீவ் கொலையாளிகள் விடயத்தில் மௌனம் ஏன்?

## காஷ்மீர் முதல்வர் கேள்வி



தூக்குத்தண்டனை நிறைவேற்றப்பட்ட அப்சல் குரு

ராஜீவ்காந்தி, பியாந்த் சிங் கொலையாளிகள் வரிசையாக தூக்குத் தண்டனைக்கு காத்திருக்கும் நிலையில் அப்சல் குருவை மட்டும் தேர்ந்தெடுத்து தூக்கில் இட்டது ஏன் என காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்ற தாக்குதல் தீவிரவாதி அப்சல் குரு தூக்கிலிடப்பட்டதை தொடர்ந்து ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. பதற்றத்தை தணிக்கும் வகையில் கேபிள் டிவி, இன்டர்நெட் சேவைகள் துண்டிக்கப் பட்டுள்ளதாகவும் தலைநகர் ஸ்ரீநகர் உள்ளிட்ட இடங்களில் பாதுகாப்பு படையினர் குவிக்கப்பட்டுள்ளதாகவும், எனினும் தடையை மீறி பல இடங்களில் போராட்டங்கள் நடைபெற்றதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் அப்சல் குரு தூக்கு குறித்து மாநில முதல்வர் உமர் அப்துல்லா தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில், "மும்பை தீவிரவாதி அஜ்மல் கசாப்பை தூக்கில் போட்டதும், அடுத்து அப்சல் குருவையும் தூக்கில் போட்டு விடுவார்கள் என உள்மனது கூறியது. இதனால் அப்சல் குரு தூக்கில் இடப்பட்ட விவகாரம் என்னை ஆச்சரியப்படுத்தவில்லை. இருப்பினும் ராஜீவ் காந்தி மற்றும் பியாந்த்சிங் கொலையாளிகள் தூக்குத் தண்டனைக்காக காத்திருக்கையில் அவர்களுக்கு முன்னதாக அப்சல்குருவை தூக்கிலிட்டது ஏனென்ற கேள்வி காஷ்மீர் இளைஞர்கள் மத்தியில் எழும்பியுள்ளது" என்று கூறினார்.

# றிஸானாவின் மரணம்

# ஆழமான ஆய்வு

> என்னை மன்னித்து விட்டுவிடச் சொல்லுங்கள் என்று அவர் என்னிடம் கெஞ்சினார். அது என் உள்ளத்தை உருக்கியது.
> அப்படி அவர்கள் மன்னிக்க மறுத்து விட்டால், உங்கள் மரண தண்டனை இன்று நிறைவேற்றப்படும். அப்படியானால் உங்களிடம் ஏதாவது பணம் பொருட்கள் இருந்தால் அதனை என்ன செய்வது என்று அவரிடம் கேட்டேன். தன்னிடம் மொத்தம் ஐந்நூறு (500) சவூதி றியால்கள் இருப்பதாகவும், அதனை தர்மம் செய்திடுமாறும் வேண்டிக் கொண்டார்.
> அவற்றை யாருக்கு எங்கு எந்த வழியில் தர்மம் செய்வது என்று கேட்டபொழுது இங்கேயே எந்த வழியிலேனும் தர்மம் செய்திடுங்கள்.
> – மௌலவி ஏ.ஜே.எம் மக்தூம்



**றிஸானாவுக்கு** மரண தண்டனை நிறைவேற்றப்பட ஒரு சில மணி நேரங்களுக்கு முன்னர் அவரை நேரடியாகக் கண்டு கதைத்து அவருக்காகப் பிரார்த்தித்தவர் மௌலவி ஏ.ஜே.எம் மக்தூம் அவர்கள். அவர் அந்த இறுதி நேரத்தில் நிகழ்ந்தவற்றை நெஞ்சுருக றிசானாவின் பெற்றோருக்குத் இப்படிக் கூறுகின்றார்.

உங்கள் மகள் றிசானாவுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு ஓரிரு மணித்தியாலங்களுக்கு முன் 09.01.2013 அன்று அவரைச் சந்தித்தோம். அவரின் மரண சாசனம் (அரபி மொழியில் வஸிய்யத்) மற்றும் இறுதி ஆசைகள் பற்றிக் கேட்டறிந்து கொள்வதற்கே இச்சந்திப்பு இடம்பெற்றது.

அவரைக் கண்டதும் உங்களுக்கு இறுதி ஆசைகள் மற்றும் மரண சாசனம் ஏதாவது இருக்கின்றதா என்று கேட்டேன். அவருக்கு அது புரியவில்லை. பின்னர் அதனை நான் தெளிவாக விளங்கப்படுத்தினேன். அதற்கு அவர் பதில் சொல்லாது "நான் ஊருக்கு எப்போது போவது" என்று என்னிடம் கேட்டார். அந்தத் தறுவாயில்கூட அவர் தனது ஊருக்குப் போகவேண்டும் என்ற எதிர்பார்ப்பிலேயே இருக்கின்றார் என்பதை என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

உங்கள் மீது என்ன தீர்ப்பு விதிக்கப் பட்டுள்ளது என்று உங்களுக்குத் தெரியுமா என்று அவரிடம் கேட்டபோது தனக்கு ஏற்பட்ட நிலைமையையும் முழுமையாகக் கூறிவிட்டு தனக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னார். அந்த இறுதிநேரத்திலும் தன்மீது சுமத்தப்பட்டிருந்த கொலைக் குற்றத்தை அவர் முழுமையாக மறுத்தார்.

உங்க ளுக்கு இன்று மரண தண்டனை நிறைவேற்றப் போகின்றார்கள் என்பதை அவரிடம் நான் கலக்கத்துடன் கூறினேன். இதனைக் கேட்ட அவர் சில நிமிடங்கள் மௌனமாக இருந்தார்.

உங்கள் பெற்றோர் மற்றும் சகோதரர்களுக்கு ஏதும் சொல்ல இருக்கிறதா என்று கேட்டேன், என்ன சொல்வது என்று பதற்றத்துடன் ஈனக் குரலில் (உடலும் உள்ளமும் சோர்ந்து ஒலிக்கும் குரல்) என்னிடம் திருப்பிக் கேட்டார்.

மரணம் என்பது எல்லோருக்கும் நிச்சயிக்கப்பட்டுள்ளது. இந்த உலகில் யாரும் நிரந்தரமாக வாழ முடியாது. மரணத்திற்குப் பின்னுள்ள மறுமை வாழ்வே நிரந்தரமானது என்பதை அவருக்குத் தெளிவு படுத்தினேன்.

என்னை மன்னித்து விட்டுவிடச் சொல்லுங்கள் என்று அவர் என்னிடம் கெஞ்சினார். அது என் உள்ளத்தை உருக்கியது.

அங்குள்ள அதிகாரிகளிடம் இதுபற்றிக் கூறி அவருக்காகப் பரிந்து பேசினேன். அந்த அதிகாரிகளும் மரணித்த குழந்தையின் பெற்றோரிடம் பேசி முயற்சி செய்வதாக வாக்குறுதியளித்தனர்.

அப்படி அவர்கள் மன்னிக்க மறுத்து விட்டால், உங்கள் மரண தண்டனை இன்று நிறைவேற்றப்படும். அப்படியானால் உங்களிடம் ஏதாவது பணம் பொருட்கள் இருந்தால் அதனை என்ன செய்வது என்று அவரிடம் கேட்டேன். தன்னிடம் மொத்தம் ஐந்நூறு (500) சவூதி றியால்கள் இருப்பதாகவும், அதனை தர்மம் செய்திடுமாறும் வேண்டிக் கொண்டார்.

அவற்றை யாருக்கு எங்கு எந்த வழியில் தர்மம் செய்வது என்று கேட்டபொழுது இங்கேயே எந்த வழியிலேனும் தர்மம் செய்திடுங்கள் என்று உறுதியாகக் கூறி அவருக்கு அறிமுகமான இரு பெண்களை பொறுப்புச் சாட்டினார்.

அப்பொழுது "வணக்கத்துக்குரியவன் இறைவன் ஒருவனைத் தவிர வேறொருவரும் இல்லை என்று நான் சாட்சி கூறுகின்றேன். அவனுக்கு எந்தவொரு இணையும் இல்லை. அவன் தனித்தவன். முஹம்மது நபியவர்கள் இறைவனின் அடியாரும் இறைத்தூதரும் ஆவார்கள்" என்ற பொருள் பட்ட கலிமா ஷஹாதா எனும் வாயால் மொழியும் சாட்சிப் பிரகடனம் அவருக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்டது. பின்னர் தொழுது கொள்வதற்கும் பிரார்த்திப்பதற்கும் அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

அங்கிருந்த அதிகாரிகள் வாக்குறுதியளித்தபடி இறந்த குழந்தையின் உறவினர்களுடன் நீண்ட நேரம் பேச்சு வார்த்தை நடத்தியும் பயனில்லாமல் போய்விட்டது.

அங்கிருந்த மற்றைய அனைவரினதும் எதிர்பார்ப்பு றிஸானா மன்னிக்கப் பட வேண்டும் என்பதாகவே இருந்தது. றிசானா அவருக்குத் தண்டனை நிறைவேற்றப்பட இருந்த இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட வேளையிலும் கலந்துரையாடலில் ஈடுபட்ட உயரதிகாரியிடம் அங்கிருந்த ஒருவர் அவர்கள் மன்னித்து விட்டார்களா என்று கேட்ட பொழுது இன்ஷா அல்லாஹ் மன்னித்து விடுவார்கள் என்றே அவர் அதற்குப் பதிலளித்தார்.

அதாவது இறுதி நேரத்திலும் மன்னித்து விடுவார்கள் என்பதே அங்கிருந்த ஏனையவர்களின் எதிர்பார்ப்பாக இருந்தது. மேலும் அங்கிருந்த யாரும் றிசானாவுடன் கடும்போக்காக நடந்து கொள்ளவில்லை. பண்பும் அன்பும் அங்கு இருந்தது. அதன் பின்னர் அவருக்கு விதிக்கப்பட்டது போன்று அங்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

நான் உங்கள் மகளுக்காக நிறையவே பிரார்த்தித்தேன். உங்கள் மகளின் மரண தண்டனை பற்றிய செய்தி ஒரு நாள் முன்னதாகவே எனக்குத் தெரியவந்தது. அதாவது குறிப்பிட்ட சந்திப்பிற்கான அழைப்பு வந்தபோது அந்த நேரத்திலிருந்து ஒவ்வொரு கணப்பொழுதும் அவருக்காகப் பிரார்த்தனை புரிந்தேன். கடைசி நேரம் வரை அவருக்காகப் பிரார்த்திப்பதைத் தவிர வேறு வழியொன்றும் எனக்குத் தென்படவில்லை.

இறுதிப் பேச்சு வார்த்தையும் தோல்வியில் முடிவடைந்த பிறகு அவரைத் தண்டனை நிறைவேற்றக் கொண்டு செல்லும்போது "இறைவா இவர் அநியாயமாகத் தண்டிக்கப் படுகின்றார் என்றால் அநியாயக்காரர்கள் மீது உனது தண்டனையை இறக்கிவிடுவாயாக" என்று பிரார்த்தித்தேன்.

உங்கள் மகள் அநியாயமாகக் கொல்லப் பட்டிருந்தால் தெரிந்துகொண்டே அவருக்கு அநியாயம் இழைத்தோரை இறைவன் தண்டிக்காமல் விடமாட்டான். மறுமையில் அநியாயம் செய்தோரின் நன்மைகளை எடுத்து இவரிடம் சேர்ப்பிக்கவும், அவர்களிடம் நன்மைகள் இல்லாத பட்சத்தில் இவரின் தீமைகளை அவர்கள் மீது சாட்டி இவருக்கு நிறைய வெகுமதிகளையும் சுவர்க்கலோக பாக்கியத்தையும் வல்ல இறைவன் வழங்குவான். அதேநேரம் இவர் தவறிழைத்திருந்தால் இவ்வுலகில் வழங்கப்பட்ட இந்தத் தண்டனை மூலம் அந்தப் பாவம் மன்னிக்கப்பட்டு விடும். வல்ல இறைவன் தனது திருமறையில் பின்வருமாறு கூறுகின்றான் "மேலும் அக்கிரமக்காரர்கள் செய்து கொண்டிருப்பதைப் பற்றி இறைவன் பாராமுகமாக இருக்கின்றான் என்று நபியே நிச்சயமாக நீர் எண்ண வேண்டாம் அவர்களுக்குத் (தண்டனையை) தாமதப்படுத்துவதெல்லாம், கண்கள் விறைத்துப் பார்த்துக் கொண்டேயிருக்கும் (அந்த மறுமை) நாளுக்காகத்தான். 14.42

**ஏ.எச்.ஏ. ஹுஸைன்**

உங்கள் மகள் உலகறிய இவ்வாறு மரணத்தைச் சந்தித்ததன் மூலம் என்னென்ன மாற்றங்கள், நலவுகள் ஏற்படப் போகின்றதோ என்பதை இறைவன் மாத்திரமே அறிவான். உங்கள் மகள் றிசானா விடுதலையாகி வந்திருந்தாலும் என்றோ ஒரு நாள் மரணத்தைச் சந்தித்தே இருப்பார். ஆனால் அதனை யாரும் கண்டு கொண்டிருக்கமாட்டார்கள். எனினும் இப்போது முழு உலகத்திலுமுள்ள இரக்கமுள்ளவர்களும் உங்கள் மகளுக்காகப் பிரார்த்திக்கின்றார்கள். இது ஒரு பெரும் பாக்கியம்.

பொதுவாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு வரும் பணிப்பெண்கள் உடல், உள ரீதியாகவும் பாலியல் ரீதியாகவும் பல வகையான துன்பங்களுக்கு ஆளாகின்றார்கள். எனவே இந்த நிகழ்வின் மூலம் பெற்றோர்கள், கணவன்மார்கள் உட்பட அனைவரும் பாடம் கற்றுக்கொண்டு தமது பொறுப்பிலுள்ள பெண்களை வெளிநாடுகளுக்கு வேலைக்கு அனுப்புவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும்." என்று உருக்கமான வேண்டுகோள் ஒன்றை விடுத்திருந்தார் றிசானாவை கடைசியாக உயிருடன் கண்ட மௌலவி ஏ.ஜே.எம். மக்தூம் அவர்கள்.

*(நன்றி லங்கா முஸ்லிம்)* (தொடரும்...)

# காதிலை பூ

கந்தசாமி




**வணக்கமுங்கோ! யாழ்ப்பாணத்தில சகோதர பத்திரிகை விநியோகஸ்தர் மீதான தாக்குதலும், பத்திரிகை எரிப்பும் இடம்பெற்றதை அறிந்து மிகவும் மனவேதனையாக இருக்குதுங்கோ.**

யாழ்ப்பாணத்தில தேசியம் பேசுற பத்திரிகைகள் எப்புடிச் செயற்படுகின்றன. யாழ். மக்களுக்கு எத்தகைய விஷத்தை ஊட்டிக் கொண்டிருக்கின்றன என்ப தெல்லாம் ஜீரணிக்க சிரமமாக இருக்கிற விஷயம்தானுங்கோ. யாழ்ப்பாண மக்களுக்கு ஆபத்தையும், அழிவுகளையும் உணர்ச்சியின் பெயரால் ஏற்படுத்திக் கொடுத்தது உந்தப் பத்திரிகைகள் தானுங்கோ.

சில நேரங்களில அந்தப் பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுக்கிற செய்திகளை பார்க்கேக்க கோபம் வரத்தானுங்கோ செய்யும். ஏன் எண்டாலுங்கோ. அந்த செய்தியில உண்மையே இருக்காது. இல்லாவிட்டால் ஏதோ ஒரு அநாமதேய இணையத்தளம் விஷமத்தனமாக வெளியிட்ட செய்தியாக அது இருக்குமுங்கோ. அதை எடுத்து யாழ்ப்பாண மக்களின் தமிழ் தேசிய உணர்வுகளுக்கும். தனி ஆட்சி அதிகார பிரசாரங்களுக்கும் தீனி போடுகின்றவகையில் உருட்டிப் பிரட்டி செய்தியை பிரசுரித்து விடுவார்கள்.

வலிகாமம் காணிப்பிரச்சனையையும். அமெரிக்கா அடுத்த மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப் போவதாக எதிர்பார்க்கப்படும் பிரேரணையையும் சுத்திச் சுத்தியே கடந்த ஒரு மாதமாக அந்தப் பத்திரிகைள் தலைப்புச் செய்தி எழுதிக் கொண்டிருக்கின்றன என்றால் மிகுதியை நீங்களே யூகித்துக் கொள்ளுங்கோவன்.

எண்டாலும் அதுக்காகவெல்லாம் ஊடகங்களுக்கு எதிராக தாக்குதல் நடத்துவதையும், பத்திரிகைகளை எரிப்பதற்கும் எவருக்கும் அதிகாரம் இல்லையுங்கோ. முரசின் அனுபவத்திலிருந்து பார்த்தால் இவ்வாறான தாக்குதல்கள் சில சலசலப்பை ஏற்படுத்தியிருக்குமே தவிர ஊடக வலிமையை ஒரு போதும் குறைத்து விடுவதில்லையுங்கோ.

மாறாக, தாக்குதலை எதிர்கொள்ளுகின்ற ஊடகமானது முன்னரை விடவும் உறுதியாகவே செயல்படும். எனவே கருத்துக்கள் மீதான கசப்புணர்வுகளுக்காக ஊடகங்களைத் தாக்குவதும், பத்திரிகைகளை எரிப்பதும் நியாயமில்லையுங்கோ. அவ்வாறான சம்பவங்கள் கடுமையாக கண்டிக்கப்பட வேண்டியதுங்கோ.

மக்களின் கருத்தறியும் உரிமையை தடுக்கின்ற இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் மீண்டும் அரங்கேற இடமளிக்காதபடி உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது அவசியமுங்கோ. பத்திரிகையை எரிப்பதாலோ, தாக்குவதாலோ அது தாங்கிவரும் கருத்தை ஒருபோதும் மௌனிக்கச் செய்யமுடியாது.

பத்திரிகை தாங்கிவரும் கருத்துக்கு எதிராக இரும்புக்கம்பிகளைத் தூக்குவதும், மண்எண்ணையும், தீப்பெட்டியுமாக துரத்துவதும், ஜனாதிபதி எதிர்பார்க்கின்ற நல்லிணக்கத்துக்கு விரோதமானதாகவே அமையுமுங்கோ.

ஜனாதிபதி நல்லிணக்கம் பற்றியும், அமைதியான வாழ்வு பற்றியும் அடிக்கடி கூறினாலும், சில தீய சக்திகள் அதற்கு எதிரானதும், பங்கம் ஏற்படுத்தக் கூடியதுமான காரியங்களைச் செய்து கொண்டிருப்பது துரதிர்ஷ்டமாகும். எனவே இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் நடைபெறாமலிருக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமுங்கோ.

மக்களுக்கு பொய்யையும், தவறான வழி காட்டலையும் செய்கின்ற ஊடகங்களின் சாயம் ஒரு நாள் வெளுக்கும். அப்போது மக்களே தம்மை ஏமாற்றிய ஊடகத்துக்கும், அதன் உரிமையாளருக்கும் உரிய தண்டனையை வழங்குவார்கள். பாதிக்கப்பட்ட மக்களே தண்டனயை வழங்கும்போது அது எரிப்பதை விடவும், தாக்குவதை விடவும் வலி நிறைந்ததாக நிச்சயம் இருக்குமுங்கோ.

ஆகையால் ஊடகங்கள் மீது தாக்குவதையும், ஊடகங்களை எரிப்பதையும், ஊடகவியலாளர்களை அச்சுறுத்துவதையும் யாரும் எதிர்ப்புக்கான ஒரு வழிமுறையாக கையாள வேண்டாம். அது மனித நாகரிகமான முடிவல்ல. அப்படி செய்வதானது நாகரிகமான மனித குலத்துக்கு அவமானமாகுமுங்கோ.

என்னாங்கோ நான் சொல்லுறது சரியோ, பிழையோ சொல்லுங்கோவன்.

**யாவும் கலப்படமற்ற பொய்**

1000 1000 1000 1000 1000 1000 1000 1000 1000 1000 1000 1000 1000 1000 1000

# உலகை வியக்க வைததவர்கள்

## பேசும் புள்ளிகளை உருவாக்கியவர்




1837 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 4 ஆம் திகதி தம் கல்லூரி ஹோலில், தன் இயந்திரம் வேலை செய்வதைக் கூடியிருந்த மாணவர், ஆசிரியர்களுக்கு இயக்கிக் காட்டினார். தங்கள் இயந்திரத்தினால் செய்திகளை விரைவில் அனுப்பும் ஒரு சாதனத்தை உருவாக்கி விடலாம் என்ற நம்பிக்கையை வளர்ந்தது மோர்ஸுக்கும் அவர் நண்பருக்கும்.

சங்கேதக் குறி ஒலி அலைகளை மூன்று மைல் தூரத்துக்கு அனுப்ப முடிந்த நிலையில், 1843 ஆம் ஆண்டு மோர்ஸும் வைலும் தங்கள் கண்டுபிடிப்போடு வோஷிங்டனுக்குப் பயணமானார்கள்.

"காங்கிரஸ் (அரசாங்கம்) முப்பதினாயிரம் டாலர்கள் நமக்கு வழங்குமானால், நாம் வாஷிங்டனையும் பால்டிமோரையும் தந்தியால் இணைக்கலாம், நாற்பத்தி நான்கு மைல்கள்." இந்தக் கனவுகளோடு தலைநகருக்கு வந்து சேர்ந்தார்கள். ஆனால் மோர்ஸின் தேவையைக் காங்கிரஸ் அங்கீகரிக்க வேண்டுமே?

மோர்ஸின் திட்டம் பற்றியும் அவரது தேவை பற்றியும் காங்கிரஸில் விவாதிக்கப்பட்டது. தந்தியின் பெருமையையும் பயனையும் அறியாத மெம்பர்கள்,கேலியும் கிண்டலுமாக அதைத் தாக்கிப் பேசினார்கள். அமெரிக்கத் தபால் இலாகாவும் மோர்ஸ் திட்டத்துக்குக் காங்கிரஸ் உதவுவதை விரும்பவில்லை. லாபகரமாக இயங்கி வரும் தங்கள் எக்ஸ்பிறஸ் மெயில் சர்வீஸ் பாதிக்கப்படும் என்று பயந்தனர். காங்கிரஸ் முன், தமது கட்சியை மோர்ஸே விளக்கி வாதாடினார்.

# இந்தவாரம் உங்கள் பலன்

(14.02.2013 தொடக்கம் 20.02.2013 வரை)

## மேடம்

கணவன் மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். தீராத நாட்பட்ட நோய்கள் தீருவதற்காக புதிய மருத்துவர்களை நாடுவது நல்லது. காரணமற்ற மனசஞ்சலங்கள் வர இருப்பதால் புதிய நண்பர்களின் சேர்க்கையைத் தவிர்ப்பது உகந்ததாகும். வேற்று மதத்தவர்களால் எதிர்பார்த்த ஆதாயங்கள் கிடைக்க இன்னும் சற்று காலதாமதம் ஆகலாம். வீடு வாகனங்களைப் பழுதுபார்ப்பதன் மூலமாகப் பொருட்செலவுகள் உண்டாகலாம். உடம்பில் வாயு மற்றும் வயிற்றில் உபாதைகள் வந்து போகலாம். நீண்ட தூரப் பயணங்களை மேற் கொள்வீர்கள். புதிய கடன் வாங்கிப் பழைய கடன்களை அடைப்பீர்கள்.

## இடபம்

விவசாயம் செய்பவர்களுக்கு சுமாரான பலன்கள் கிடைக்கும் காலமாகும். வேண்டாத விசயங்களில் தலையிட்டு வீண் சிக்கலில் மாட்டிக் கொள்ள வேண்டாம். பழைய வாகனங்களை விற்றுப் புதிய வாகனங்களை வாங்குவதற்காக எதிர் பார்த்த வங்கிக் கடன்கள் கை வந்து சேரும். வங்கிகளில் இருந்து நீண்ட காலமாக எதிர் பார்த்து இருந்து கடன் உதவித் தொகைகள் நண்பர்களின் உதவியால் கிடைக்கும். உற்றார் மற்றும் உறவினர்களின் திடீர் வரவுகளால் எதிர்பாராத பொருட் செலவுகளும் மன நிம்மதிக் குறைவுகளும் ஏற்படலாம். விபரீதமான எண்ணங்களைக் கை விட்டுக் காரியத்தில் கவனமாய் இருப்பது நல்லது.

## மிதுனம்

காதல் சம்பந்தமான விசயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லதாகும். படித்த வேலை இல்லாதவர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்க வாய்ப்பு உள்ள காலமாகும்.காதல் விசயங்களில் எதிர் பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரும். விவசாயம் செய்பவர்கள் புதியமுறை விவசாயங்களின் மூலமாக நல்ல லாபம் பெறுவார்கள். புதிய ஆடை மற்றும் அணிகலன்கள் வாங்குவதைச் சற்று தள்ளிப்போடுதல் நல்லது. திருட்டுப்போன பொருட்கள் நண்பர்களின் உதவியால் திரும்ப கிடைக்கும்.

## கடகம்

தந்தை, மகன் உறவுகளில் இருந்து வந்துள்ள பிரச்சினைகள் குறைந்த ஒற்றுமை உண்டாகும். விவசாயம் செய்பவர்களுக்கு சுமாரான நற்பலனையே செய்யும். மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்களைக் கடன் கொடுத்து ஏமாற்றம் அடைய வேண்டாம். புதிய ஆடைகள் மற்றும் அணிகலன்களை வாங்குவதற்கு வாய்ப்பு உள்ள காலமாகும். புதிய நண்பர்களின் சேர்க்கையை தவிர்த்தல் நல்லது. பழுதுபட்ட பழைய வீடு மற்றும் வாகனங்களைப் பழுது பார்ப்பதற்காக பொருட் செலவுகள் வந்து சேரும்.

## சிங்கம்

கணவன் மனைவிக்குள் காரணமற்ற மனக்கசப்புகள் வந்து போகும். பிரிந்துபோன உறவுகளுடன் திரும்பவும் தொடர்புகள் ஏற்படக் கூடிய காலமாகும். சகோதர சகோதரிகளின் சுபகாரியங்களுக்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். பொருளாதாரத்தில் சற்று முன்னேற்றமான சூழ்நிலை காணப்படும். தாயின் உடல் நிலையில் வெகு நாட்களாக இருந்து வந்துள்ள உடல் நிலை பாதிப்புகள் குறைந்து காணப்படும். நண்பர்களால் வீண் பிரச்சினைகள் வர இருப்பதால் கவனமுடன் பேசிப் பழகுதல் நல்லதாகும்.

## கன்னி

நண்பர்களின் வீட்டு சுப காரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக நீண்ட தூரப் பயணங்களை மேற் கொண்டு மன மகிழ்ச்சி அடைவீர்கள். யாத்திரையில் எச்சரிக்கையுடன் பயணம் செய்வது நல்லது. செய்யாத குற்றங்களுக்காக வீண் பழிச் சொல்லுக்கு ஆளாக வேண்டி வரும் என்பதால், புதிய தொடர்புகளை தவிர்த்தல் நல்லது. காதல் சம்பந்தமான விசயங்களில் உறவினர்களின் மூலமான நல்ல செய்திகள் வந்து சேரும். விட்டுப்போன பழைய உறவுகளில் இருந்து வந்த மனக் கசப்புகள் தீர்ந்து நல்ல சூழ்நிலை உருவாகும்.

## துலாம்

உறவினர்களின் திடீர் வரவால் மன மகிழ்ச்சியும் பொருள் வரவும் உண்டாகும். ஒரு சிலர் பணி செய்யும் இடங்கள் மற்றும் வீடுகளை இட மாற்றம் செய்வீர்கள். சகோதர சகோதரிகளின் தடைப்பட்ட திருமண காரியங்கள் மற்றவர்களின் உதவியால் நிறைவேறும் காலமாகும். வெளிநாடு சென்று வருதல் போன்ற முயற்சிகளில் வெகுகாலமாக எதிர்பார்த்து இருந்த நல்ல தகவல்கள் வந்துசேரும். வெளிநாடு சென்று வருவதற்கான புதிய முயற்சிகளில் வேற்று மதத்தினர்களிடம் இருந்து எதிர்பார்த்த செய்திகள் கிடைப்பதற்கு இன்னும் சற்று காலதாமதம் ஆகலாம். நற்பலன் தரும் வாரமாகும்.

## விருச்சிகம்

மாணவர்களுக்கு புதிய படிப்புகள் சம்பந்தமாக நல்ல தகவல்கள் கிடைக்கும். உடல் நிலையில் சுரம் மற்றும் உஷ்ண சம்பந்தமான உபாதைகள் வந்து போகும். புதிய வாகனங்கள் வாங்குவதற்கான முயற்சிகளைச் சற்று தள்ளிப்போடுதல் நல்லது. கண் காதுகளில் கவனம் தேவை. வங்கிகளில் இருந்து எதிர்பார்த்து வந்த பண உதவித் தொகைகள் கிடைக்கும். திருமண சம்பந்தமான முயற்சிகளை இன்னும் சற்று காலதாமதமாகவே நடத்துவது சிறந்ததாகும். வராத பணம் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. புதிய வீடு மற்றும் நிலபுலன்களை வாங்குவதற்காகப் புதிய கடன்களை வாங்குவீர்கள்.

## தனுசு

குடும்பச் சொத்துக்களில் வெகு கால மாக இருந்து வந்துள்ள பிரச்சினைகள் பெரிய மனிதர்களின் தலையிடுதலால் திரும்பக் கிடைக்கும். மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்களைக் கடன் கொடுத்து ஏமாற்றம் அடைய வேண்டாம். வெளிநாடு சென்று வருதல் போன்ற புதிய முயற்சிகளில் வேற்று மதத்தவரால் ஆதாயமும் நற்செய்திகளும் வந்து சேரும். பொருளாதாரத்தில் இருந்து வந்துள்ள நெருக்கடிகள் மாறி சற்று முன்னேற்றமான சூழ்நிலைகள் காணப்படும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## மகரம்

வேலையாட்களால் எதிர்பார்த்த ஆதாயம் இல்லை. தேவையற்ற மனச் சஞ்சலங்களைத் தவிர்க்கவும். பூர்வீக சம்பந்தமான சொத்துக்களில் இருந்து வந்த பிரச்சினைகள் தீர இன்னும் சற்று கால தாமதம் ஆகலாம். நீண்ட காலமாக திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமண காரியங்கள் நிறைவேறும். உற்றார் மற்றும் உறவினர்களால் எந்த விதமான ஆதாயமும் இல்லை. விடுபட்டுப் போன பழைய வழக்குகள் மீண்டும் தொடர வாய்ப்பு உள்ளது. கோர்ட் சம்பந்தமான வழக்கு விசயங்களில் எதிர்பார்த்த சாதகமான நல்ல தீர்ப்புகள் கிடைக்கும்.

## கும்பம்

வெகு காலமாகப் பிரிந்துபோன கணவன் மனைவி இருவரும் ஒன்று சேரு வார்கள். நீண்ட நாட்களாக கடன் கொடுத்து வராதிருந்த பணம் பொருட்கள் திரும்பக் கை வந்து சேரும். தன்னிடம் பணி செய்யும் அடிமை ஆட்களால் பிரச்சினைகளும் பொருள் இழப்பும் வர இருப்பதால் கவனம் தேவை. காதல் சம்பந்தமான விசயங்களில் எதிர்பார்த்து இருந்த நல்ல செய்திகள் வந்து சேரும். தரகு மற்றும் கமிசன் தொழிற் செய்வோர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் செயற்படுவது நல்லதாகும்.

## மீனம்


குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான முயற்சிகளைச் சற்று தள்ளிப் போடவும். வெளிநாட்டில் வசிப்வர்கள் தாய் நாடு சென்று திரும்பி வரக் கூடிய காலமாகும். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் கவனமாகப் பேசப் பழகுவதால் வர இருக்கும் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம். ஒரு சிலருக்கு வீடு மற்றும் பணி இடமாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொதுத் தொண்டுகள் மற்றும் அநாதை இல்லங்களை நடத்துபவர்களுக்கு நற்பெயரும் புகழும் உண்டாகும்.

## சேவை...

தென் அமெரிக்க நாடான பொலிவியா இயற்கை வளங்களைக் கொண்டதாகும். பொலிவியாவில் ஏழைகளுக்கு வீடு கட்டிக் கொடுப்பது என்பது அங்கு மிகப்பெரிய பிரச்சினையாக உள்ளது.

இந்நிலையில்இ பொலிவியாவின் சான்டா குரூஸ் நகரில் வசித்து வந்த இன்கிரிட் வாகா டியாஸ் என்ற பெண்இ அதிகரித்து வரும் ஏழ்மையைக் கண்டு வருந்தினார்.

தன்னைச் சுற்றியுள்ள ஏழை மக்கள் வீடில்லாமல் கஷ்டப்படுவதை உணர்ந்த அவர்இ அவர்களுக்கு குறைந்த செலவில் வீடுகளை கட்டித்தர விரும்பினார். அப்போதுஇ வீணாக தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களை உபயோகப்படுத்தி வீடு கட்ட முடிவு செய்தார். அதன்படிஇ காலி பிளாஸ்டிக் பாட்டில்களில் மணல் போன்றவற்றைக் கொண்டு நிரப்பி அதனை செங்கல்லாகப் பயன்படுத்தும் முறையைக் கண்டுபிடித்தார். அவற்றைக் கொண்டு இதுவரை 10 வீடுகளை கட்டிக் கொடுத்துள்ளார்.





## விநோத மனிதன்

உலகில் மனிதன் எத்தனையோ புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கியபோதும் மனிதனை கடவுளால் மட்டுமே படைக்க முடியும் என்ற நியதியையும் மாற்றி, செயற்கை மனிதனையும் தயாரித்து சாதனை படைத்து இருக்கிறார்கள்.

பிரிட்டனில் உள்ள 18 நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழக நிபுணர்கள் இணைந்து செயற்கை மனிதனை படைத்துள்ளனர்.

ரத்தம், சிறுநீரகங்கள், கணையம், கல்லீரல, கை, கால், கண்கள் போன்றவை அனைத்தும் செயற்கை முறையில் உருவாக்கப்பட்டது.

கண்கள், இதயம், நுரையீரல்கள் போன்ற உறுப்புகள் கணனி சிப்களுடன் இணைக்கப்பட்டு இதன்மூலம் அவை இயக்கப்படுகின்றன.

இந்த செயற்கை மனிதனை உருவாக்க ரூ.5.5 கோடி செலவிடப்பட்டுள்ளது. இந்த செயற்கை மனிதன் லண்டனில் உள்ள அறிவியல் அருங்காட்சியத்தில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டு இருக்கிறான்.





## செவிலித்தாய்...

பாம்பைக் கண்டால் படையே நடுங்கும் என்று கூறுவார்கள். ஆனால் சீனாவிலுள்ள டோங்குயன் என்ற ஊரில் ஒருவர் தன்னுடைய 13 வயது மகன் அஸ்ஹி லியூவை பாதுகாக்க மலைப்பாம்பை வளர்த்து வருகிறார். இந்த பாம்பு உருவத்தில் சிறிது என நினைத்துவிடாதீர்கள். அது 15 அடி நீளம் கொண்ட ராட்சத பாம்பு ஆகும். சிறுவனின் பெற்றோர் வேலை நிமித்தமாக அடிக்கடி வெளியே செல்ல வேண்டியிருந்தது. அவனை வீட்டில் தனியாக விட்டு செல்ல முடியாததால் அவன் 6 வயதாக இருக்கும் போது தந்தை மலைப்பாம்பு முட்டையை வாங்கி வந்து பொறிக்க செய்தார். அது குட்டி பருவத்தில் இருந்தே சிறுவன் அதோடு நெருங்கி பழகி நண்பனாகிவிட்டான். தற்போது சிறுவனை பாதுகாக்கும் செவிலித்தாய போல் இந்த மலைப்பாம்பு ஆகிவிட்டது. பெற்றோர் வெளியே சென்றதும் அவன் பாம்பின் அருகில் தலையணையை போட்டு படுத்துக் கொள்வான். ஒரே அறையில் தங்கி விளையாடி மகிழ்கிறார்கள்.



## விநோதக் குழந்தை

கலிபோர்னியாவைச் சேர்ந்த ஸ்டான்லி தார்ன்டன் எனும் 30 வயதான இளைஞர் இன்னும் குழந்தையாகவே வாழ்ந்து வருகிறார்.


உலகில் வாழும் மனிதர்கள் அனைவரும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை என்பதற்கு இவரே உதாரணம். தனது 30 வயதில இளைஞர்களின் தோற்றத்தைக் கொண்டு குழந்தைகளின் பழக்கவழக்கங்களோடு வாழ்ந்து வருகிறார் இந்த விநோத மனிதர்.







## பென் ஸ்கானர்



புதிதாக அறிமுகமாகும் பேனா அளவிலான ஸ்கானர் அசுர வளர்ச்சி கண்டுவரும் தொழில்நுட்பத்தினால் இலத்திரனியல் சாதனங்களின் அளவு குறுகி வருவதுடன் அவற்றின் வினைத்திறன் களும் அதிகரிக்கச் செய்யப்பட்டு வருகின்றன. இதன் அடிப்படையில் தற்போது பேனா அளவே ஆன ஸ்கானர் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 5 மெகாபிக்சல் சென்சாரினைக் கொண்ட இந்த ஸ்கானர் ஆனது 2048 ஒ 1536 "ைநட சுநளழடரவழைெ - இல் புத்தகங்கள், பத்திரிக்கைகள் உள்ள தகவல்களை நிழற்படமாக பிரதி செய்வதுடன் அவற்றினை சேமிப்பதற்காக 1 GB சேமிப்பகத்தினையும் உள்ளடக்கியுள்ளது. மேலும் 125 டொலர்கள் பெறுமதியான இச்சாதனத்தில் ரெக்கார்டிங் வசதியும் காணப்படுகின்றமை விசேட அம்சமாகும்.



1000 ஆவது இதழில் தடம் பதித்துதலை நிமிர்ந்து நிற்கும் முரசிற்கு வாசகர்கள் தரும் ஆதரவும், அரவணைப்பும் உள்ளத்தை நெகிழ வைக்கிறது. வந்து குவிகின்ற கடிதங்களும், தொலைபேசிகளும், அப்பப்பா ஏராளம் ஏராளம். அதுமட்டுமா ஆயிரமாவது சிறப்பிதழைத் தாங்கிய ஊர்தி யாழ்.நகரை வந்தபோது, அதை வாங்குவதற்கு வாசகர்கள் காட்டிய வேகம் அசர வைத்தது.